2911

T.N.L.A. Debates

Official Report

Vol 19 No 2

26th March 1986

D1
V211,31 N86
N86.19-2
136457

வெளியீடு 1-10-198 ] [Issued 1-10-1986

964/86

2911

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 26, 1986 - தொகுதி 19 எண் 2

Wednesday, 26th March 1986 - Volume 19 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

V211,31 N86
N86.19-2
136457
-600 008.

# உள்ளடக்கம்

26—3—1986


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 5. | வினாக்கள்—விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 191..241 |
| 2. | தகவல் கோரல் | |
| | (அ) உள்ளாட்சி நிறுவனங்களின் துணைத் தலைவர்கள் தேர்தல் குறித்து | 241—242 |
| | (ஆ) நீக்கம் செய்யப்பெற்ற பகுதிகள் குறித்து | 242 |
| | (இ) மதுபான விற்பனைக்கான உரிமம் வழங்கல் | 242—243 |
| 3. | கவன ஈர்ப்புகள் | |
| | (அ) சென்னை மாநகராட்சி தெரு மின் விளக்குகள் குறித்து | 243—2 |
| | (ஆ) கொல்லாபுரம்—கடகம் சாலையில் வஞ்சியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் | 246—247 |
| 4. | அறிக்கைகள் அளித்தல் | |
| | பொதுக் கணக்குக் குழு | 247—248 |
| 5. | அறிவிப்புகள் | |
| | (அ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1986–87 (ஆ.இ.) | 248 |
| | (ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ) | 260 |
| | (இ) கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் 1985–86 (ஆ.இ.) | 261 |
| | (ஈ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.) | 276 |
| 6. | முன்பண மானியக் கோரிக்கைகள் 1986–87 — வாக்கெடுப்பு | 248—260 |
| 7. | அரசினர் சட்ட முன்வடிவுகள் : | |
| | (அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு 1986 | 261 |
| | (ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு 1986 | 276 |

பக்கங்கள்

8. இறுதித் துணை நிதி அறிக்கை 1985–86 — வாக்கெடுப்பு 262..275

9. வரவு— செலவுத் திட்டம் 1986–87 பொது விவாதம்–தொடர்ச்சி. 276—386

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 276—291
திரு. பொ. அன்பழகன் 292—298
* திரு. பரிதி இளம் வழுதி 298—304, 308—309, 311—313
* திரு. எஸ். பி. மணவாளன் 313—318
* திரு. எம். மணி–இராசரத்தினம் 319—325
திரு. ஆர். செங்காளியப்பன் 326—332
* திரு. கு. வடிவேல் 332—339
டாக்டர் க. நல்லமுத்து 339—341, 349—353
திரு. ஆ. பிரேம்குமார் 353—362
திரு. ஜே. முகம்மதுகனி 363—369
திரு. கே. முத்துவேல் 369—375
திரு. பூ. மு. நரசிம்மன் 375—379
திரு. எம். சண்முகையா பாண்டியன் 379—383
திரு. டி. எம். வெங்கடாசலம் 383—386

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 387—388

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1986, மார்ச் 26, புதன்கிழமை**

**பங்குனி 12, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

குடிப் பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

### (1) வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தன்னிறைவுத் திட்ட சாலைகள் பராமரிப்பு.

**278—(*வினா எண். 2008) திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள கல் பரத்திய சாலைகளைப் பராமரிக்க என்ன ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது ?

(ஆ) அவற்றை எல்லாம் தார் சாலைகள் ஆக்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள கல் பரத்திய சாலைகளை அந்தந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன.

(ஆ) இல்லை.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகள் இன்றைக்கு பல இடங்களில் பராமரிக்கப்படாமல் இருந்து வருகின்றன. நிதிப் பற்றாக்குறை காரணமாக ஊராட்சி மன்றங்கள் அவைகளை பராமரிக்க முடியாத சூழ்நிலையில் இருந்து வருகின்றன. ஆகவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகளை நெடுஞ்சாலைத் துறையே எடுத்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக போடப்பட்ட சாலைகளும் சரி, ரூரல் ரோட்ஸ் என்கிற ஊரக சாலைகள் திட்டத்தில் போடப்பட்ட சாலைகளும் சரி 1980-81-க்குப் பிறகு இதுவரை பாமரிக்கப்படாமல் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலிருந்தாவது இவற்றை எல்லாம் பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் தான் அவற்றை பராமரிக்கின்றன என்று நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தன்னிறைவு பெற்றவர்கள், தன்னிறைவு பெற்றுச் சென்று விட்டார்கள். ஆனால் தன்னிறைவு பெறாது நிற்கின்ற சாலைகள் பூர்த்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவு பெற்றிருக்கிற சாலைகளை பராமரிக்கின்ற வேலையே அரசுக்கு பெரிய பாரமாக இருக்கின்றன. இப்போது ஊராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் தலைவர்கள் தேர்ந்து எடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவற்றை பராமரிக்கின்ற பொறுப்பு





ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி மன்றங்களின் தலைவர் களுக்கும் பெருந் தலைவர்களுக்கும் இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியங்களும் மன்றங்களும்தான் அவற்றைப் பராமரிக்க வேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் தன்னிறைவுத் திட்டத் திற்காக 216 கோடி ரூபாய் செலவழித்திருப்பதாக அறிக்கை கூட இருக்கிறது. இவ்வளவு பணம் செலவு செய்து ரோடுகள் போட்டிருந்தும்கூட, உண்மையிலேயே அந்த ரோடுகள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்டதா அல்லது போடப்படாததா என்றே புரியாத அளவிற்கு அழிக்கப் பட்டிருக்கிறது. இவற்றைப் பராமரிக்க யூனியன்களில் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே இதற்கென்று தனியாக பணம் ஒதுக்கி பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 210 கோடி ரூபாயும் சாலைகளுக்காகச் செலவழிக்கப் பட்டதாகக் கருதக் கூடாது. சிறு இணைப்புச் சாலைகளுக்காக மட்டும் 60.76 கோடியும், சிறு பாலங்களுக்காக 38.92 கோடியும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகள் பராமரிக்கப்பட வில்லை என்பது உண்மைதான். அவற்றை பராமரிப்பதற்கான பொறுப்பு ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும்தான் உண்டு. நெடுஞ்சாலைத் துறை அவற்றை ஏற்று பராமரிக்கலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று முன்பே நான் சொன்னேன்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்டுள்ள சாலைகளை இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் தாம் பராமரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த மன்றங்களில் போதிய நிதியில்லாத காரணத்தால், இப்போதாகிலும் அதற்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கி அந்தச் சாலைகளைப் பராமரிக்க ஏற்பாடு செய்வார்களா என்றும், அந்தச்

சாலைகளிலே இன்றைக்கு நகரப் பேருந்துகள் செல்லுகின்ற காரணத்தால், அந்தக் குறிப்பிட்ட பேருந்துகள் செல்லுகின்ற சாலைகளை எல்லாம் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழேயே தார் சாலைகளாக மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் ஏற்கெனவே தார் சாலைகளாக அமைக்கப்பட்டவைகள் தாம். அவைகள் தாம் தன்னிறைவுத் திட்டத்தில் முடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை மேற்கொண்டும் பராமரிப்பதற்கு தன்னிறைவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. ஏற்கெனவே நிதி ஒதுக்கியதைத் தவிர மேற்கொண்டு நிதி இதற்காக ஒதுக்குவதாகவும் இல்லை. இப்போது புதிதாக வந்திருக்கிற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தாம் அதற்காக செலவு செய்ய வேண்டும்.

**திரு. அ. வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் வேலைகள் எடுத்துக் கொள்கிறபோது அரசு அதிகாரிகள் அங்கே குவாரிகளை அப்ரூவல் செய்து கொடுக்காமல் இருந்ததால் ஒப்பந்தக்காரர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக அந்தப் பணிகள் தன்னிறைவுத் திட்டத்தில் விடுபட்டு முழுமையாக செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அப்படி விடுபட்டிருக்கிற பணிகளை முடிக்க ஒன்றியங்களுக்கு சிறப்பு நிதி கொடுத்து வேலைகளைத் துவங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் ஏறக்குறைய 210 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு அந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு இப்போது எந்தத் திட்டமும் இல்லை.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் கிராமப்புற சாலைகளை ஒழுங்குபடுத்துவது, கிராமங்களுக்கு இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பது, மருந்தகங்கள் அமைப்பது போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்தி



வந்தார்கள். இருந்தாலும் இன்னும் சில கிராமங்களில் அந்த வசதிகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இரண்டாவது கட்டமாக தன்னிறைவுத் திட்டம் கொண்டு வருவது அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அப்படி எந்தத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் கிராமப்புற சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தச் சாலைகளுக்கு தார் போடப்படவில்லையென்றாலும், அந்தச் சாலைகளின் ஓரங்களில் முள்செடிகள் அதிகமாக வளர்ந்திருக்கின்றன. அவைகளை அகற்றி சாலைகள் செப்பனிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்தப் பணி ஊராட்சி ஒன்றியங்களாலும், ஊராட்சி மன்றங்களாலும் செய்ய வேண்டியதாகும்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரோடுகள் போட்டிருக்கிறார்கள். சில ஊர்களுக்கு ரோடுகள் போடப்படவில்லை. அப்படிப்பட்ட சாலை வசதிகள் இல்லாத கிராமங்களுக்கு சாலைகள் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே. தன்னிறைவுத் திட்டம் என்பது 210 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்டு முடிந்துவிட்டது. மேற்கொண்டு நிதி ஒதுக்கினாலொழிய திட்டத்தைத் துவக்க முடியாது. அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று தான் தெரிவித்தேன்.

### மயிலாடுதுறையில் தன்னிறைவுத் திட்டம்.

279 — (* வினா எண். 3624) **திரு. மு. தங்கமணி : மாண்புமிகு** உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை நகராட்சியில் நடப்பு ஆண்டில் 'தன்னிறைவுத் திட்டம்' செயல்படுத்தப்படும் திட்டம் உள்ளதா?

(ஆ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தில் கீழ்க் கண்டுள்ள வேலைகள் மேற் கொள்ளப்படவுள்ளன:—

(1) குடிநீர் வழங்குதல்.

(2) சாலை வேலைகள்.

(3) சிறு பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல்.

(4) ஆதி திராவிடர் குடியிருப்புக்களுக்கும், இடுகாடுகளுக்கும் பாதை அமைத்தல்.

(5) பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.

(6) பொதுச் சுகாதாரம் கழிப்பறைகள் கட்டுதல்.

(7) துப்புரவுப்பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்.

இதற்காக ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கோவையில் பொது இடங்களில் வாகனங்கள் நிறுத்தக் கட்டணம்.**

280 (* வினா எண் 5554) **திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சி எல்லைக்குள் பொது இடங்களில் நிறுத்தப்படுகின்ற சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ): கோவை மாநகராட்சி எல்லைக்குள், கீழ்க்கண்ட மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் நிறுத்தப்படுகின்ற சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்களுக்கு மட்டும் கட்டணங்கள் நிர்ணயித்து குத்தகைக்காரர்களால் வசூலிக்கப்பட்டு வருகிறது:—

1. தியாகி குமரன் மார்க்கெட்
2. மத்தியப் பேருந்து நிலையம்
3. வ. உ. சி. பூங்கா
4. ரத்தினசபாபதிபுரம் கலையரங்கம்



மேற்கண்ட நான்கு குத்தகை இடங்களில் வ. உ. சி. பூங்கா வாகனங்கள் நிறுத்துமிடம் தவிர, மற்ற இடங்களில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. சைக்கிள் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 0.20 |
| 2. ஸ்கூட்டர் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 0.50 |
| 3. மோட்டார் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 1.00 |

வ.உ.சி. பூங்கா வாகனங்கள் நிறுத்துமிடத்தில் மட்டும் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| | |
|---|---|
| 1. சைக்கிள் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 0.10. |
| 2. ஸ்கூட்டர் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 0.25. |
| 3. மோட்டார் 1-க்கு ஒரு நாளைக்கு | ரூ. 1.00. |

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது ஒன்றிரெண்டு இடங்கள்
தான். கோவை மாநகரத்திற்குள் இன்றைக்கு ஆட்டோ
ரிக்ஷாக்கள் நிறுத்துவதற்கென்று நிர்ணயிக்கப்பட்ட ஸ்டாண்டு
கிடையாது. டாக்சிக்கு ஒரு இடத்தில் ஸ்டாண்டு இருக்கிறது.
மற்ற பல இடங்களில் இல்லாமல் இருக்கிறது. அதேபோன்று
சைக்கிள்கள் மற்ற போக்குவரத்து வாகனங்களுக்கு பல
இடங்களில் ஸ்டாண்டு இல்லாமல் இருப்பதால் ஜனநடமாட்டம்
அதிகமாக உள்ள இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக
இருக்கிறது. அதுபோன்ற ஸ்டாண்டுகளை அமைத்தால்
மாநகராட்சிக்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.
ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்டு,
மோட்டார் வாகனங்கள் ஸ்டாண்டு, சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர்
ஸ்டாண்டு ஆகியவை அந்த நகரத்திற்குள் மொத்தம் எத்தனை
இடங்களில் நிர்ணயிக்கப்பட வேண்டுமோ அதனை நிர்ணயிக்கப்
படுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அந்தமுறையில் ஏற்பாடு
செய்து மக்களுக்கு வசதி செய்வார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர்
அவர்களே, கோவை மாநகராட்சியில் நெருக்கடியான சில
இடங்களில் எல்லாம் மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் நிறுத்தப்
படுகின்றன என்று தெரிவித்தார்கள். இவைகளுக்கு எல்லாம்

லைசென்ஸ் உரிமம் கொடுத்து நிறுத்துவதற்கு அனுமதித்து விட்டால், அவைகளை அப்புறப்படுத்துவது என்பது முடியாத காரியம். நிரந்தரமான தொல்லைகளை நாம் வரவழைத்துக் கொள்வதாக அமையும். நிறுத்தப்படுகின்ற வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, அவைகளுக்கு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக அவைகளுக்கு எல்லாம் நாம் அனுமதி கொடுத்ததாக ஆகிவிடும். அப்படி இருக்கக்கூடாது. ஒருவேளை இடைஞ்சல் இல்லாத பகுதிகள் அப்படி இருக்குமானால், அவைகளை மாநகராட்சி கவனிக்கும்படியாக ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, சென்னை, மதுரை போன்ற வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் அதிகமான வாகனங்கள் பெருகி வருகின்ற நேரத்தில், மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடைஞ்சலாக இருக்கிற காரணத்தினால், நவீன முறையில் வெளிநாடுகளிலும், நம்முடைய நாட்டின் தலைநகராக உள்ள டெல்லியிலும், பாலிகா பஜார் போன்ற இடங்கள் கட்டப்பட்டுள்ளன. அதாவது பூமிக்கு அடியிலேயும் பூமிக்கு மேலேயும் கட்டப்பட்டுள்ள அந்த இடங்களில் கார்கள் நிறுத்த இடங்கள் கட்டப்பட்டு, அதற்கு வாடகையை வசூல் செய்து, மக்களுக்கு சௌகரியத்தையும். அதேசமயத்தில் அந்தந்த மாநகராட்சிக்கு வருமானத்தையும் பெருக்குவதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அப்படிச் செய்வதற்கு வழியில்லை. காரணம் இருக்கிற சாலைகளிலேயும், பஸ் ஸ்டாண்டிலேயும், மழைக் காலங்களில், தண்ணீர் விழுந்து ஆள் உயரத்திற்கு நின்று விடுகிறது. நாம் பூமிக்கு அடியிலே கொண்டு போய் வைத்தாலும் தண்ணீர் நிச்சயமாக உள்ளே வந்துவிடும். எனவே அவைகளுக்கு அங்கே சாத்தியம் இருக்கிறதா, என்பது தெரியவில்லை. இருந்தாலும் நிதிப் பற்றாக்குறை காரணமாக, அவைகளைக் கொண்டு வர முடியவில்லையே தவிர, வேறு காரணங்கள் ... நிதி நிலைமை சரியானதற்குப் பிறகு, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.



**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது இடங்களில் வாகனங்களை நிறுத்தி வாடகைக் கட்டணம் வசூலிக்கின்றபோது, அதற்குரிய ஆட்களை நியமிக்கும்போது, முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று இதை மாநகராட்சியே வசூலிக்கிறது. இல்லாவிட்டால் குத்தகைக்கு விடுகிறார்கள். தனிப்பட்டவர்கள் யாரையும் வைத்துச் செய்வதில்லை. மாநகராட்சி வசூலிக்கிறது, அல்லது குத்தகைக்கு விடுகிறார்களே தவிர, முன்னாள் இராணுவத்தினரையோ, மற்றவர்களையோ, தனியார்களையோ நியமிப்பதாக உத்தேசம் இல்லை.

**திரு. டி. ஆர். வேங்கடராமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே குத்தகைதாரர்கள் மூலமாக அந்தக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சென்னை நகரத்திலே இதை மாஜி ராணுவத்தினர் மூலமாக வசூலிக்கப்படுகிறது. எனவே சென்னையிலும் இதை குத்தகைதாரர்கள் மூலமாக வசூலிக்கும் திட்டம் உள்ளதா? குத்தகைதாரர்கள் மூலமாக வசூலிக்கும்போது, அதிகமாக கட்டணம் வசூலிப்பதாக புகார்கள் வருகின்றன. அதைத் தடுப்பதற்காக அரசு என்ன நடவடிக்கையை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மாஜி இராணுவத்தினரை வைத்து வசூலித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட எந்தப் புகாரும் இதுவரையிலும் அரசுக்கு வரவில்லை. வந்தால் அதைப் பற்றி கவனிக்கலாம்.

### சென்னை சாலைகளில் சுரங்கப் பாதைகள்.

281 (*வினா எண். 5653) **திருமதி பா. வள்ர்மதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் தற்போது எத்தனை இடங்களில் வரையறுக்கப்பட்ட சுரங்கப் பாதைகள் கட்ட அரசு திட்டம் தயாரித்துள்ளது?

(ஆ) அவைகள் எந்த நிலையில் உள்ளன?

[1986 மார்ச் 26

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மூன்று இடங்கள்.

(ஆ) (1) எழும்பூர் கெங்கு ரெட்டி சாலை: பணி நடைபெற்று வருகிறது.

(2) மாம்பலம் மேட்லி சாலை: அரசின் பரிசீலனையில் உள்ளது.

(3) இராயபுரம் மணியக்காரர் சாலை: தென்னக இரயில்வேயின் ஒப்புதல் பெற திட்டத்திற்கான வரை படங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இரயில்வேயின் கருத்தை அறிந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூர் தொகுதியில் உள்ள லஸ் பகுதி மிகவும் நெரிசலான பகுதி. அறுபத்து மூவர் போன்ற சிறப்பான திருவிழாக்கள் எல்லாம் நடைபெறுகின்ற பகுதியாக அது இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் தற்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே ஒரு சுரங்கப் பாதை அமைக்க அடுத்த ஆண்டிலாவது அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதைகள் அமைத்தாலும் அதன் வழியே அறுபத்து மூவர்களும் செல்ல முடியாது. மக்கள் போவதற்கு சுரங்கப் பாதை தேவை என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். இவைகளைப் பற்றி நிதி நிலைமையைப் பொறுத்து நாம் பரிசீலிக்கலாம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதைகள் நடைபெறுகின்ற வேலைகளுக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறதா? அப்படியானால் எவ்வளவு தொகை வழங்குகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான் ஏற்கனவே சொல்லியிருக்கின்ற சைதாப்பேட்டை, ஜோன்ஸ் சாலையை இணைக்கின்ற அந்த மிகப் பெரிய போக்குவரத்து நெரிசலான



1986 மார்ச் 26]

இரயில்வே கிராஸிங் பகுதியில் ஒரு சுரங்கப் பாதை அமைக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அந்தத் திட்டப் பணி இந்தத் திட்டத்தோடு இணையவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நடப்பு நிதியாண்டில் அந்தப் பணியை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், பொது மக்கள் நலன் கருதி, அடுத்த ஆண்டிலாவது அதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டு நலமாக இருக்கும் என்று நம்புகிறேன். அப்போது இதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள சுரங்கப் பாதைகளை ஏழை எளியவர்கள், தொழுநோயாளிகள், பிச்சைக்காரர்கள் குடிசைகளாக இரவு நேரங்களில் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எனவே பகல் நேரங்களில் அந்தச் சுரங்கப் பாதைகளில் நடக்க முடியவில்லை. அதுமட்டுமல்லாமல், அந்த சுரங்கப் பாதைகளில் லைட் எல்லாம் பியூசாகி இருக்கிறது. எனவே இதை எல்லாம் மெயின்டெனன்ஸ் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எங்கெங்கே நடைபெறுகிறது என்பதை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அரசுக்குப் புகார் மூலமாக எழுதித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி எழுதி அனுப்பினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுரங்கப் பாதை என்பது மக்கள் நெரிசலான பகுதியிலே சாலையைக் கடப்பதற்கு அமைக்கப்படுகின்ற ஒன்றாகும். அந்தச் சுரங்கப் பாதை குடும்பம் நடத்தக்கூடிய அளவிலே அமைந்திருப்பதால், மேலை நாடுகளில் மேம்பாலமாகக் கட்டப்படுவது போன்று கட்டினால் செலவு சுருக்கமாக இருக்கும். நிதி பற்றாக்குறையும் ஏற்படாது. எனவே இதுபற்றி, அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
139457

[1986 மார்ச் 26

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டினால் பெரிய வண்டிகள் செல்லும்போது இடைஞ்சலாக இருக்கும். அதற்கு மேல் ஒருவேளை மேம்பாலம் கட்டினால், நடைபாதை, வாகனம் செல்லும் பாதை போன்றவை அமைக்கும் நேரத்தில் அதை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, எல்லா வகையிலும் சுரங்கப் பாதை அமைப்பதுதான் சரியாக இருக்கும் என்று கருதி அரசு அப்படி அமைக்கிறது. யாராவது குடித்தனம் செய்கிறார்கள்; வியாபாரம் செய்கிறார்கள் என்ற புகார்கள் சொல்கிற நேரத்தில் உடனடியாக அவர்கள் மீது மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆங்காங்கு காவலர்கள் போட்டு, இரவு நேரங்களில் சுரங்கப் பாதைகளை பூட்டி வைக்கலாமா என்பது பற்றி கூட அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. த. பழனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் மட்டும்தான் சுரங்கப் பாதைகள் கட்டுவதற்கு திட்டம் இருப்பதாக நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம். பல்வேறு மாவட்ட தலைநகரங்களிலும் இதுபோன்ற நெரிசலான இடங்கள் இருக்கின்றன. அந்த மாவட்ட தலைநகரங்களிலும் இதுபோன்ற சுரங்கப் பாதைகள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சிகள் அத்தகைய முயற்சிகளை எடுக்குமேயானால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் சுரங்கப் பாதைகள் அமைப்பதுபோல மதுரை மாநகராட்சியிலும் சுரங்கப் பாதைகள் அமைக்கும் திட்டம் இருக்கிறதா? அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி கேள்வி வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26]

**வீரவநல்லூர் பஞ்சாயத்தில் குடிநீர் குழாய்கள் அமைத்தல்.**

**282—(*வினா எண். 1451) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் நகர பஞ்சாயத்தைச் சேர்ந்த சர்ச் தெரு, பள்ளிவாசல் தெரு, கிளாக் குளம், கீழத் தெரு, வண்ணார் தெரு, ஆசாரி தெரு, சன்னதித் தெரு, பரந்தை இடக்குடி தெரு, மைலாப்புரம், ரஸ்தாவூர், பாரதி நகர், அரிகேசவ நல்லூர், மற்றும் பிள்ளைக் குளம் பகுதிகளில் வசிக்கும் மக்களிடமிருந்து குடிநீர் குழாய் வைப்பது மற்றும் பராமரிப்பது சம்பந்தமாக மனுக்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) சர்ச் தெரு, கிளாக் குளம், கீழ்த் தெரு, பள்ளிவாசல் தெரு, பள்ளிவாசல் (தெற்கு) தெரு, வண்ணார் தெரு, ஆசாரி தெரு, சன்னதி தெரு, பாரதி நகர் ஆகிய தெருக்களுக்கு குடிநீர் வழங்கு குழாய்கள் பதிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய களப்பணியாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

பரந்தை இடக்குடி தெரு, மைலாபுரம், ரஸ்தாவூர், அரிகேசவநல்லூர், பிள்ளைகுளம் பகுதிகள் வீரவநல்லூர் பேரூராட்சியின் கீழ் வராத காரணத்தால் குடிநீர் குழாய் பதிக்கும் திட்டம் ஆய்வு செய்யப்படவில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வீரவநல்லூர் பேரூராட்சியில் இந்தத் திட்டம் போடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலில் சொன்னார்கள். அந்த திட்டத்தினுடைய மதிப்பீடுகள் எவ்வளவு? அந்தப் பணிகள் எந்தக் கால கட்டத்தில் முடிவடையும் என்ற விவரத்தினை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தங்களுடைய தொகுதி என்று நான் கருதுகிறேன். 31.77 இலட்சம் மதிப்பீட்டில் இதற்கான திட்டத்தை குடிநீர் வடிகால் வாரிய வேளாண்மை இயக்குநர் அரசுக்கு அனுப்பி இருக்கிறார். என்றாலும், அவசரத்தை முன்னிட்டு இப்போதே பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெகு விரைவில் முடிவடையும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீரவநல்லூர் பேரூராட்சி பகுதிக்கு என்று இந்தத் திட்டம் மட்டுமல்லாமல் இதற்கு முன்பு வேறு ஒரு குடிதண்ணீர் திட்டம் இருக்கிறதா? அதனுடைய மதிப்பீடு என்ன? அந்தப் பணிகளும் இத்திட்டத்துடன் சேர்த்து செய்யப் படுகிறதா என்ற விவரத்தினை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே, பேரவைத் தலைவருடைய தொகுதியென்றால் அதை அரசினுடைய செல்லப் பிள்ளையாகக் கருதி பராமரிக்கக் கூடிய ஒன்று. ஆகவே, இதிலே வேகமாக அரசு முயற்சி எடுப்பதில் எந்த விதமான ஆச்சரியமும் இல்லை. ஏற்கனவே ஒரு திட்டம் 18.98 இலட்சத்தில் வீரவநல்லூர் பேரூராட்சிக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய கருத்துக்களில் உங்களுக்கு ஏதாவது கருத்து உடன்பாடு இருக்கிறதா, அல்லது ஆட்சேபணை இருக்கிறதா? அல்லது இதே மாதிரி மற்ற தொகுதிகளையும் செய்யலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை; அதைத்தான் செல்லப் பிள்ளை என்று சொல்லிவிட்டார்களே, அமைச்சர்களே அந்தத் தொகுதியைப் பார்த்துக் கொள்வார்கள்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** தலைவர் அவர்களே, இந்திய அளவிலான சபநாயகர்களுடைய மாநாட்டிலே இந்தத் தீர்மானம் வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தினை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



## கூடலூர் பேரூராட்சி குடிநீர் திட்டம்.

283 — (*வினா எண் 3589) **திரு. கே. உச்சி ; திரு. கு. ரமணி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்க புதிய திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தின் மதிப்பீடு என்ன?

(இ) இத் திட்டம் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 112.11 இலட்சங் களாகும்.

(இ) இத் திட்டம் 1985-86-ம் ஆண்டில் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக கூடலூர் பகுதியில் உள்ள தண்ணீர் தட்டுப்பாட்டினால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் இது. இதனுடைய தண்ணீர் உற்பத்தி ஆகக்கூடிய தலைமடைப் பகுதி ஓவேல் என்ற பிர்லா எஸ்டேட்டில் இருந்து தான் ஆரம்பிக்கிறது. அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்? அதோடு இந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சிக்கல் எதுவும் இந்தத் திட்டத்தில் இல்லை. அது பாண்டியாற்று அணைக் கட்டிலிருந்து எடுக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்படுகிறது. விரிவான வடிவமைப்பும், மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு இருக் கிறது. இது தொடங்கிய 3 ஆண்டு காலத்திற்குள் முடிக்கப்படும்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கூடலூர் ஒரு முனிசிபாலிட்டி போல் இருக்கக்கூடிய ஒரு பெரிய இடம். இந்தத் திட்டம் சீக்கிரத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு

நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் போட்டது எப்போது எத்தனை வருடமாக இந்தத் திட்டம் காத்து இருக்கிறது. அதனுடைய வரைப்படமும் இங்கே இருக்கக்கூடிய அஸிஸ்டெண்ட்டு ஆர்க்கிடெக்சர் ஆபிசில் இன்னும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு இந்தத் திட்டம் இப்போது தான் தொடங்கப்பட்டு இருக்கிறது. இதன் வடிவமைப்புகள், மதிப்பீடுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. தொடங்குவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை. தொடங்கக்கூடிய அளவில்தான் நிலைமை இருக்கிறது.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் கூடலூர் பேரூராட்சியை ஒட்டி உள்ள எத்தனை குக்கிராமங்கள் பயன்பெறும்? இதனால் எவ்வளவு மக்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் மூலமாக 13 உள் கிராமங்கள் பயன் பெறும் வகையில் இருக்கிறது என்று எனக்கு தகவல் தரப்பட்டு இருக்கிறது. இதிலே ஏறத்தாழ 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற இருக்கிறார்கள்.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே புதிதாக தேர்தல் நடந்து கவுன்சில் சேர்மேன் வந்து இருக்கிறார்கள். ஜனங்களிடமிருந்து உடனடியாக தண்ணீர் கிடைக்கவில்லை என்ற கடுமையான ஆட்சேபனை கிளம்பி இருப்பதால் ஏற்கனவே பல கிணறுகள் மூலம் தண்ணீர் சப்ளை செய்துகொண்டு இருந்தது நின்று போய் விட்டது. 3, 4 கிணறுகளில் தண்ணீர் இல்லை. அவைகளை சுத்தம் செய்து—இந்தத் திட்டம் அமலுக்கும் வரும் வரையில்—தண்ணீர் தட்டுப்பாடு வராமல் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 7 திறந்தவெளி கிணறுகள் மூலம் மக்களுக்குத் தேவையான குடிநீர் கொடுக்கப்பட்டு வருகிறது. கிணறுகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் விட்டதாக தகவல் என்னிடம் இல்லை. அப்படி கிணறுகள் வறண்டு போய் இருந்தால் அவற்றைச் சீர்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## தர்மபுரியில் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்.

284—(*வினா எண். 3949) **திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் D.P.A.P திட்டம் எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களில் எடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்த அடிப்படையில் ஊராடசி ஒன்றியங்கள் D.P.A.P. திட்டத்திற்கு தேர்வு செய்யப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) 1985-86 ஆம் ஆண்டில், தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், ஓசூர், கௌமங்கலம், மொரப்பூர், நல்லாம்பள்ளி, ஊத்தங்கரை, பெண்ணாகரம், சூலகிரி, தளி, வேப்பனப்பள்ளி, தர்மபுரி, பாலக்கோடு ஆகிய 12 வட்டாரங்களில் செயற்படுத்தப்படும்.

(ஆ) ஆண்டு சராசரி மழையளவு மற்றும் நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசினால் அமைக்கப்பட்ட சிறப்புப் பணிப் பிரிவின் (Task force) பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசு வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயலாற்றுவதற்கான வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வறட்சிக்கு உட்பட்ட பகுதி என்ற 12 ஒன்றியங்களை அறிவித்தார்கள். அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்னும் பல தாலுக்காக்களில் வறட்சியாக இருந்தும் அங்கே விவசாயிகளிடமிருந்து கடனை வசூல்

செய்கிறார்கள். பருவ மழை இல்லாத காரணத்தால் என்னுடைய பெண்ணாகரம் தொகுதியில் பல ஒன்றியங்களில் இப்போது குடிப்பதற்கே தண்ணீர் பஞ்சமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளை எல்லாம் வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் உதவியோடு பாதி மானியத்தோடு நடைபெறக் கூடிய திட்டம். மாநில அரசு எந்த எந்த பகுதிகளில் வறட்சி நிலவுகிறதோ அந்தப் பகுதிகளை எல்லாம் சீர்படுத்த அந்த மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நிதி உதவியோடு வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் தொடங்கப்படுகிற திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்வார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக, குறிப்பாக தென் மாவட்டங்களில் வறட்சி பெரிதும் பாதிக்கப் பட்டு இருக்கிறது. குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக இருப்பதால் ஊர் மக்கள் குடிபெயர்ந்து போகக் கூடிய நிலைமை இருந்தும் இந்த நேரத்தில் அந்தப் பகுதிகளில் டி.பி.ஏ.பி. திட்டத்தின் கீழ் கொண்டு வந்ததாக எனக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டு நிலவும் கடுமையான வறட்சியை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இந்த டி.பி.ஏ.பி. திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கு உட்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்பது சில விதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு மத்திய அரசு முடிவு செய்து அதற்கான உதவிகளைச் செய்து வருகிறது. நாம் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைக்கிறோம், அவர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு, அதிலே கூட அவர்கள் வைத்திருக்கிற விதிகளுக்கு உட்பட்டே சில பகுதிகளை மட்டுமே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 43 வட்டாரங்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.



*அம்பாசமுத்திரம் தாலுகா பாப்பாக்குடியில் உள்ள நடைபாலம்.*

**86 — (* வினா எண். 1591) திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா பாப்பாக்குடி அருகே உள்ள நடைபாலத்தை மேம்பாலமாக கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மற்றும் (ஆ) விரைவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டும் பணிக்கு ரூ. 22 இலட்சம் செலவு செய்ய அரசாங்கம் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்ததற்காக மிகவும் நன்றி. இது பேரவைத் தலைவர், சபாநாயகர் அவர்களுடைய தொகுதி. அவர்களது தொகுதி பற்றிய கேள்விகள் வரும்போது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானே நன்றி சொல்லி விடுகிறேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தொகுதி பற்றி கேள்வி வரும்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் சாங்க்ஷன் செய்து கொடுக்கிறார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் சாங்க்ஷன் செய்து கொடுக்கிறார்கள். இதேபோல் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நீங்கள் சாங்க்ஷன் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** எல்லாத் தொகுதிகளும் பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதி போன்றவையாகும். திரு. தாமரைக்கனி அவர்களின் தொகுதியான ஸ்ரீவில்லிப்புத்தூர் ஏற்கெனவே பல பயன்களை அரசாங்கம் மூலம் பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொன்னதற்கு நன்றி. இந்தப் பாலங்கள் கட்டுவதில் பேரவைத் தலைவர் தொகுதி என்றல்ல, மொத்தத்தில் எங்கெங்கு பாலங்கள் அவசியமாக இருக்கிறதோ அங்கே கட்ட வேண்டும் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த இடத்தில் அந்தப் பாதை—அங்கே போக முடியாத நிலையில் இருக்கிற காரணத்தினால் உடனே கட்ட வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம். எல்லாயிடங்களுக்கும் ஒரேமாதிரியான அக்கறையும் முக்கியத்துவமும் காட்டப்படும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தென்காசியிலிருந்து திருநெல்வேலி வரும் வரை அத்தனை தொகுதிகளுக்கும் இதில் நன்மை இருக்கிறது.

### பொது பேருந்து நிலையம்.

87—(*வினா எண் 1834) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 'பொதுப் பேருந்து நிலையங்கள்' கட்டப்படும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) ஆம்.

(ஆ) சேலம், உதகமண்டலம், கடலூர், கன்னியாகுமரி, விழுப்புரம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் பொது பேருந்து நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**திரு. செ. செம்மலை:** பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிற இந்த பொது பேருந்து நிலையத்தினுடைய முதல் கட்டப்பணி இப்போது நடைபெற்று வருகிறது. ஆனால் அந்தப் பணியில் தற்போது தொய்வு ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். எனவே அது விரைவுபடுத்தப்படுமா என்று அறிவதோடு இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது முடிக்கப்படும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மொத்த மதிப்பீடு ரூ. 380 இலட்சம், முதல் கட்டப் பணி ஏறத்தாழ இப்போது முடிவுற்றுவிட்டது. இரண்டாவது கட்டப் பணிக்காக ரூ. 201 இலட்சம் ஒதுக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இப்போது அந்தப் பணி துவங்க இருக்கிறது. இந்தப் பணி துவங்கி 18 மாதக் காலத்தில் அந்த இரண்டாம் கட்டப் பணியை முடித்து விடுவார்கள். அதற்குப் பிறகு மூன்றாம் கட்டப் பணி எடுக்கப்பட்டு அதை ஆறு மாதத்தில் முடிப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இடையில் ஒரு சின்னத் தொய்வு ஏற்பட்டதென்றாலும் இப்போது அந்த வேலை மீண்டும் தொடர்ந்து வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. எம். மணி இராசரத்தினம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது விழுப்புரம் பேருந்து நிலையம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நீண்ட நெடுங்காலமாக இந்தத் திட்டம் அமலில் இருந்தாலும் அதை விரைவாக அமல்படுத்த அதுவும் குறிப்பாக இந்த ஆண்டிலேயே அமல்படுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விழுப்புரம் பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில் ஒரு சின்னப் பிரச்னை ஏற்பட்டது. பின்னால் மாவட்ட தலைநகரமாக அது உருவாக்கப்படுகிற நிலை ஏற்படலாம் என்ற ஒரு நிலையில் இப்போது அதற்கேற்றாற்போல் அந்தப் பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டுமென்ற ஒரு முடிவோடு நாங்களாக அதிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்த காரணத்தினால் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில் மிகவும் விரைவாக செய்து முடிப்பதற்கான ஏற்பாட்டை நிச்சயமாக இந்தத் துறை மேற்கொள்ளும்.

**திரு. செ. செம்மலை:** பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற பேருந்து நிலையங்களை மேம்படுத்துவதற்கும் நவீன பேருந்து நிலையங்களை உருவாக்குவதற்கும் என்று பல

ஸ்டான்ட் கார்ப்பரேஷன் என்றதொரு அமைப்பை உருவாக்கும் கருத்துரு பரிசீலனையிலுள்ளதா? அதுபற்றிய விவரங்கள் இருப்பின் அதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அப்படி ஏற்கனவே ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்தது. இப்போதும் இருக்கிறது. இருந்தாலும் இருக்கின்ற நிலைமையைப் பார்த்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, நகராட்சிக்குப் போதிய அளவிற்குப் பண வசதி இல்லாத காரணத்தினால், பல இடங்களிலே பேருந்து நிலையங்களை பராமரிக்கவோ, புதுப்பிக்கவோ, புதிய கட்டிடங்களைக் கட்டவோ முடியாத சிக்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்பதற்காக, மொத்தமாக ஒரு கார்ப்பரேஷனாக அமைக்கப்படுமானால், உலக வங்கியிடமோ அல்லது மற்ற இடங்களில் இருந்தோ கடனைப் பெற்று காரியங்களைச் செய்ய வசதியாக இருக்கும் என்ற உணர்வின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. எதிர்காலத்திலே இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்து, அதற்கேற்ப அதிலே முடிவு எடுக்கப்படும்.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பூக்கடைக்கு அருகில் உள்ள பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியான நிலைமையில் இருப்பதை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அதை விரிவுபடுத்துவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அந்தத் திட்டத்திற்கு ஏதாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இது சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம். அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. உள்ளாட்சித் துறை அமைச்சருக்குத் தனிக் கேள்வி கேட்டால், அதற்கு அவர்கள் சரியான பதிலைச் சொல்வார்கள்.





## காட்டுமன்னார் கோயில்—ஓமாம்புலியூர் சாலையில் மணவாய்க்கால் குறுக்கே உள்ள பாலம்.

88—(*வினா எண். 3651) **திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயிலிலிருந்து ஓமாம்புலியூர் செல்லும் சாலையில் உள்ள மணவாய்க்கால் குறுக்கே உள்ள பாலம் குறுகியதாகவும் மிகவும் பழுதடைந்தும் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்டும் பணி அரசின் குறுகிய நிதி வசதியின் காரணத்தால் இதுவரை எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் மேற்கொள்ள இயலவில்லை.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோயிலிலிருந்து ஓமாம்புலியூர் செல்லும் சாலையில் உள்ள மணவாய்க்கால் குறுக்கே உள்ள அந்தப் பாலம், வெள்ளைக்காரன் இந்த நாட்டிலே இருக்கும்போது கட்டப்பட்ட பாலமாகும். அதற்கு வெள்ளை மதகு என்று வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்திலே பெயரிடப்பட்டிருக்கிறது. தற்போது அந்தப் பாலத்தின் வழியாக பஸ் செல்வதாக இருந்தாலும், லாரி செல்வதாக இருந்தாலும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்தப் பாலத்தின் வழியாகச் செல்வதால் சுமார் 42 கிராமங்கள் , சுமார் 22,000 மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதிக்கு ஒரு சிறப்பாக அமையும். ஆகவே, வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இந்தப் பாலத்தைச் சிறப்பான முறையில் செப்பனிடுவதற்கோ, அல்லது புதிய பாலம் கட்டுவதற்கோ அரசு முயற்சிக்குமா? ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் இந்த வேலைகள் கவனிக்கப் படும்.

[1986 மார்ச் 26

## பெரியார் மாவட்டத்தில் குறுகலான நெடுஞ்சாலைகள்

89 — (* வினா எண். 3996) டாக்டர் அ. பொன்னுசாமி திரு. ச. பாலகிருஷ்ணன், திரு. கா. செ. பழனிச்சாமி, திரு. யு. பி. மாதையன், திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் குறுகலான போக்குவரத்து அதிகமுள்ள நெடுஞ்சாலைகள் யாவை?

(ஆ) எந்தெந்த நெடுஞ்சாலைகள் எப்பொழுது அகலப் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) பெரியார் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின் கீழுள்ள வகைப் படுத்தப்பட்ட அரசு சாலைகளின் பெரும்பாலான பகுதிகள் குறுகலாக ஒருவழித்தடப் பாதை அகலத்துடன் அமைந்துள்ளன அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| சாலையின் பாகுபாடு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் மொத்த நீளம் கி.மீ.ல் | ஒரு தடப்பாதை அகலம் கொண்ட சாலைகளின் நீளம் கி.மீ.ல் | பல் தடப்பாதை அகலம் சாலைகளின் நீளம் கி.மீ.ல் | |
|---|---|---|---|---|---|
| மாநில நெடுஞ் சாலைகள் | 3 | 97.00 | 4.40 | 92.60 | .. |
| மாவட்டப் பெருஞ் சாலைகள் | 53 | 987.60 | 704.60 | 273.60 | 9.40 |
| இதர மாவட்ட சாலைகள் | 107 | 1035.30 | 1023.00 | 12.30 | .. |
| | 163 | 2119.90 | 1732.00 | 378.50 | 9.40 |

(ஆ) மேற்கண்ட சாலைகள் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் அகலப்படுத்த இயலாது. அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 மார்ச் 26]

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகலான, போக்குவரத்து அதிகமுள்ள நெடுஞ்சாலைகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த அளவில், வளர்ந்து வருகின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இந்தச் சாலைகளை அகலப் படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதும், அந்த நில ஆர்ஜிதம் செய்வதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, பணம் கொடுப்பதற்கு தேவையான முன் நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறதா? மேலும், அந்தச் சாலைகளை அகலப்படுத்தும் பணி விரைவிலே, எவ்வளவு காலத்திலே முடிக்கப்படும் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இந்தப் பாதைகளைப் பொறுத்தவரையில் நாம் புதிதாக நிலங்களை ஆர்ஜிதம் செய்து, அகலப்படுத்தும் நிலை இல்லை. ஏற்கனவே இருக்கின்ற சாலைகளை அகலப்படுத்தி, அவைகளை தார் சாலைகளாக மாற்றினால், பெரும்பாலான பிரச்சினைகள் தீர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. சில இடங்களில் நில ஆர்ஜிதம் தேவைப்படும். அந்த வகையிலே நில ஆர்ஜிதப் பிரச்சினை வரவில்லை. எவ்வளவு காலத்திலே குறிப்பிட்டுச் செய்ய முடியும் என்ற நிலையை உருவாக்குவது என்பது கடினம். இருந்தாலும் எந்த அளவிற்கு நிதி வசதி கிடைக்கிறதோ, அதற்கேற்ப படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, எல்லா இடங்களிலும் மாற்ற வேண்டுமென்று அரசு முயற்சி எடுத்து செய்திருக்கிறது.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கிராமப்புறச் சாலைகள் பேருந்து வழித் தடங்கள் செல்லுகின்ற சாலைகளாக எடுக்கப்பட்டு, தற்போது அதை தார் சாலைகளாகப் போடப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் பல சாலைகள் பழுதடைந்து, பராமரிக்க முடியாமல் இருக்கின்றன. இந்த நிலையில் ஊராட்சி ஒன்றியங்களைக் கேட்டால் அது எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்றும், நெடுஞ்சாலைத் துறையினரிடம் கேட்டால் அவர்கள் எங்களின் கீழ் வரவில்லை என்றும் சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் பழுதுபார்க்க வேண்டுமென்று சொன்னால், அவற்றிற்குப் போதுமான நிதி

[1986 மார்ச் 26

வசதி இல்லை. ஆகவே அந்தச் சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையின் கீழ் எடுத்து பராமரிப்பதற்கும், செப்பனிடுவதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே அப்படி ஒரு பிரச்சினை இருந்தது. அந்தச் சாலைகள் யாருக்குச் சொந்தமானது என்பதில் ஒரு சிறிய சிக்கல் இருந்தது. அதற்குக் காரணம், நிறைய இடங்களில் நாம் புதியதாக பாதைகளை அமைத்துவிட்ட காரணத்தால், எப்படியாவது பாதைகளை அமைக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையிலே அமைத்து விட்டபோது, அவைகள் யாருக்குச் சொந்தமானது என்ற நிலையை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது குறிப்பிட்ட அளவிற்கு நெடுஞ்சாலைத் துறையும், மற்றபடி மீதமிருக்கிற பகுதிகளை யூனியன்களும் பாராமரிக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை செய்து, அது முடிவெடுக்கப்பட்டு விட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திய ஒரு கூட்டத்தில் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இனிமேல் எழாது என்று கருதுகிறேன். பஞ்சாயத்துக்களில் போதிய அளவில் நிதி இல்லை என்றாலும், அவற்றை பராமரிப்பதில் நிதி வசதியின்மை காரணத்தால் எவ்வளவு சிரமங்கள் ஏற்படுகிறதோ, அதுபோன்றே தான் நெடுஞ்சாலைத் துறையிலும் நிதி வசதி இல்லாத காரணத்தால் அதே சிக்கல் வருகிறது. பஞ்சாயத்துக்களில் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்தில் எப்படியும் அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் முறையாகப் பராமரிப்பதற்கு அந்தத் துறை நடவடிக்கை எடுக்கும்.

### காப்பிகாடு பகுதியில் தொழிற் பயிற்சி நிலையம்.

2R5— (*வினா எண். 6513) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் காப்பிகாடு பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?



1986 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்பிகாடு பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்பதற்காக சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு, அந்தக் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக ஒரு சில மாதங்களில், அங்கு தொழிற்பயிற்சி நடந்து வந்தது. ஆரம்பிக்கப்பட்ட பிறகு அதை நிறுத்திவிட்டார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: குமரி மாவட்டத்தில் தற்போது 2 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பொதுவாக ஆண்களும், பெண்களும் சேர்ந்து பயிலக் கூடிய நிலையமாக இருந்து வருகிறது. அதிலே 272 இருக்கைகள் இருக்கின்றன. பெண்களுக்கென்று தனியாக ஒரு பயிற்சி நிலையம் 92 இருக்கைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அதுபோன்று அரசினுடைய அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 10 செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 768 இருக்கைகள் இருக்கின்றன. மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை துவக்குவது என்று சொன்னால், அரசின் சார்பிலே நிலம் வாங்குவதற்கு ரூ. 2 இலட்சம் மானியமாகவும், கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 38 இலட்சம் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க ரூ. 20 இலட்சம், ஆக மொத்தம் ரூ. 60 இலட்சம் செலவாகிறது. தொடர் செலவினமாக, பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பயிற்சி மானியமாக இதற்கென்று ரூ. 6 இலட்சம் செலவாகிறது. தற்போதுள்ள நிதிநிலைமையைக் கொண்டு குமரி மாவட்டத்தில், புதியதாக ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்குவது சாத்தியமில்லை. காப்பிகாடு பிரச்சினை சம்பந்தமாக ஏற்கனவே தொழிற்பயிற்சி நிலையம் இயங்கி வந்ததாகவும், அது நிறுத்தப்பட்டு விட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அது

சம்பந்தமாக விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாக கேள்வி போட்டால், விவரமான பதில் தனியாக தரப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபோது 2 ஐ.டி. தொழிற்பயிற்சி நிலையங்கள் அரசு நிலையங்களாக இருப்பதாகவும், 10 தனியார் நிலையங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அங்கே எல்லா பகுதிகளிலும் இப்போது தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே ஏழை எளிய மாணவர்கள் படிக்க முடிவது இல்லை. அட்மிஷன் கிடைக்க வேண்டுமென்றால், நன்கொடையாக குறைந்தபட்சம் ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரையில் கொடுக்க வேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, நன்கொடை வாங்குவதைத் தடுக்கக் கூடிய விதத்தில், 2 அரசினர் கல்லூரிகள் அங்கே போதாது என்ற காரணத்தால், மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் தொழிற்பயிற்சி மையங்கள் மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலே ஆரம்பித்து நம்முடைய மாணவர்களுக்கு நம்மால் கொடுக்க முடியாத நிலையிலே அதற்காக தனியார்கள் முன்வருகிறபோது சில விதிமுறைகளை வைத்து அதன் அடிப்படையிலே அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே தொழிற்பயிற்சி நிலையங்கள் மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலே ஆரம்பிப்பதற்கு அரசினுடைய அங்கீகாரம் 59 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டு தமிழகத்திலே அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சில முறைகேடுகள் நடந்து வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். குறைபாடுகளை நீக்குவதற்காக நம்முடைய அரசு பாடுபட்டு வருகிறது. நிதியாதாரங்கள் தகுந்த முறையிலே இருந்தால் எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது கன்னியாகுமரி மாவட்டத்திலே 2 ஐ.டி.ஐ.க்கள் அரசினுடைய பொறுப்பிலே செயல்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். அதிலே ஒன்று பல வருடங்களுக்கு முன்னால் தொடங்கப்பட்டது. அங்கே பழைய டிரேட்களில் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்போது சமுதாயத்திலே ஏற்பட்டு இருக்கிற மாற்றத்தைத், தேவையை முன்னிட்டு புதிய டிரேட்கள் முக்கியமான டிரேட்கள் அங்கே பயிற்றுவிக்கப்படவில்லை என்பதை கணக்கிலே எடுத்துக் கொண்டு அந்த மாதிரியான புதிய டிரேட்களை அங்கே ஏற்படுத்த முன்வருமா, அல்லது விளவங்கோடு கல்குளம் தாலுகாவிலே காப்பிகாடு பகுதியிலே ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டடம் இடிந்து விழக்கூடிய நிலைமையிலே இருப்பதால் அங்கே அந்த டிரேட்களைக் கொண்ட ஒரு ஐ.டி.ஐ. ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமுதாயத்திற்கு ஏற்ற அளவுக்கு நவீனமான முறையிலே புதிய டிரேட்களை சில இடங்களிலே உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பொன்னேரி, மீஞ்சூர் பகுதிகளில் திராவிடர்களுக்கு சமூகக் கூடங்கள்.

286 — (* வினா எண் 1594) **திரு. கே. பி. கே. சேகர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளில் ஆதிதிராவிட மக்களுக்கு சமூகக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப் பணி எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

**திரு. கே. பி. கே. சேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டில் பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பேரூராட்சிகளில் என்.ஆர்.இ.பி. மூலமாக ஆதிதிராவிட மக்களுக்காக சமூகக் கூடங்கள் கட்டுவதற்காக மதிப்பீடுகளும் வரைபடமும் தயாரிக்கப்பட்டு மாவட்ட திட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே நடப்பு நிதி ஆண்டிலாவது ஆதிதிராவிட மக்களுக்காக அந்த இடங்களிலே சமூகக் கூடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே 12 சமூகக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. குனாம்பேடு, பாரதி நகர் ஆகிய இடங்களிலே கட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட செலவில் கட்ட முடியாத நிலை ஏற்பட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டப்பட்டு வருகிறது. அந்த மாவட்டத்திலே 12 சமூகக் கூடங்கள் இருக்கின்றன. மேற்கொண்டு அடுத்த ஆண்டில் செய்கிற அளவுக்கு நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கே. பி. கே. சேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீஞ்சூர், பொன்னேரி ஆகிய பேரூராட்சிகள் சென்னையிலிருந்து 35 கிலோமீட்டர் தொலைவிலே இருந்தாலும் கூட அந்த இடங்கள் வளர்ந்து வருகிற பகுதிகளாக இருப்பதால் இப்போது அங்கே எந்தவிதமான திருமணக்கூடமும் கிடையாது. ஒன்றிரண்டு தனியார் கூடங்கள் இருந்தாலும் அவைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் பெற முடியாத சிக்கல் இருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு அமைச்சர் அவர்கள் அந்த இரண்டு பேரூராட்சிகளிலேயும் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்காக சமூகக் கூடங்கள் கட்டுவதற்கு முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்கள் இருக்கிற இடங்களிலே அந்த மக்களுடைய திருமண விழாக்கள், உட்கார்ந்து அவர்கள் பேசுவதற்கு வசதியாக சமூகக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறை இயக்குநர் அவர்கள் பரிந்துரை





செய்கிற இடங்களிலே நாம் அவைகளைக் கட்டிக் கொடுக்கிறோம். அவர் பரிந்துரை செய்தால் அந்தப் பகுதியிலே அதற்கான இடம் இருக்குமானால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. இரத்தினவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இதுவரையில் எத்தனை சமூகக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன? ஒரு சமூகக் கூடம் கட்ட வேண்டுமென்றால் எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மொத்தமாக இப்பொழுது சமூகக் கூடங்கள் 124 கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 1962 ஆம் ஆண்டிலே சமூகக் கூடத்திற்கு 5,000 ரூபாய் என்று ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த 5,000 ரூபாய் என்பது படிப்படியாக உயர்த்தப்பட்டு இப்பொழுது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியில் ஒரு சமூகக் கூடம் ஒரு இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு ஆண்டுக்கு மூன்று சமூகக் கூடங்கள் கட்டுகின்ற திட்டத்தின் அடிப்படையில், நடப்பு ஆண்டு மூன்று இடங்கள் குறிப்பிடப்பட்டு கட்டுகின்ற திட்டமும் நடைபெறும் நிலையில் உள்ளது.

## ஆதிதிராவிட மக்களுக்குச் சிறப்பு திட்டம்.

287 — (*வினா எண். 2788) **திரு. சீ. சிவப்பிரகாசம் :** ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மக்களுக்கு பொருளாதார உதவிக்கான மத்திய சிறப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை ஒன்றியங்கள் எடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) இந்தத் திட்டத்தின் மூலம் எந்த எந்த துறைகள் என்ன என்ன திட்டங்களை நிறைவேற்றியுள்ளன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** (அ) மற்றும் (ஆ) அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

389-390 199-220-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[1986 மார்ச் 26

**திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் இந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது? இதனால் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் எத்தனை ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறுகின்றன? ஒவ்வொருவருக்கும் மானியமாக எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஆண்டுக்கு 15 ஒன்றியங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அதைப் பொறுத்தவரையில் மொத்த கணக்குதான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எவ்வளவு தொகை செலவிடப்பட வேண்டுமென்பது மொத்தக் கணக்கிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 49 கோடியே 67,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அதைப்போல 1985-86 ஆம் ஆண்டுக்கு 13 கோடியே 38 இலட்சத்து 93,000 ரூபாய் செலவிடும் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சீ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளிலிருந்து கிராம நூற்பு நிலையம் மற்றும் நேபாள் தறி போன்ற திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் எடுக்கப்பட்ட ஒன்றியங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தால் அந்தக் கட்டிடங்கள் செயல்படக் கூடிய வகையில் அவைகளை வைக்கும் நிலையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கட்டி முடிக்கின்ற கட்டிடங்கள் செயல்படவில்லை என்றால் கூடிய விரைவில் அவைகள் செயல்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மானியத் தொகை முழுவதும் சென்ற ஆண்டே



1986 மார்ச் 26]

செலவிடப்பட்டு விட்டதா? அப்படி செலவிடப்படவில்லை என்றால், இந்தத் திட்டத்தைப் பற்றி ஆதி திராவிட மக்களுக்கு அந்தக் காலனி பகுதியிலே சுவரொட்டி மூலம் இந்தத் திட்டத்தைப் பற்றி முறையாக விளம்பரம் செய்து தொடர்ந்து அந்த மக்கள் இந்தத் திட்டத்தின் முழுப் பலனையும் பெறும் வகையில் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் முழுவதும் மத்திய அரசினால் கொடுக்கப்படும் திட்டம். இதற்கு முழுவதும் கொடுக்கப்படுகின்ற தொகையை உன்னிப்போடு விட்டு வசதித் துறையான, 'தாட்கோ' நிறுவனத்தின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, இன்னும் கதர்த் துறை, தொழில் துறை, கூட்டுறவுத் துறை, கைத்தறி மற்றும் நெசவுத் துறை மூலம், நேபாளி தறி போன்ற பல திட்டங்கள் தீட்டப்பட்டு அந்தக் கிராம மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அவர்களுக்கே முழுவதும் செலவு செய்யப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இங்கே பல விளக்கங்களைச் சொல்லி இருந்தாலும், ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசு ஒதுக்குகின்ற முழுப்பணத்தையும் செலவு செய்து 15 ஒன்றியங்களை அவர்களுடைய கண்காணிப்பில் எடுத்துக்கொண்டு பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திலும் நேர்சர் ஆஃப் ஒர்க் என்ன, எத்தனை குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்றது, எந்தெந்த வகைகளிலே செலவு செய்யப்படுகிறது என்பதைத் சுயவு செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மூலமாக, கிராம நூற்பு நிலையம் 70 யூனிட் கொடுக்கப்படுகிறது. அதுபோல், நேபாளித் தறி 32 யூனிட்டும், காலணி மற்றும் தோல் பதனிடுதல்

17 யூனிட்டும், பாய் பின்னுதல் 30 யூனிட்டும், பனைமரப் பொருட்கள் 27 யூனிட்டும், கையினால செய்த காகிதம் 2 யூனிட்டும், தொழில் துறை மூலமாக, செங்கற் சூளை 9 யூனிட்டும், கயிறு பின்னுதல் 6 யூனிட்டும், கூட்டுறவுத் துறை மூலமாக, கல்லுடைத்தல் 3 யூனிட்டும், கைத்தறி மற்றும் நெசவுத் துறையின் மூலமாக பட்டு வளர்த்தல் 1 யூனிட்டும், கைத்தறி காம்ப்ளக்ஸ் 5 யூனிட்டும் இப்படி இதன் மூலமாக, அந்த மக்களுக்குத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### உத்திரமேரூர் தாலுக்காவில் ஆதி திராவிட நல தொடக்கப்பள்ளிகள்.

288 — (* வினா எண். 3763) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்கா பெருநகர், கரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் ஆதி திராவிட நல தொடக்கப் பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தாலுகாவில் பெருநகர், கரும்பாக்கம் போன்ற கிராமங்களில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். மேலும், அந்தப் பகுதியிலேயிருந்து வேறு கிராமத்திற்குச் சென்றுதான் பிள்ளைகள் எல்லாம் படிக்கின்ற சூழ்நிலையிருக்கின்றது. ஆகவே, அவசியம் அந்தக் கிராமத்திற்கு நலப் பள்ளி கட்டிக் கொடுப்பதற்கு உடனடியாக, மேற்கொண்டு அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர் கிராமத்தில் மொத்த ஜனத்தொகை 5,000. அதில் 52 சதவிகதத்தினர் ஆதி திராவிடர் மக்கள் இருக்கிறார்கள். அதிலே, 480 மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட ஒரு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி



இருக்கிறது. 646 மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அது தவிர, அந்தக் கிராமத்திற்கு 2 கிலோ மீட்டர் தொலைவில் இளநகர் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதைப்போல், கரும்பாக்கம் கிராமத்தில், மொத்த மக்கட்தொகை 1,180 பேர்கள் இருக்கிற இடத்திலே, ஆதி திராவிடப் பெருமக்கள் மட்டும் குறிப்பாக 400 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே, தகுதி பெற்ற மாணவர்கள்—ஆதி திராவிடர்கள் மட்டும்—50 பேர்கள் இருக்கிறார்கள். பக்கத்தில், திட்டஞ்சேரி, கரும்புலியூர், மருப்பாக்கம் ஆகிய கிராமங்களில் ஊராட்சி ஆரம்பப் பள்ளிகள் இருப்பதால், தனியாக ஆதி திராவிடர் பள்ளி தொடங்குவதற்கான செயற்குறிப்பு இப்பொழுது இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பத்தூர் பகுதியில் சிப்காட்டின் மூலமாக ஒரு தொழில் பகுதியையும் அமைத்துத் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

### கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள்.

289 — (* வினா எண் 4391) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், கள்ளர் வகுப்பினருக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** (அ) சீர் மரபினர் என்ற வகுப்பில் பிரமலைக் கள்ளரும் அடங்குவதாலும், சீர்மரபினருக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பிரமலை கள்ளர் வகுப்பினருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆகவே கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பிரமலைக் கள்ளர் வகுப்பினருக்கு என தனியாக வீடு கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர் மரபினர் என்ற வகுப்பில் பிரமலைக் கள்ளரும் வருவதால், தனியாக பிரமலைக் கள்ளர் சமுதாயத்திற்கு வீடு கட்டும் திட்டம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலே பிற்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டு இருக்கிற அந்தச் சமூகத்தினரை, ஏற்கனவே, கள்ளர் ரிக்ளமேஷன் அடிப்படையில், மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பிற்படுத்தப்பட்டு, இன்றைக்கும் பின்தங்கி வாழ்கிற அந்த மக்களுக்கு, இனியேனும் தனியாக வீடு கட்டும் திட்டத்தினை வகுத்து, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சீர்மரபினர் என்கின்ற அந்தப் பட்டியலில் இந்தக் கள்ளர் இனத்தவரும் வருகிறார்கள். எனவேதான், சீர்மரபினர் என்ற வகுப்பினருக்கு மொத்தமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டு வருகின்றன. அதிலேயே, இவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம் வருகிற காரணத்தால், தனியாக, அந்த வகுப்பினருக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்மரபினர் பட்டியலிலே வேறு எந்த எந்தச் சமுதாயத்தினர் வருகின்றனர்? இப்பொழுது பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினரைப் பொறுத்தவரையிலே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, வெள்ளைக்காரன் நாட்டை ஆண்ட காலத்திலே, குற்றப் பரம்பரையினர் என்று அவர்களை எல்லாம் வேறுபடுத்தி, அதில் வயதடைந்த ஆண்கள் எல்லாம் இரவிலே காவல் நிலையங்களிலே போய் தங்க வேண்டுமென்று ஒரு அநாகரிகமான பழக்கத்தை வைத்திருந்தார்கள். நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே தான் அதை மாற்றி. அந்தச் சமுதாயத்தினரும் மற்ற சமுதாயத்தினரோடு சேர்ந்து வாழ்கிற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. இதற்கு முன்னாலே, அந்தப் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தினருக்கென்று திட்டங்கள் வகுக்கப்பட்டன.



இதற்கு முன்னால் ஆடுகள் வாங்க, மாடுகள் வாங்க, இப்படி பல்வேறு இனங்களில் உதவிகள் அளிக்கப்பட்டு வந்தன. இப்போது அந்த உதவிகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகின்ற காரணத்தால் இந்தச் சமுதாயத்தினருக்கு இந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நான் குறிப்பாகக் கேட்பது இந்த சீர்மரபினர் பட்டியலில் இருக்கிற பிரமலைக் கள்ளருக்கு சென்ற ஆண்டு எவ்வளவு ஒதுக்கினார்கள்? இந்த ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கப் போகிறார்கள்?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவரவர்களே, இந்தப் பட்டியலில் அடங்குகின்ற ஜாதிகளைப் பார்த்தால் கிட்டத்தட்ட 70 ஜாதியினர் இருக்கிறார்கள். சீர்மரபினருக்காக 1979, 1980, 1981 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 967 வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன. 1970-க்கு முன்னால் ஒரு வீட்டிற்கு 1,000 ரூபாய் செலவானது. 1970-ல் அது 1,200 ரூபாயாக இருந்தது. 1975-76-ல் 2,700 ரூபாயாக இருந்தது. 1979-80 ஆம் ஆண்டில் 4,100 ரூபாயாக இருக்கிறது. இப்படி. அவர்களுக்கு தொடர்ந்து வீடுகள் கட்டிக் கொடுக்கிற திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பிரமலைக் கள்ளர்களுக்கு மட்டும் இதுவரை 197 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. துரை கோவிந்தராசன் :** தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கந்தர்வகோட்டைப் பகுதியில் இருக்கிற கள்ளர் சமூகத்தினருக்கு என்று தனியாக நிதி ஒதுக்கி, தனியாக பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டன; இப்போது அந்த சலுகைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்ற குறைபாடு இருக்கிறது. குறிப்பாக இந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், இதைப் போன்ற பிற திட்டங்கள் அவர்களுக்கு இல்லை. ஆகவே, மறுபடியும் அந்த கள்ளர் சமூகத்தினருக்கு தனி உரிமைகள் அளித்து காரியங்கள் நடக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவரவர்களே, கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் திட்டம் இருக்கிறதா என்பது கேள்வி. சீர்மரபினர் பட்டியலில் கந்தர்வகோட்டை கள்ளர், மறவர், பிரமலைக் கள்ளர், அம்பலக் காரர், வலையர் போன்ற 70 ஜாதியினர் இடம் பெற்றிருக்

கிறார்கள். அவர்கள் பலவிதமான சலுகைகளை பெற்று வருகிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் தெளிவாகப் பதில் சொல்ல தயாராக இருக்கிறேன்.

### மீனவர் கூட்டுறவு மையங்கள்.

**290 — (*வினா எண். 5444) திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தலைநகரங்களில் இதுவரை எத்தனை மீனவர் கூட்டுறவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) புதியதாக கூட்டுறவு மையங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** (அ) மாவட்ட தலைநகரங்களில் பத்து மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனங்கள் (மையங்கள்) அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவரவர்களே, எந்தெந்த மாவட்ட தலைநகரங்களில் இந்த மீனவர் கூட்டுறவு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? இந்த மீனவர் கூட்டுறவு மையங்கள் போதுமான நிதி இல்லாமல் நலிவுற்று இருப்பதை அரசு அறியுமா ? அப்படி என்றால் இந்த மையங்களுக்கு அரசு உதவி வழங்குகிறதா ? எவ்வளவு உதவி வழங்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று வகையிலான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். கடல் மீனவர்களுக்கு 271, உள்நாட்டு மீனவர்களுக்கு 231, மீனவ மகளிருக்கு 30, மீனவர் கூட்டுறவு இணையங்கள் 10, இதர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 25. ஆக மொத்தம் 567 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியமாகவும், பங்கு முதலீட்டு





உதவியாகவும் நடைமுறைக் கடன் போன்ற உதவியாகவும், நிர்வாக உதவியாகவும் நிதி உதவி செய்து வருகிறது. 1978-79 ஆம் ஆண்டு முதல் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. மீனவர்கள் விசைப் படகு வாங்க, நாட்டுப் படகு வாங்க, தங்கள் பொருள்களை எடுத்துச் செல்ல வாகனங்கள் வாங்க, கிடங்குகள் கட்ட, மீனைப் பதப்படுத்த, விற்பனை செய்ய போன்ற இப்படிப்பட்ட காரியங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, கன்னியாகுமரி, சென்னை, புதுக்கோட்டை ஆகிய பத்து மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு வேறு ஏதாவது புது சலுகைகளை அரசு வழங்கி வருகிறதா ? ஏற்கனவே அவர்கள் வலைநூல், கடன் உதவி போன்றவற்றை எல்லாம் பெற்று வந்தார்கள். இப்போது அது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி நிறுத்தப் பட்டிருந்தால் மீண்டும் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கென்று பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதுபற்றிய கேள்விகளைத் தனியாகப் போட்டால் ஒட்டு மொத்தமாக அதற்குரிய பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பட்டியலில் உள்ள எத்தனை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன, எத்தனை மீனவர் சங்கங்கள் செயல்படவில்லை என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் சேர்ந்து மொத்தம் 567 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்று நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன்.

[1986 மார்ச் 26

**திரு. செ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்நாட்டு மீனவர் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன. உள்நாட்டு மீனவர் சங்கங்களுக்கு அரசு என்னென்ன சலுகைகளையும் உதவிகளையும் செய்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 231. மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால்தான் முழு விவரமும் தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு உதவி செய்கிற வகையில் அரசு கூட்டுறவுத் துறையிலே சங்கங்கள் அமைத்து அரசு வழங்கி வருகின்ற சலுகைகளை மீன்பிடித் தொழிலில் ஈடுபடாத பலர் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில், உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்திருப்பதனால் பல ஊர்களில் கலவரங்கள் நடந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படிப்பட்ட தவறுகள் இருப்பது உண்மை என்றால், அதனைத் தடுத்து நிறுத்த அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான மீனவர்கள் அல்லாதவர்கள் பலபேர் உள்நாட்டு மீனவர் சங்கங்களில் தலைவர்களாக இருந்து கொண்டு அந்தப் பயன்களை அனுபவித்து வருவது உண்மை. அதை மாற்றி அமைக்க வேண்டும் என்றுதான் சமீபத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வட்டத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து உண்மையான மீனவர்களைக் கண்டுபிடித்து, அப்படி உண்மையான மீனவர்களாக இருப்பவர்களுக்கு அரசின் சலுகைகளும் மற்றவைகளும் கிடைக்கின்ற வகையில் செயல்படுத்த வேண்டும் என்று ஒரு கட்டளை இட்டிருக்கிறார்கள். எனவே உண்மையான மீனவர்கள் மட்டும் பயன்படுகிற வகையில் விரைவில் இந்த அரசு திட்டங்களைச் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26]

**திரு. கோ. வீரய்யன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும் அவற்றைப் பொறுத்தவரையில் இப்போது வட்டத்திற்கு ஒன்று என்ற வகையில் அமைக்க இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, இதற்கு முன்னால் உள்நாட்டு மீன்வளத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தவர்கள் இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்பட விடாமல் செய்து, அவற்றைச் செயலற்றதாக ஆக்கி வைத்திருப்பதைப் பற்றி அரசு அறியுமா? அப்படிப்பட்ட தனியார்களுடைய பிடியிலிருந்து விடுபட்டு இந்த மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உரிய வகையில் செயல்படக்கூடிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்கள் தலைவர்களாக இருந்து கொண்டு அவ்வாறு அனுபவித்து வருகிறார்கள். இந்த சங்கத்தின் எல்லையைப் பொறுத்தவரையில் கூட ஒரு சங்கத்தின் எல்லை ஒரு தாலுக்கா என்று கூட இல்லை. 7 தாலுக்கா, 8 தாலுக்கா, முடிந்தால் ஒரு மாவட்டம் முழுவதும் என்று சில பேர் வைத்துக் கொண்டு அனுபவித்து வருகிறார்கள். அதனால்தான் வட்டத்திற்கு ஒரு சங்கமாக விரைவில் அமைத்து அங்கே இருக்கிற உண்மையான மீனவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் பயன்படுகிற அளவில் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே உண்மையான மீனவர்கள் பயன்படுகிற அளவில் எல்லா வகையான உதவிகளையும் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உண்மையான மீனவர்கள், உண்மையான மீனவர்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு விளக்கம் வேண்டும். உண்மையான மீனவர்கள் என்றால் யார், யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீன் பிடிக்கிறவர்கள் உண்மையான மீனவர்கள், மீன் சாப்பிடுகிறவர்கள் உண்மையான.... (சிரிப்பு)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மீனவர்கள். வலைவீசி மீன் பிடிப்பவர்கள் மற்றும் ஊற்றுவகிறி வலை மற்றவைகளைக் கொண்டு மீன் பிடிப்பவர்கள் ஆகியோர் உண்மையான மீன் பிடிப்பவர்கள். அதாவது நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்தான் உண்மையான மீன் பிடிப்பவர்களாவார்கள்.

## மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்.

291 — (*வினா எண். 6144) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை மகளிர் கூட்டுறவு மீனவர்கள் சங்கம் மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) தஞ்சை மாவட்டம், ராஜகிரி, கோடியக்கரை, சிறுத்தலைக்காடு ஆகிய இடங்களில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) தமிழ் நாட்டில் 30 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) சென்னை | .. | 9 |
| (2) செங்கற்பட்டு | .. | 5 |
| (3) தஞ்சாவூர் | .. | 3 |
| (4) தென்னாற்காடு | .. | 7 |
| (5) திருநெல்வேலி | .. | 3 |
| (6) கன்னியாகுமரி | .. | 3 |
| | .. | 30 |

(ஆ) கோரிக்கை வரப்பெற்றால் விதி முறைக்கேற்ப ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ராஜகிரி, கோடியக்கரை போன்ற இடங்களில் மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என கேட்க ஆசைப்படுகிறேன்.



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை வரப்பெற்றால் விதிமுறைக்கு ஏற்ப ஆய்வு செய்து முடிவு எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். கோரிக்கையை சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் தந்தால், உடனடியாக அங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு வீடு கட்ட கடன் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது உங்களுக்கு தெரியும். இந்த ஆண்டும் கூட 50 லட்சம் ரூபாயில் கடல் மீனவர்களுக்கு, ஒரு வீடு 16 ஆயிரம் என்ற செலவில் புதிய வடிவமைப்பில் கட்டித் தருகின்ற திட்டம் விரைவிலே செயல்படுத்தப்பட இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அவர்கள் கடல் ஓரத்திலே இருக்கிறார்கள், புயல் அடிக்கடி வருகிறது. கடல் கொந்தளிப்பினால் வேறு, தண்ணீர் வந்துவிடும் என்று கருதி, 6 ஆயிரத்திலிருந்து 9 ஆயிரத்திற்குள் இருந்த தொகையை இப்போது 16 ஆயிரமாக உயர்த்தி, கடல் ஓரங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு உறுதியாக, வசதியாக கட்டித்தர வேண்டும் என்று புதிய வடிவமைப்புக் கொடுத்து கட்டிடம் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும். இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் ஏற்றுமதி.

292 — (*வினா எண். 4139) திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் கதர் துணி மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் அயல்நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், எந்த எந்த பொருட்கள் எந்த எந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** (அ) ஆம். தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் நாம்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், பனந்தும்பை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

(ஆ) பனந்தும்பு கீழ்க்கண்ட நாடுகளுக்கு 1984-85-ல் ஏற்றுமதி செய்யப்பட்டது.

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள்,
2. இங்கிலாந்து
3. பெல்ஜியம் மற்றும்
4. ஹாலந்து.

**திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய காலணிகளுக்கு அயல் நாடுகளிலே அதிக மரியாதையும் வரவேற்பும் இருக்கிறது. ஆகவே கிராமத் தொழில் பொருட்கள் செய்கிற அந்த திட்டத்தின் கீழ் காலணிகளையும் தயாரித்து அயல் நாடுகளுக்கு அனுப்புகிற திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக தயாரிக்கப்படும் பனைத் தும்பை அயல்நாடுகளுக்கு இப்போது ஏற்றுமதி செய்துக் கொண்டிருக்கிறோம். மேலும் மற்ற பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஆய்வுகளை கதர் கிராமத் தொழில் வாரியம் மேற்கொண்டு உள்ளது. இப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற வினாவிற்கு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதருக்கும் அதைச் சார்ந்த கிராம தொழில் பொருட்களுக்கும் மத்திய அரசு வருடம் முழுவதும்





15 சதவீதம் தள்ளுபடி தருகிறது. அதைப்போல தமிழக அரசும் விழாக் காலங்களில் என்று மட்டும் இல்லாமல், வருடம் முழுவதும் கதருக்கும் கதர் சார்ந்த பொருள்களுக்கும் 15 சதவீதம் தள்ளுபடியைத் தர முன்வருமா?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தள்ளுபடி கொடுப்பதைப் போலவே தமிழக அரசும் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தயாரிக்கக் கூடிய துணிகளுக்கு 10 சதவீத தள்ளுபடியைக் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமது தமிழ் நாட்டிலே உற்பத்தியாகிற கதர் துணிகளும், மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக உருவாகின்ற கைவினைப் பொருட்களும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் மத்தூர் ஒன்றியத்தில் பாம்கோலா பேக்டரி 1979-லே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அங்கிருந்து என்னென்ன பொருட்கள் தயார் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

## தேனீ வளர்ப்புத் திட்டம்.

**293—(* வினா எண். 7227) திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனீ வளர்ப்புத் திட்டம் இப்போது செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** (அ) ஆம்.

[1986 மார்ச் 26

(ஆ) தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் மாநிலம் முழுவதிலும் 65 தேனீக் கிளை நிலையங்களும் (Sub-Stations) 8 தேன் நிரப்பும் நிலையங்களும் (Honey Packing Centres) 11 தேனீப் பண்ணைகளும (Bee Nurseries) மற்றும் 15 தேனி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, தேனி வளர்ப்பிற்காக தனி அதிகாரிகள் உள்ளாட்சித் துறையில் ஊராட்சி மன்றங்களில் அமர்த்தப்பட்டு இருந்தார்கள். இப்போது அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் அந்த வேலை ஊராட்சிகள் மூலமாக நடைபெறுவதில்லை. எனவே கிராம மக்கள் தேனி வளர்ப்பைப் பற்றி அதிகமாக தெரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே கிராம நல ஊழியர்கள் மூலமாவது அந்தப் பணியைத் தொடர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, தேனி வளர்ப்புத் திட்டத்திற்காக இந்தத் தொழிலைச் செய்யக் கூடியவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கும், இந்தத் தொழிலைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கும் தேனி வயலர் என்ற பதவிகளை உருவாக்கி அதன் மூலமாக ஒரு சிலரை அந்தப் பதவியில் அமர்த்தி கதர் கிராமத் தொழில் வாரியம் வேண்டிய உதவிகளை அந்தத் தொழில் செய்யக் கூடியவர்களுக்குச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, பரவலாக தேனி வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்த நோக்கில் கிராம நல ஊழியர்கள் மூலமாக நடந்து வந்தது. இப்போது இந்த வேலையை கிராம நல ஊழியர்களும், தனி அதிகாரிகளும் பார்க்காத காரணத்தினால் தேனி வளர்ப்புத் திட்டத்தின் விவரங்கள் மக்களுக்கு தெரியாமல் இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை பரவலாக்குவதற்கு என்ன முயற்சியை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 26]

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, நான் இது குறித்து முதலிலேயே கூறி இருக்கிறேன். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக் தேனி வளர்ப்புத் தொழிலை செய்யக்கூடியவர்கள் இந்தத் தொழில் பற்றி விவரங்களை தெரிந்து கொள்கிற வகையில், தேனி வயலர் என்ற பதவிகளை உருவாக்கி அதன் மூலம் ஒரு சிலரை அந்தப் பதவியில் அமர்த்தி இருக்கிறார்கள். தகுதியுடைய நபர்களை தேனி வளர்ப்புத் திட்டத்திற்கு தேர்ந்தெடுப்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு, அவர்கள் தேனி வளர்ப்புத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னால் உரிய பயிற்சிகளை அளிப்பது, தேனி வளர்ப்பவர்களுக்கு தேனிப் பெட்டிகள் வழங்கி பராமரிப்பு குறித்து விளக்குவது, தேனி வளர்ப்பவர்களுக்கு விஞ்ஞான ரீதியில் தேன் பிழிந்தெடுக்கும் முறை போன்றவற்றை விளக்கிக் கூறுவது, தேனி வளர்ப்பவர்களுக்கு தேனிக் கூட்டங்களை பெருக்குவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுவது, தேனி வளர்ப்பவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொள்வது குறித்தும், மேற்படி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக என்னென்ன நிதியுதவிகளை எம்மாதிரி வழிகளில், அரசு, வங்கி மற்றும் வாரியம் மூலமாக பெறலாம் என்பதைக் குறித்தும் தொழில் செய்பவர்களுக்கு தேனி வயலர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். இப்படி பல்வேறு வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, தேன், மலைப் பகுதிகளில் அதிகமாக கிடைக்கிறது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதிவாசிகள் கொம்புத் தேனை எடுத்து விற்று அதன் மூலம் வாழ்கிறார்கள். அவர்கள் தேனி வளர்ப்பதற்கு அதிக அக்கறை காட்டி, உற்சாகமான முறையில் அவர்கள் தங்கள் தொழிலைச் செய்ய அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: தலைவர் அவர்களே, அவர்களிடத்திலிருந்து இதுபோன்ற கோரிக்கை அடங்கிய விண்ணப்பம் எதுவும் இதுவரையில் வரவில்லை. அவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தால், அவர்கள் உதவி கோரி விண்ணப்பம் கொடுத்தால் பரிசீலித்து அதற்குரிய நடவடிக்கையை கதர் கிராமத் தொழில் வாரியம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 மார்ச் 26

## சென்னை மாநகர தெருக்களின் பெயர் மாற்றம்.

குறுகிய கால வினா எண். 2 — (*வினா எண். 8711)
திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் "ஆங்கிலேயர்" பெயர்களில் உள்ள தெருக்களின் பெயர்களை மாற்றி "விடுதலைப் போராட்ட வீரர்கள்" தமிழறிஞர்கள், மொழி போராட்ட வீரர்கள் ஆகியோர் களின் பெயர்களை வைக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டப் பிரிவு 228-ன் கீழ் தெருக்களின் பெயரை மாமன்றம் அரசின் முன் ஒப்புதல் பெற்று மாற்றலாம். தற்போதுள்ள தெருக்களின் மற்றும் மாநகராட்சி சொத்துக்களின் பெயர்களை மாற்ற வேண்டி வரும் கோரிக்கைகள் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும் என அரசு தீர்மானித்துள்ளது. எனவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் பதவி ஏற்றதும் இதுபோன்ற கோரிக்கைகள் வந்தால் அரசு பரிசீலிக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, சில தெருக்களின் பெயர்கள் சென்னை மாநகரத்தில் புகழ்பெற்ற தலைவர்களின் பெயரால், அறிஞர்களின் பெயரால் அமைக்கப் பட்டிருந்தன. ஜாதிப் பெயர்களை நீக்குகிற அடிப்படையில் சில நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக லட்சுமண சாமி முதலியார் என்று சொன்னால் தான் அவரை நாட்டிற்கு தெரியும். ஆகவே நாம் ஜாதிப் பெயரை நீக்கவேண்டும் என்று சொல்லி, முதலியார் என்று நீக்கிவிட்டு, வெறும் லட்சுமணன் என்று போடும்போது யார் லட்சுமணன் என்று தெரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் சீனிவாச ஐயங்கார், டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்ற புகழ் பெற்ற அந்தத் தலைவர் களுடைய பெயர்களோடு, ஜாதிப் பெயரும் இருந்தால்தான் அந்தத் தலைவர்களைத் தெரிந்து கொள்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட ஜாதிப் பெயரோடு புகழ் பெற்றவர்களுக்கு மாத்திரம் விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஜாதிப் பெயரை வைத்துக்கொண்டு, அந்தத் தலைவர்களுக்கு பெருமையும் புகழும் வரவில்லை. அவர்களுக்கு இருந்த அறிவு, ஆற்றல், திறமை அவர்கள் செய்த தியாகம், உழைப்பு இவைகளின் பெயரால்தான் அவர்களுக்கு பெருமை வந்திருக்கிறது. லட்சுமணசாமி முதலியார் என்பதை லட்சுமணன் தெரு என்று மாற்றினால், யாருக்கும் அது தெரியாமல் போய்விடும் என்று சொன்னார்கள். அதைப்போல் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களுடைய பெயரை, வெறும் கிருஷ்ணன் என்று மாற்றினால் அது யாருக்கும் தெரியாமல் போய்விடும் என்று சொன்னார்கள். டி. டி. கே. என்றால், அது கிருஷ்ணமாச்சாரியைத்தான் குறிக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். அதேபோல், சர் ஏ. எல், சர். ஏ. ஆர். என்று சொன்னால், லட்சுமணசாமி முதலியாரையும், ராமசாமி முதலியாரையும் அது சொல்வதாக இருக்கும். வேண்டுமென்றால் தெருப் பெயரில் சர் ஏ.எல்., சர் ஏ.ஆர்., டி.டி.கே; என்று சேர்த்து அப்படி மாற்ற முடியுமா? என்பதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் பல பூங்காக்களில் பெயரளவில் அதனுடைய பெயர்ப் பலகைகள் தொங்கிக் கொண்டு இருக்கின்றன, தவிர அவைகள் பூங்காக்களாக இல்லை. ஆகவே அந்தப் பூங்காக்களை நல்லமுறையில் பராமரித்து, எழில் மிக்க சென்னை மாநகரத்தில் ஆரோக்கியமான ஒரு சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது பல தனியார்கள். சில சாலைகளின் சந்திப்பில் பார்க்போல எடுத்து பராமரித்து வருகிறார்கள். எனவே அப்படிப்பட்ட முறையில் தனியார் நிறுவனங்கள் அந்தப் பூங்காக்களை எடுத்து செப்பனிட, நிர்வகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார்கள் பெயரால் பூங்காக்கள் இருந்து, அந்தப் பூங்காக்கள் சீராக இல்லாத காரணத்தால் யார் பெயரில் அந்தப் பூங்கா இருக்கிறது என்பது தெரியாமல் இருப்பதால், அந்தப் பெரியவர் களுக்கு களங்கம் வந்துவிடுமோ. என்ற அச்சத்தின் காரணமாக

[1986 மார்ச் 26

இந்தக் கேள்வி கேட்கப்பட்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். எனவே அப்படிப்பட்ட பூங்காக்களை, மாநகராட்சி தனியார் களுக்குக் கொடுத்தாவது நிர்வகிக்க முயலுமா என்பதைப் பற்றி முயற்சிக்கலாம், இல்லாவிட்டால், இந்த ஆண்டிலிருந்து அவைகளைச் சரியாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத்தலைவர் அவர்களே, தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் வந்த பிறகு இதுபோன்ற மாற்றங்களைச் செய்து கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறைந்தபட்சம் நம்முடைய சென்னையில், ராயப்பேட்டைக்கு பக்கத்தில் அந்தக் காவல் நிலையத்திற்குப் பக்கத்தில் கொலைகாரன் பேட்டை என்று ஒரு பேட்டை இருக்கிறது. இதுபோன்று கொலைகாரன் பேட்டை என்று இருக்கிற அந்த இடங்களையாவது மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கொலைகாரன் பேட்டை என்ற ஒரு பகுதி இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஏன் அவர் அந்தப் பகுதிக்குப் போனார் என்று எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) அப்படி ஒரு பேட்டை இருந்தால், அதற்கு ஏதேனும் காரணம் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஏதேனும் சில தவறான நோக்கத்தோடு சில பெயர்கள் இருக்கும். அப்படி ஏதேனும் இருக்குமானால், கொலைகாரன் பேட்டை, என்று தவறுதலாக வந்து இருக்குமானால், அவைகளை மாற்றுவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் "அண்ணா பிள்ளை" தெரு என்று இருக்கிறது. பிள்ளையை எடுத்து விட்டால், "அண்ணா தெரு" என்று இருக்கிறது. அது பேரறிஞர் அண்ணாவைக் குறிக்குமா? அல்லது "அண்ணா பிள்ளை"-யைக் குறிக்குமா? எனவே இப்படிப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்றன. இதிலே அரசு என்ன முடிவை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.



1986 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சென்னை "அண்ணா தெரு" என்று மாற்றினால் ஒன்றும் பிரச்சனை இருக்காது. அண்ணாவிற்கு அறிஞர் அண்ணா என்று சொன்னால்தான் தெரியும் அண்ணா என்ற உடனேயே எல்லாமே அண்ணா என்று வந்துவிடாது. அண்ணாதுரை என்று பெயர் வைத்துக்கொண்டவர்கள் எல்லாம் "அறிஞர் அண்ணாதுரை" யாக ஆகிவிட முடியாது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) உள்ளாட்சி நிறுவனங்களின் துணைத் தலைவர்கள் தேர்தல் குறித்து.

**திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களான ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு தேர்தல்கள் முடிக்கப்பட்டு, துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரம். அல்லது அதற்காக தயாராகிக் கொண்டிருக்கிற நேரம். இந்த நேரத்தில் தலைவருக்கு, ஒன்றியத் துணைப் பெரும் தலைவருக்கு வாக்கு அளிப்பதற்கு உரிமை உண்டா? நகர மன்றத் தலைவர்களுக்கு, நகர மன்றத் துணைத் தலைவர்களுக்கு வாக்களிக்கின்ற உரிமை உண்டா என்ற குழப்பம் தமிழகம் முழுவதும் இன்றைக்கு பரவி இருக்கிறது. அதற்காக விளக்கத்தைப் பெறுவதற்காக ஊராட்சி சட்டம், நகராட்சிச் சட்டம், சமீபத்திலே அரசாலே வெளியிடப்பட்ட அரசு ஆணை 275, அதேபோன்று அரசு ஆணை 148, 1978, அரசால் வெளியிடப் பட்ட நகராட்சி துணை விதிகள், ஆகியவற்றை எல்லாம் ஆழ்ந்து படித்தும் கூட உரிய விளக்கத்தை உரியவர்கள் பெற இயலாத காரணத்தாலே, நல்ல விளக்கம் தந்து, குழப்பமான சூழ்நிலையைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். ஏற்றுக்கொண்டு விட்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு துணை தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் வாக்களிக்கின்ற உரிமை எல்லா வகையிலும் உண்டு, எல்லாவற்றுக்கும் வாக்களிக்கின்ற உரிமை அவர்களுக்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நீக்கம் செய்யப்பெற்ற பகுதிகள் குறித்து.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் நிதி நிலை அறிக்கையிலே பேசும்போது, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னுடைய பகுதிகளை நீக்கினார்கள். ஆனால் ஒப்புக்கொண்ட பகுதியும் சேர்த்து நீக்கப்பட்டிருக்கிறது. அதை திரும்பச் சேர்த்துக்கொள்வதற்கான காரணங்களை இப்போது நான் சொல்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள். (குறுக்கீடு)

(இ) மதுபான விற்பனைக்கான உரிமம் வழங்குதல்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசாங்கத்தால் 1981-82 ஆம் ஆண்டிலேயும், 1985 ஆண்டிலேயும் இந்தியாவில் தயாரிக்கப்படுகிற அயல் நாட்டு மதுபான விற்பனை உரிமை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் அப்படி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டபோது, ஒவ்வொருவரிடமிருந்தும் சிறப்புக் கட்டணமாக 20,000 ரூபாயும், பொறுப்புறுதி வைப்பு என்ற முறையில் 5,000 ரூபாயும் வாங்கிக்கொள்ளப்பட்டன. ஆனால் 4, 5 வருடங்கள் ஆனதற்குப் பின்னருங்கூட, ஏறத்தாழ பல்லாயிரம் விண்ணப்பங்களுக்காக 6, 7 கோடி ரூபாய் பெருமான முள்ள பணத்தை இன்னமும் திருப்பித் தராமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமம் வழங்கப்படுமா? அல்லது பணம் திருப்பித் தரப்படுமா? பணம் திருப்பித் தரப்படுகிறபோது, வட்டி சேர்த்துத் தரப்படுமா என்கிற விவரத்தினை அறிய விரும்புகிறேன்



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளுக் கடை, சாராயக் கடைகளை எடுத்து விட்டு 1—1—1987 முதல் மதுவிலக்கு கொண்டுவருகிற கொள்கையை அறிவித்ததனால் கொஞ்சம் காலதாமதமானது. ஆனால் இந்த உரிமம் வழங்குகிற முழு உரிமையும் கலால் மதுவிலக்கு ஆணையாளருடையது. அவர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். வருகிற ஏப்ரல் முதல் வாரத்திலிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்படும். (குறுக்கீடு)

**திரு. எஸ். இராசாராமன்:** பாயின்ட் ஆப் ஆர்டர். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். ஒருவருக்கு சொன்னதுதான் மற்றவருக்கும். திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் கேட்டதற்கு இப்போதுதான் சொன்னேன். திரு. இராசாராமன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலே எழுப்பிய அனைத்தும் நீக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்புகள்

(அ) சென்னை மாநகராட்சி தெரு மின் விளக்குகள் குறித்து.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சி, மின்துறைப் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், தெரு மின் விளக்குகள் சரிவர எரியாமல் இருப்பதாலும், மின் கேபிள்கள் அடிக்கடி பழுதடைவதால் சென்னை மாநகர மக்கள் 'தெரு மின் விளக்கு' வசதியின்றி பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மார்ச் 26

அறிக்கை

சென்னை நகரத்தில், தெரு விளக்குகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகரின் எல்லையில் மட்டும் 44,606 தெரு விளக்குகள் உள்ளன. மேலும் சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள 12 பஞ்சாயத்து பகுதிகளில் 7,454 தெரு விளக்குகள் உள்ளன; இவற்றில் சோடியம் ஆவி விளக்குகள், மெர்குரி ஆவி விளக்குகள், குழல் விளக்குகள், மிகு ஒளி விளக்குகள் மற்றும் இதர விளக்குகள், நகருடன் இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள விளக்குகள் ஆகியவை அடங்கும்.

(2) அவைகளில் 6,478 விளக்குகள் தமிழ்நாடு மின் வாரிய மின் இணைப்பில் இருந்தது, தமிழ்நாடு மின் வாரியம் பராமரித்து வருகிறது. மேற்கண்ட விளக்குகளுக்கு உண்டான பராமரிப்பு செலவு, மின்சார பயனீட்டளவு சென்னை மாநகராட்சியால் செலுத்தப்படுகின்றன. எற்கனவே மேற்படி 12 பஞ்சாயத்துகளில் 976 தெரு விளக்குகள், சென்னை மாநகராட்சியில் தரத்திற்கேற்ப மாறுதல் செய்யப்பட்டு, மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(3) சென்னை மாநகராட்சியில் தெரு மின் விளக்குகளுக்காகப் போடப்பட்ட புதை மின் கம்பிகள் பல இடங்களில் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், அவைகள் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேல் போடப்பட்டிருப்பதாலும், தெரு மின் விளக்குகள் அடிக்கடி எரியவில்லை. பழுதடைந்த நிலையில் உள்ள புதை மின் கம்பிகளை மாற்றி அமைக்க ஏறத்தாழ ரூ. 19 கோடி தேவைப்படும். எனினும் இத்திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்படவிருக்கிறது.

(4) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளுக்கும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதிகளுக்கும் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

(5) அதிக வெளிச்சம் பெற போக்குவரத்து நெரிசல் உள்ள தெருக்களுக்கு, சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, கிட்டத்தட்ட 3,700 சோடியம் ஆவி விளக்குகள் மாநகரின் நெரிசல் மிக்க பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன.



1986 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

(6) 1986-87-ல், வரவு செலவுத் திட்டத்தில் தெரு விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, புதை மின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ. 323.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 சோடியம் வேப்பர் விளக்குகள் மாநகரின் ஒன்பது பகுதிகளில் பொருத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(7) மேலும் 48 குடிசைப் பகுதிகளில் 658 மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் 1,150 விளக்குகள் பொருத்தப்படும்

(8) தற்போது சென்னை மாநகராட்சி மின்துறை பிரிவில் மேல் மட்டப் பணியாளர்களைத் தவிர, கீழ்க்கண்ட அடிப்படை பணியாளர்கள் உள்ளனர்.

| | |
|---|---|
| விசை இயக்குபவர் | 306 |
| காவலாளர்கள் | 50 |
| தொழிலாளர்கள் | 599 |
| ஆக மொத்தம் | 955 |

(9) தெரு விளக்குகளின் எண்ணிக்கை சமீப காலத்தில் அதிகரிக்கப்பட்டதின் விளைவாக, மேற்கண்ட அடிப்படை பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும், அதற்காக 27 விசை இயக்குபவர்களையும், 210 தொழிலாளர்களையும், 50 காவலாளர்களையும் புதியதாக நியமிக்க சென்னை மாநகராட்சி, அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. கூடுதல் பணியாளர்களை நியமிக்க ஆண்டு ஒன்றுக்கு ரூ. 33.17 லட்சம் செலவாகும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

(10) மேற்கண்ட சென்னை மாநகராட்சியின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல அந்தப் பணியாளர்கள் நியமனத்தை அரசு விரைந்து நிறைவேற்றினால் இந்த குறைபாடுகள் குறையும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த பணியாளர்கள் நியமனத்தை விரைந்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 26

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாநகராட்சி ஆணையாளரிடமிருந்து குறிப்பு வந்து நிதித் துறையால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் முடிவு எடுத்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கொல்லாபுரம்—கடகம் சாலையில் வஞ்சியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் கோட்டம், நன்னிலம் உட்கோட்டத்தின் கீழ் கடகம்—கொல்லாபுரம் சாலை மேம்பாடு மற்றும் அச்சாலையிலுள்ள ஒரு பாலமும் கட்ட உரிய பொருட்கள் அனைத்தும் வாங்கப்பட்டும், அவ்வேலை கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கொள்ளப்படாமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்ட கொல்லாபுரம் கடகம் சாலையில் வஞ்சியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். பணிக்கு 1983-84-ஆம் ஆண்டில் ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாற்றில் தொடர்ந்து நீர் வந்து கொண்டு இருந்த காரணத்தால் கள விவரங்கள் மற்றும் மண் பாகுபாடு எடுக்க உடனடியாக முடியவில்லை. தவிரவும் நீர் வழிக் கணக்கீட்டிற்கு பொதுப்பணித் துறையின் ஒப்புதல் பெற வேண்டி இருந்தது. தற்சமயம் பொதுப்பணித்துறையின் ஒப்புதலும் வந்து விட்டது. ஒப்புதல் பெறப்பட்டு மற்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு ரூ. 16 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அங்கீகாரம் விரைவில் வழங்கப்பட உள்ளது. இந்த அங்கீகாரம் இல்லாமல் பாலம் கட்டுவதற்கான பொருட்கள் எதுவும் வாங்க முடியாது. எனவே இவ்வேலைக்கு ஆன எந்த பொருட்களும் இதுவரை வாங்கப்படவும் இல்லை.



1986 மார்ச் 26]

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரும்புப் பொருட்கள் அனைத்தும் வாங்கியாகி விட்டது. இரும்புப் பொருட்கள் வாங்கி இப்போது பெருவழித் துறை அலுவலகத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறது. பொருட்கள் வாங்கியதற்கு பின்பு கூட தலைமைப் பொறியாளரிடமிருந்து மதிப்பீட்டு ஒப்புதல் வராத காரணத்தால்தான் வேலை தொடர்ந்து செய்யவில்லை. வேறு ஒன்றும் இல்லை. எனவே, தலைமைப் பொறியாளரிடமிருந்து மதிப்பீட்டு ஒப்புதல் அனுப்பினால் இந்த வேலையை விரைவில் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவாக எடுக்கும். ஆனால் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிற குறிப்பில் எந்தப் பொருளும் வாங்கப்பட வில்லை என்று கொடுத்து இருக்கிறார்கள். இப்படி குறிப்பு கொடுத்து விட்டு இதற்கு மாறாக அங்கே பொருள்கள் வாங்கி வைக்கப்பட்டு இருக்குமானால், அவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளிக்கிறேன்.

(அ) தமிழ்நாடு அரசின் 1965-66, 1966-67, 1968-69, 1969-70 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகள் கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது சமூக நலத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய இருபத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) தமிழ்நாடு அரசின் 1963-64, 1964-65, 1965-66, 1969-70, மற்றும் 1970-71 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மார்ச் 26

(ஏழாவது பேரவை) யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது ஊர் வளர்ச்சித் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய இருபத்தி இரண்டாவது அறிக்கை.

### 5. அறிவிப்புகள்.

#### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1986-87 (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1986-87 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

" In pursuance of Article 206, clause (2) read with Article 203, clause (3) of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1986-87 ".

### 6. முன்பண மானியக் கோரிக்கைகள் 1986-87 வாக்கெடுப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

இன்றைக்கு காலையிலே கேள்வி நேரத்தில் பிரமலைக் கள்ளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற பணம் செலவிடப்படவில்லை. 4,300 ரூபாய் ஒரு வீட்டுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த ரூபாயில் ஒரு வீடு கட்ட முடியாது. அவர்கள் சில இடங்களில் அரிசன சமுதாயத்தை விட மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரிசனங்களுக்கு 6,000 ரூபாய் செலவில் வீடு கட்டிக் கொடுக்கிறோம். ஆகவே, இந்தத் தொகையை 6,000 ரூபாயாக உயர்த்தி, வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். ஆனால் இன்னும் அதற்கு சாங்ஷன் செய்யவில்லை. அவர்களுக்கு 6,000 ரூபாய் அளவில் வீடு கட்டிக் கொடுக்க தேவையான பணத்தை ஒதுக்கி, வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. நான் 'ஃப்ளைட்டில்' வரும்போது பார்த்தேன். நிறைய தரிசு நிலம் இருக்கிறது. தரிசு நிலங்களில் மரம் வளர்க்க 76 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். எங்கெல்லாம் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு சொந்தமான நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் மரங்களை நடவேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கு இந்த 76 இலட்சம் ரூபாய் போதாது. இன்னும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கல்விக்காக இந்த ஆண்டு 551 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறீர்கள். நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. இதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் இன்றைக்கு கல்வியின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது; தரம் கீழே போய்க் கொண்டிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையிலே கூட மாணவர்கள் பார்த்து எழுதுகிறார்கள். அவர்கள் பார்த்து எழுதுவதற்கு ஆசிரியர் களும் அனுமதி அளிக்கிறார்கள். அதேநேரத்தில் ஆசிரியர்கள் அந்த குழந்தைகளுக்கு சரியாக பாடம் சொல்லிக் கொடுப்ப தில்லை என்ற குறைபாடு இருக்கிறது. பல இடங்களில் பார்த்து எழுதிக்கூட மார்க் வாங்க முடியவில்லை மாணவர்களால். இன்றைக்கு எம்.ஏ. படித்தவர்களால் கூட ஒரு மனுவை சரியாக எழுத முடியவில்லை. கிரமட்டிக் மிஸ்டேக் நிறைய போடுகிறார்கள். எம்.ஏ. படித்த ஒருவர் எனக்கு ஒரு மனு கொடுத்தார். எஸ்.எஸ்.எல்.சி. படித்த நானே அதிலே திருத்தம் செய்ய வேண்டிய நிலை இருந்தது. அவ்வளவு தவறுகள் காணப்பட்டன. உடனே அவரைக் கூப்பிட்டு தமிழிலே எழுதிக் கொடுக்கச் சொன்னேன். தமிழிலும் சரியாக எழுத முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் ஆசிரியர்கள் சரியாக பாடம் நடத்தாததுதான். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். அமைச்சர் அவர்கள் அதற்கு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு பல்வேறு இடங்களிலே ஐ.சி.டி.எஸ். (இன்டகிரேட்டட் சைல்டு டெவலப்மென்ட் ஸ்கீம்) திட்டத்தின் கீழ் மத்திய சர்க்கார் நிறைய பணம் ஒதுக்கி யிருக்கிறது. அந்தத் திட்டம் தமிழ்நாட்டில் பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற முறை கிட்டத்தட்ட 45 யூனியன்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தி யிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஐ.சி.டி.எஸ். திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசு இவ்வளவு ஒதுக்கியிருந்தாலும் மாநில அரசும் இதற்கு என்று பணம் ஒதுக்கி, சில பின்தங்கிய யூனியன்களில் கிளஸ்டர்களை ஆரம்பிக்கலாம். 2—4 வயது சிறுவர்கள், 3—5 வயது குழந்தை

களுக்கு என்று 100, 200 கிளஸ்டர்களை ஆரம்பிக்கலாம். இப்படி ஆரம்பித்தால் குழந்தைகள் பராமரிப்பு நல்ல முறையில் அமையும், தாய்மார்கள் பிரச்சனை குறையும். ஆகவே, ஆங்காங்கே பால்வாடி மையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்கை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறீர்கள். உண்மையிலே மது என்றால் என்ன என்றே தெரியாது இருந்த இளைஞர்கள் இன்றைக்கு குடித்து, குட்டிச் சுவராகி, சீரழிந்து, அழியக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

இந்த மதுவிலக்கினை அமல்படுத்துவோமேயானால் 250 கோடி ரூபாய் நமக்கு நஷ்டம் ஏற்படும், வருமானம் குறையும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வருமானம் குறைந்தால கூட பரவாயில்லை. அந்தப் பணத்தையும் நீங்கள்—எங்கள் கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்—அந்த அடிப்படையிலே நீங்கள் மத்திய அரசை அணுகினால், மத்திய அரசிடம் கேட்டால். . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று திரு. சித்தன் அவர்கள் சொல்லவில்லை. ஏசுநாதர்தான் அவ்வாறு சொன்னார்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஏசுநாதரும் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. ஆனால் • இந்த மதுவிலக்கினால் எத்தனை கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் கூட தயவுசெய்து அந்த மதுவிலக்கினை முழுமையாக அமல் நடத்துங்கள்.

அடுத்து ஃபாரின் மது—விஸ்கி என்றெல்லாம் சொல்கிறார்களே எங்களுக்குத் தெரியாது—அந்த ஃபாரின் மதுவைக் கூட விற்க முடியாத அளவுக்கு தடை செய்து அவற்றை முழுமையாக ஒழித்தாலொழிய மக்கள் பிரயோசனம் அடைய முடியாது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குண்டான பணத்தையும் மத்திய



அரசிடமிருந்து நீங்கள் கேட்பீர்களேயானால் நிச்சயமாக அவர்கள் கொடுத்து உதவுவார்கள் என்ற நிலைமையை நான் தெரிவித்துக் கொண்டு என்னுடைய தொகுதியிலே உள்ள பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றே நான் இதுபற்றித்தான் கேட்டேன். மதுவிலக்கினை அமல்படுத்தினால் அதனால் ஏற்படக்கூடிய இழப்பை மத்திய அரசு பணம் தந்து சரிக்கட்டுமா? அதற்கான உறுதிமொழியை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வழங்குவார்களா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு நேற்றே நாங்கள் பதில் சொல்லி இருக்கிறோம். காங்கிரஸ் கட்சி தமிழகத்தை ஆண்ட நேரத்தில் மதுவிலக்கினால் ஏற்பட்ட நட்டத்தை மத்திய அரசிடம் கேட்காமலேயே அப்போதிருந்த குறைந்த வருவாயிலே சரிக்கட்டி பல முன்னேற்றகரமான திட்டங்களை காங்கிரஸ் கட்சி தமிழகத்திற்குக் கொடுத்து இருக்கின்றது. ஏன் அந்த வழியை நாமும் இப்போது பின்பற்றக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இப்போது சொல்வது நேற்று சொன்னதிலிருந்து கொஞ்சம் மாறுபடுவது போல் தெரிகிறது. நீங்கள் கேட்டால் நாங்களும் சேர்ந்து குரல் கொடுப்போம் என்று அவர்கள் சொல்லி, பிறகு நானும் அதற்கு நன்றி சொன்னதற்குப் பிறகு இன்றைக்கு வேறு திசையில் போவது சரியில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ மத்திய அரசு கொடுக்கவில்லை; ஆனால் எங்களுக்கு இழப்பு ஏற்படுகிறது; ஆகவே தான் நாங்கள் மதுவிலக்கைக் கொண்டு வரவில்லை என்று சொல்லி விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்ச்சியாலேதான் நான் சொல்கிறேன். கேளுங்கள்; நாங்களும் சேர்ந்து சொல்கிறோம். அது வேறு விஷயம். ஆனால் இந்த இழப்பீட்டைப் பெறாமலேயே நடத்திக் காட்டியிருக்கிறோம் என்ற அதையும் சொல்ல நான் விரும்புகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** நிச்சயமாக நீங்கள் கேட்டால் கொடுக்கப்படும். அதுதான் நான் சொல்கிற உறுதி. உங்களோடு நாங்களும் பேசுவோம். அவர் கேட்டதால் நான் இந்த பதிலைச் சொல்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் சொல்கிறேன். ஏற்கெனவே என்னுடைய தொகுதியாக இருந்த நிலக்கோட்டை தொகுதி என்னுடைய சொந்தத் தொகுதி; அது நான் பிறந்த தொகுதி. அங்கே 1000 வீடுகள் கட்டித் தருவதாக இருந்து அதற்கு வேண்டிய நிலம் மட்டும் ஆர்ஜிதம் செய்யப் பட்டது. 78 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டது. இதுவரையிலும் அந்த வேலை நடக்கவில்லை.

அடுத்து பழனி ஒரு மிகப் பெரிய நகரம். அப்படி மிகப் பெரிய நகரமாக பழனி இருந்தாலும் கூட அங்கே கோவிலிலே முருகப் பெருமான்தான் இருக்கிறாரே தவிர அந்த ஊர் எந்த வழியிலும் முன்னேற முடியவில்லை. ; முன்னேற்றத்தைக் காண முடியவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 80 இலட்சம் ரூபாய் சென்ற பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது வீடுகள் கட்டுவதற்காக. அதற்கு 34 ஏக்கர் நிலம் தேவை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை இலாக்காவிலே முடுக்கிவிட்டு, வெகு விரைவிலே அந்தமாதிரி வேலைகளை எல்லாம் செய்வதற்கான வழிவகைகளைச் செய்தால் உண்மையிலேயே மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு பேசுவதற்கு எனக்கு அனுமதி கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன். இந்த மன்றத்திலே உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கப்படுகிறதா ? இன்றைக்கு நம்முடைய மாமன்றத்தில் இருக்கின்ற பெண் உறுப்பினர்கள் எல்லாம் ஒரே மாதிரியான புடவையோடு. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதெல்லாம் பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷனில் வராது. சீருடைகள் எல்லாம் வழங்கப்படுவதில்லை. . . (குறுக்கீடு) அது அவரவர் களுடைய விருப்பம்.



**திரு. மா. சின்னராசு :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது ஆரம்பத்தில் தவறான தகவலைத் தெரிவித்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கேட்கிற கொள்கையைக் கைவிட்டு விட்டார்கள் என்று பேசி இருக்கிறார்கள். திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்களே ஒழிய மாநில உரிமைகளைக் கேட்கின்ற கொள்கையைக் கைவிடவில்லை. மாறாக, அவர் கேட்ட உரிமையை இன்று ஆந்திராவும், கர்நாடகமும் மேற்கு வங்காளமும் கேட்டுக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் இருந்திருந்தால் இதைக் கேட்டிருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அவர்கள் எல்லோருக்கும் தலைவராக விளங்கினார்கள். அவர்கள் ராஜ்ய சபைக்குச் சென்ற பிறகு தான் வடநாடு, தென்னாடு என்பதைக் கைவிட்டு அவற்றைக் குழிதோண்டிப் புதைத்தார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக மிகத் தவறான கருத்தை அம்மையார் அவர்கள் அரங்கேற்றுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் அப்போதும் அவர்கள் சொன்னார்கள். பிரிவினை கைவிடப் பட்டு இருக்கிறதே தவிர பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே தான் இருக்கின்றன என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் எப்போதும் மாறுபடவில்லை. அவர்கள் மறைவதற்கு முன் இறுதியாக எங்கள் மனதிலும் அதைத்தான் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையாரை விட அறிஞர் அண்ணாவை நன்றாக

அறிந்திருக்கிறோம் என்ற காரணத்தாலே நான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது, அறிஞர் அண்ணா அவர்கள் மறைவிற்கு முன்னால் கடைசியில் எழுதிய கடிதத்தில் உள்ள கருத்தைத்தான் ஏற்றுச் சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் தான் அண்ணா அவர்களின் கருத்து இருந்தது. திராவிட நாடு பிரிவினை என்பது வேறு; மாநிலத்திற்கு அதிக உரிமைகள் அதிக அதிகாரங்கள் பெறுகின்ற தன்மைகள் வேறு.

திரு. பொ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுகின்ற வாய்ப்பினை பெற்றமைக்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்; நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வரவு செலவு திட்டம் தமிழகத்திலே உள்ள ஏழை எளிய மக்களாலும், வியாபாரிகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கம் போல மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த பட்ஜெட்டிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொல்கிற அளவில் பழைய பல்லவியையே பாடியிருக்கிறார்கள். சிலர் இந்த பட்ஜெட்டில் ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்த மாநிலத்திலே பெரிய தொழிற்சாலைகளே இல்லை, அல்லது பெரிய திட்டங்களை நிறைவேற்ற வரிகளை உயர்த்தியாவது செய்திருக்கலாம், அந்த முயற்சியை இந்த அரசு கைவிட்டு விட்டது என்று கூட சில மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசைப் பற்றி பேசக்கூடும். இருந்தாலும் கூட இந்த அரசு ஏழை எளிய மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்துகின்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு வரியை குறைத்திருப்பதை பாமர மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

கடந்த ஐந்தாண்டுக் காலமாக வறட்சி அல்லது பெரும் வெள்ளம் அல்லது கடும் மழையால் தமிழகம் பூராவும் பாதிக்கப் பட்டு வந்திருப்பதை அனைவரும் அறிவோம். இந்த ஆண்டு ஒருபுறம் பெரும் வெள்ளத்தால் உயிர் இழப்பும் பொருள் இழப்பும் பெருமளவில் ஏற்பட்டது. மற்றொரு புறம் மழையின்மையால், நீர்ப்பாசன வசதி இன்மையால் கொடிய வறட்சி நிலைமை ஏற்பட்டு தென் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சியாலும்,



விவசாயப் பெருங்குடி மக்களின் கடுமையான உழைப்பினாலும் நிலைமை திறமையாக சமாளிக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் இலக்கை அடையும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறோம். இருந்தாலும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளினாலும், இழப்புகளினாலும் நமது வளர்ச்சிப் பணிகள் பெரிதும் பின்னடைந்துள்ளன. போர்க் கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் நடைபெறுகின்றன. பாதகமான பருவ நிலைமையின் காரணமாக விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தாலும் நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலைமை இருந்து வருகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

சர்க்கரை, அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை சற்று கடுமையான நிலையிலும், அவற்றை பொது விநியோகத்தின் மூலம் குறைந்த நியாயமான விலைக்கு வினியோகித்ததின் காரணமாக பொது மக்களின் துன்பங்கள் தவிர்க்கப்பட்டன. இப்படி அத்தியாவசியப் பொருள்களை பொது வினியோகத்தின் மூலம் குறைந்த விலையில் வழங்கியதால், அரசுக்கு 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. அதையும் கூட இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மறந்துவிட்டு, தங்கள் ஆட்சிக் காலத்தில் மக்காச் சோளத்தையும், மரவெள்ளிக் கிழங்கையும் போட்டதையோ, டெக்னிக் கலரில் 5 அவுன்சு அரிசி போட்டதையோ, அல்லது எலிக்கறிச் சாப்பிடச் சொன்னதையோ முற்றிலும் மறந்துவிட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை கேலியும் கிண்டலும் செய்கிறார்கள்.

ஏழை எளிய குழந்தைகள், கிராமப்புறங்களிலே உள்ள எளிய குழந்தைகள், பயன் பெறத்தக்க வகையில் கொண்டு வரப்பட்ட திட்டமான முதலமைச்சர் சத்துணவு திட்டத்தை விரிவுபடுத்தி இப்போது பாடப் புத்தகங்களும், இலவச சீருடைகளும் சேர்த்து வழங்கக் கூடிய சிறப்பு திட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தைக் கூட ஆரம்பத்திலே பலர் முழுவதுமாக நிறைவேற்றப்படுமோ படாதோ என்று பல ஐயப்பாடுகளை உள்ளத்திலே கொண்டு அதை வெளிப்படுத்தி யிருந்தபோதிலும், அந்த நல்ல திட்டங்கள் இன்று வெற்றி பெறும் நிலைமையில், அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்று நடைபெறுவது நமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

[திரு. பொ. அன்பழகன்] [1986 மார்ச் 26

இந்தத் திட்டங்கள் அத்தியாவசிய மூன் உரிமைத் திட்டங்களாக உருப் பெற்றிருப்பதும் இந்த மாநிலத்திற்கு பெருமை தரக் கூடிய ஒன்றாகும்.

ஆதித் திராவிடர், பழங்குடியினர், நரிக் குறவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய ஏழை எளிய மக்கள் போன்றவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தை பற்றி இந்த வரவு செலவு திட்டத்தில் சொல்லியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்கு கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலமாக ரூபாய் 60 கோடி அளவிற்கு வருவாய் இழப்பு அரசுக்கு ஏற்பட்டாலும் அதை அமலாக்க அரசு எடுத்த முடிவினை நான் பாராட்டுகிறேன். அதற்காக தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துச் சலுகைகள் காரணமாக அரசுக்கு ரூ. 20 கோடிக்கு மேலாக வருவாய் இழப்பு ஏற்படக் கூடும். எனினும் இச்சலுகைகள் காரணமாக உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்த்தாலும் . . . ." என்று குறிப்பிட்டு 16 இனங்களுக்கு வரிச் சலுகைகளை சொல்லியிருக்கிறார்கள் நிதிநிலை அறிக்கையிலே. ஆகவே அப்படி வருவாய் இழப்பு ஏற்படும் என்று தெரிந்திருந்தும் வரிகளில் சலுகை கொடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம், அவர்களின் தாய் உள்ளத்தை உணர்ந்து.

இன்றையதினம் இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ்ப் பெண்களின் கற்பு சூறையாடப்படுகின்றது. தமிழர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள தமிழ் பெண்கள் தங்கள் கற்பை காப்பாற்றிக் கொள்ள, தமிழகத்தில் வந்து தஞ்சம் புகுந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தாய் உள்ளத்தோடு அரவணைத்து அவர்களுக்கு பாதுகாப்பு அளித்து, அதற்கென்று தனி அமைச்சரை நியமித்து அந்த மக்களை வாழ வைத்து இருக்கிறார்கள். இந்த இனக் கலவரம் நடப்பது இலங்கையில் இன்று நேற்றல்ல. நீண்ட காலமாக நடந்து வருகிறது.



1986 மார்ச் 26] [திரு. பொ. அன்பழகன்]

இன்றையதினம் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது. கடந்த காலத்தை மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணி இன்றைய தினம் எல்லா எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அனுதாபப்படுவதைப் போல பேசுவதை நான் பார்க்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இலங்கையில் நடைபெற்ற படுகொலையை கண்டித்தும், நமக்குச் சொந்தமான கச்சத்தீவை தாரைவார்த்த நேரத்தில் அதைக் கடுமையாக எதிர்த்தும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவில் இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சரும், நானும் இன்றைய மறுவாழ்வுத் துறை அமைச்சரும் கண்டன தீர்மானத்தை கொண்டு சென்றோம். புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதியோடு அந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதைக் கண்டித்து தமிழகம் எங்கும் கண்டனப் பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தியது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

இராமேஸ்வரத்தில் வாழ்கிற மீனவர்கள் கச்சத் தீவிற்குத் தான் மீன் பிடிக்கச் செல்வார்கள். காரணம் அங்கே தான் கொழுத்த விலையுயர்ந்த இறால் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும். அது நம்முடைய மீனவர்கள் இளைப்பாறுகிற பகுதியும் ஆகும். தமிழகத்தின் கடற்கரைப் பகுதியில் பாதுகாப்பான பகுதியும் அதுவாகும். ஒரு காலத்தில் அந்தக் கச்சத் தீவு பகுதி சேது சமஸ்தானம் இராமநாதபுரம் இராஜாவின் எல்லைக்கு உட்பட்டிருந்ததாகச் சொல்கிறார்கள். அரண்மனைக்கு தேவையான மூலிகைகளை அந்தக் கச்சத் தீவிலிருந்து தான் பறித்து வந்ததாகவும் சொல்கிறார்கள். நமக்குச் சொந்தமான அந்தப் பகுதியை இன்றைக்கு நாம் இழந்திருக்கிறோம். தமிழகத்திற்குச் சொந்தமான அந்தப் பகுதியை இலங்கை அரசுக்குக் கொடுக்கக் கூடாது. அதனை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கண்டனத் தீர்மானத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் முதன் முதலில் நிறைவேற்றியது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கச்சத் தீவை நாம் இழந்த காரணத்தால் இன்றைய தினம் இராமேஸ்வரம் பகுதியில் வாழ்கிற மீனவர்கள் அங்கே சென்று மீன்பிடித்து உயிரோடு திரும்ப முடியாத அவல நிலையை கண்கூடாகப் பார்க்கிறோம். இராமேஸ்வரம் பகுதியில்

[திரு. பொ. அன்பழகன்] [1986 மார்ச் 26

இன்றையதினம் மீன்பிடித்து தொழில் செய்ய முடியாத காரணத்தால் அங்கே வாழ்கிற மீனவர்கள் பெண்டு பிள்ளைகளோடு பட்டினியால் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்று புரியவில்லை. இலங்கையில் நடைபெறும் படுகொலையைத் தடுக்கவும், நம்முடைய சகோதரிகளின் கற்பை பாதுகாக்கவும் அதற்கு ஒரு நிரந்தர முடிவை கண்டாக வேண்டும். எல்லோரும் இதில் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வளர்மதி அவர்கள் பேசுகிறபோது இலங்கைக்கு இந்திய அரசு படை அனுப்பினால் தவிர இதில் முடிவு வராது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் மத்திய அரசு படை அனுப்ப வேண்டும் என்பதல்ல. நீங்கள் அனுமதித்தால், மத்திய அரசு அனுமதி அளித்தால் இராமேஸ்வரம் பகுதியில் வாழ்கிற மறவர் கூட்டமே அந்தச் சிங்களவர்களை அடக்கி அங்கே வாழ்கிற தமிழர்களை வாழ வைக்க முடியும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அங்கே ஏராளமான கிராமங்களில் ரோடு வசதி, தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக ஆர். எஸ். மங்களம் ஒன்றியத்தில் ஆலங்குடியிலிருந்து வாடி-நல்லூர், பூக்குறிச்சி, திருப்பேர்வளை, பிடாரநங்கல், விழிமார், கைக்குடி வழியாகச் செல்கிற சாலையில் கிராவல் மட்டம் போட்டு பேருந்து செல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நீண்ட காலமாக அந்த மக்கள் கோரி வருகிறார்கள். அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல செவ்வாய்பேட்டை—ஆலந்தூர் வழி கோவிந்த மங்கலம் சாலையில் கிராவல் மட்டப் பரப்பி அந்தப் பகுதியில் பஸ் விடப்படாமல் பல ஆண்டு காலமாக அந்தப் பகுதி மக்கள் அவதிப்படுகிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இராயனூர் ஊராட்சி சித்தனூர் கிராமத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருந்தாலும் கூட அங்கே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. கோவிந்தமங்கலம் ஊராட்சி



1986 மார்ச் 26] [திரு. பொ. அன்பழகன்]

வளவனூர் ஊராட்சியிலிருந்து தண்ணீர் வழங்க உடனடியாக நடவடிக்கையெடுத்து உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொண்டியிலிருந்து திருவாடானை, முட்டையூர், செவ்வாய்பேட்டை, கோவிந்தமங்கலம் வழியாக பிடாரநங்கலுக்கு ஒரு சிட்டி பஸ் விட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரி வருகிறார்கள். இப்போதாவது அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதைப்போலவே அனந்தூர் சுக்கிரப்பட்டி, தேவகோட்டை, தேவிகோட்டம் வழியாக ஆனந்தூரிலிருந்து ஆர்.எஸ். மங்களம் வரையில் உள்ள இப்படிப்பட்ட கிராமங்களுக்கு இன்னும் இணைப்புச் சாலைகள் போடப்படாமல் இருக்கிறது. அதையும் இனிமேலாவது செய்ய வேண்டும் என்று நான் உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆனந்தூரை மையமாகக் கொண்டு சுற்றிலும் உள்ள சுமார் 36 பஞ்சாயத்துக்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை நிறைவேற்றிக் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் ஆவலோடு கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனந்தூரிலே தற்போது சித்த மருத்துவமனை ஒன்றுதான் இருக்கிறது. அதனை பல படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவ மனையாக மாற்றித் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஆர். எஸ். மங்களம் ஒன்றியத்தில், 50 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. தற்போது பெரும்பாலான ஊராட்சிகளில் அரசின் நிர்வாகத்திலே இருந்து எட்டாத நிலையில் இருக்கிறது. எனவே இதை இரண்டாகப் பிரித்து இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாக செயல்படுத்துவதன் மூலம் அங்கே நிர்வாகத்தை செம்மைப்படுத்த முடியும் என்பதை இந்தநேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. பொ. அன்பழகன்] [1986 மார்ச் 26

அடுத்து, இளையான்குடியைப் பொறுத்தவரையில், பரமக்குடி-பிராஞ்சனை, வழி இளையான்குடி பகுதிக்கும், பராஞ்சனை-சிவகங்கை, வழி உறைவிட கொண்டான், தொழூர், பஞ்சட்டி, இளையான்குடி பகுதிக்கும், பரமக்குடி-டு-தெற்கு கீரனூர், வழி. இளையான்குடி சிறுவாளை, புளியூர், கல்வழிப்பட்டல், பரமக்குடி-டு-அண்டக்குடி, வழி தகரக்குடி, வழக்காணி, கோட்டையூர், கருத்தம்பன், ஆகிய இடங்களுக்கு நகரப் பேருந்து விடவேண்டும் என்று கடந்த 20 ஆண்டுக்காலமாக மக்கள் போராடி வருகிறார்கள். எனவே இந்தக் கோரிக்கையையும் இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்துவரும் நகரமாக இளையான்குடி நகரத்திற்கும், ஆர். எஸ். மங்களம் நகரத்திற்கும் இன்னும புதிதாக பஸ் ஸ்டாண்டுகள் அமையப் பெறாததால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே இதையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இளையான்குடி தொகுதியைப் பொறுத்தவரையில், இது வரையில் அங்கே எந்தத் தொழிற்சாலையும் வரவில்லை. எனவே அந்தத் தொகுதியில் ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பசும்பொன் முத்துராமலிங்கம், ராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள், கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே இந்த மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இளையான்குடி, ஆர். எஸ். மங்களம் ஆகிய ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. பரிதி இளம்வழுதி]

நான் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது மட்டும்தான் பேசப் போகிறேன். ஆளும் கட்சியில் இருக்கிற நீங்கள், அரசின் சாதனையை எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறீர்கள். அதேபோல் எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் மக்களின் வேதனையை எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். அந்தக் கண்ணோட்டத்தோடு ஜனநாயகம் நமக்கு வழங்கியிருக்கிற அந்த வாய்ப்புகளை மதித்து, எங்களுடைய உரிமைகளை காக்கின்ற தார்மீகக் கடமையை தயவுதாட்சண்யம் இல்லாமல் அவைத்தலைவர் அவர்கள் நிறைவேற்றுவார் என்ற நல்ல நம்பிக்கையோடு, எதிர் வரிசையிலே இருந்தாலும், நாங்களும் இந்த அரசாங்கத்திலே ஒரு அங்கம் என்கிற பொறுப்புணர்வோடு குறைகளைச் சுட்டிக்காட்டுகிறோம்.

குற்றங்களை நாங்கள் எடுத்துக் கூறுகிறோம். அதை ஏற்பதோ, அல்லது அதை எதிர்ப்பதோ, நீங்கள் பெற்றிருக்கிற மன வளத்தை பொறுத்தது என்பதைக் கூறி என்னுடைய கடமையை ஆற்ற முற்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையின் துவக்கத்தில் நாவலர் அவர்கள் 'பெரும்பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு' என்று ஒரு நல்ல நாட்டிற்கு நல்லிலக்கணமாக மிக்கப் பொருள்வளம் உடையதாகவும், எல்லோராலும் விரும்பத் தக்கதாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளைபொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்று வள்ளுவர் அவர்கள் சொல்லியிருப்பதைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் ஒரு நாட்டுக்கு இவை எல்லாம் இருந்தால் மட்டும் போதுமா? மக்களின் வாழ்வு நிறைவு பெறுமா? மக்களின் வளமும் நலமும் இங்கே குடிகொள்ளுமா? என்றால் இல்லை. வெறும் நீர் வளமும், நில வளமும் இருந்தால் மட்டும் போதாது. வல்லவர்களும் நல்லவர்களும் இருந்தால் மட்டும் போதாது. இங்கே இருக்கின்ற அரசும் ஒரு நல்ல அரசாக இருக்க வேண்டும். இல்லை என்றால் எத்தனை வளமும், எத்தனை நலமும் பெற்று இருந்தாலும், அது பயன் அற்றுப் போகும் என்பதற்கு, அதே வள்ளுவர், 'ஆங்கமை வெய்திக் கண்ணும் பயமின்றே வேந்தமை வில்லாத நாடு' என்று கூறியிருக்கிறார்கள். இதைச் சொன்னால் என் மீது நீங்கள் கோபப்படலாம். ஆனால் அதற்காக நான் வருத்தப்படமாட்டேன். ஏனென்றால் 'செயத்தக்க செய்யாமை யால் கெடும்' என்று இதையும் அந்த வள்ளுவரே கூறியிருக்

கின்றார். எனவே எதிர்க்கட்சிக்காரன் என்ற வகையில் எங்களுடைய வேலையை நாங்கள் செய்கிறோம். மத்திய அரசு விதித்திருக்கிற புதிய வரி உயர்வினால் உரம், இரும்பு, நிலக்கரி, ரயில் கட்டணம், டீசல், பெட்ரோல் போன்ற இன்றியமையாத பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது. இது தமிழக அரசின் பொருளாதாரத்தையும், தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்கின்றன என்று மிக கனிவோடும், பெருந் தன்மையோடும், மிகுந்த எச்சரிக்கையோடும் கடுமையான சொல் ஒன்றுகூட தப்பித்தவறிகூட வந்துவிடக் கூடாது என்ற விழிப் புணர்ச்சியோடு கூறி இருக்கிறார். இதிலிருந்து நீங்கள் குடி தழுவி கோலோச்சாமல், டில்லியின் அடி தழுவி கோலோச்சு கிறீர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக தெரிகிறது. இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் எங்கள் ஆட்சியில் யாராவது பட்டினியால் செத்தார்களா, ஒருவரும் சாகவில்லையே, இது எங்கள் ஆட்சியின் சாதனை அல்லவா? என்று அவர் சொன்னார். ஆம் விவாதத்திற்காக ஏற்றுக்கொள்கிறேன். தொடர்ந்து போலீஸ் லாக்கப்பில் சாகிறார்களே, தொடர்ந்து துப்பாக்கி சூட்டிலே சாகிறார்களே அது எதைக் காட்டுகிறது? போலீசாரின் வீரத்தையும், உங்கள் ஆட்சியின் கீர்த்தியையும் காட்டுகிறது. இதையும் உங்கள் ஆட்சியின் சாதனைப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாமே ; எங்கள் ஆட்சியில் விவசாய உற்பத்தி பெருகி இருக்கிறது; தொழில் உற்பத்தி பெருகி இருக்கிறது; மின் உற்பத்தி பெருகி இருக்கிறது; தனி மனிதனின் வருமானம் உயர்ந்திருக்கிறது ; வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து இருக்கிறது. இங்கே வறுமைக் கோட்டிற்கு கீழே வருபவர்களே கிடையாது என்று சொல்வீர்களேயானால் அப்படிப்பட்ட புள்ளி விவரங்களைத் தருவார்களேயானால் ஐயோ இந்த ஆட்சியின் மாட்சிமையைப்பாட கம்பன் இல்லையே என்று நாம் கவலைப் படலாம் ; ஆனால் இந்த ஆட்சியின் அவல நிலையை நாங்கள் எடுத்துச் சொன்னால் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு சொல் கிறோம் என்று கூறலாம். ஆனால் எந்தக் கட்சியையும் சாராத ஆடிட்டர் ஜெனரலே சொல்கிறபோது, அவர் என்ன சொன்னார் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தை அந்தந்த மாநிலத்தின் தாய் மொழியில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான செலவை மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. இதன் அடிப்படையில்





இந்திய அரசியல் சட்டத்தை நம்முடைய தாய் மொழியான தமிழில் மொழி பெயர்க்கும் பணி மாநில ஆட்சி மொழி கமிஷனிடம் 1977-78 ஆம் ஆண்டு ஒப்புவிக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்தப் பணி முடிவடைந்தது. 1979-ல் முடிவடைந்த அந்தப் பணியை நம்முடைய மாநில அரசும் சரிபார்த்து மொழி பெயர்ப்பு சரியாக இருக்கிறதென்று 1980 நவம்பரில் ஒப்புதல் அளித்தது. இதை வெளியிடுவதற்கு இந்திய அரசாங்கமும் 1980 டிசம்பரில் அங்கிகாரம் அளித்தது. உடனே நம்முடைய மாநில அரசு அந்த தமிழ் மொழி பெயர்ப்பை மூன்று ஆயிரம் காப்பிகள் அச்சிட 1981 ஜனவரியில் உத்தரவு பிறப்பித்தது. சென்னையிலுள்ள அரசு அச்சகத்தில் இந்தப் பணி தொடங்கி அவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்திலே முடிவடைந்தது. அந்தப் புத்தகம் பைண்டிங் செய்யப்பட வேண்டுமென்பதைத் தவிர, பாக்கி எல்லா வேலைகளும் முடிவடைந்து விட்டன. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபாய் 1,31,000. இந்த நிலையில் 1981 செப்டம்பர் மாதத்தில் இந்த மொழி பெயர்ப்பில் பெரும் தவறுகள், பிழைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அரசாங்கம் அக்டோபர் மாதத்தில் ஒரு கமிட்டியைப் போட்டு, அந்த மொழி பெயர்ப்பிலே உள்ள குற்றங்களையும், குறைபாடுகளையும் கண்டுபிடித்து களைந்து, நல்ல முறையில் உருவாக்க ஆலோசனை கூறி, மூன்று வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது. ஆனால் அந்த கமிட்டி 1984 ஜூலை மாதம் வரை அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. இந்த அரசியல் சட்டத்தின் பிழைகள் நிறைந்த அந்த மொழி பெயர்ப்பு அப்படியே கிடக்கிறது. இதனால் ரூபாய் 1,31,000 இழப்பு. இந்தக் காரியத்தை சரியாக செய்யாத காரணத்தால் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி தாருங்கள் என்று மத்திய அரசாங்கத்தையும் கேட்க முடியவில்லை. இந்த வெட்கக்கேடான விவரங்களை தமிழாய்ந்த நாவலர் அவர்களே, உங்கள் அரசு ஒழுங்காக தமிழ் மொழி பெயர்ப்புகூட செய்ய முடியாத நிலையிலே இருக்கிற தென்று ஆடிட்டர் ஜெனரலே சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த லட்சணத்தில் இந்த அரசை செயல்திறன் அற்ற அரசு என்று சொன்னால் ஆளும் கட்சியினருக்கு கோபம் வருகிறது. எதிர்க் கட்சியினர் மீது சீறிப் பாய்கிறார்கள். 'தமிழுக்கு அமுதென்று பேர் ; அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று

[திரு. பரிதி இளம்வழுதி] [1986 மார்ச் 26

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார். அப்படிப்பட்ட தமிழை மொழி பெயர்ப்பதில் இத்தனை குளறுபடிகளா? நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு சினிமாவில் பாடினார்கள்; தாய் மேல் ஆணை, தமிழ் மேல் ஆணை, குருடர்கள் கண்ணை திறந்து வைப்பேன்' என்று அப்படிப் பாடியவரின் ஆட்சியில் நம்முடைய உயிரினும் மேலான தமிழ் மொழியை மொழி பெயர்ப்பதில் இந்த அரசாங்கமே குருடாகி விட்டதே என்பதை நினைக்கும்போது உண்மையிலே எங்களுக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. நான் கேட்கிறேன், தவறாக மொழி பெயர்த்தவர்கள் மீதும், அதை ஆராயாமல் அனுமதி அளித்தவர்கள் மீதும் நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? தவறுகளை ஆராய்ந்து 3 வாரங்களுக்குள் அறிக்கையை தாருங்கள் என்று ஒரு கமிட்டியை நியமித்தீர்களே, மூன்று ஆண்டுகள் ஆகியும் அறிக்கை தராத அந்த ஆமை வேக கமிட்டியின் மீது எடுத்த நடவடிக்கை என்ன? இதை செயலற்ற தன்மை என்று சொல்லாமல் வேறு எப்படி சொல்வது. ஆராய்ந்து அறியாமல் அவசர கோலத்தில் ஏனோதானோ என்று செயல் பட்ட எத்தனையோ விஷயங்களை என்னால் சொல்ல முடியும். உதாரணமாக 1976—77 லிருந்து 1983—84 வரை 71 மோட்டார் சேஸிஸ்களை அரசாங்கம் வாங்கியது. இந்த சேஸிஸ்களை பாடி கட்டி தீயணைப்பு வண்டிகளாக உபயோகப்படுத்தப் படும். . . .

(முற்பகல் 11-20)

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** பேரவையின் துணை நாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பரிதி அவர்கள் செந்தமிழ் தேனை சிந்துகின்ற கழகத்தின் தலைவரின் தலைமையின்கீழ் இருக்கின்றார்கள். இங்கே பேரவையிலே படிக்கின்றதைப் போல பேசுகிறாரே; இது முறையாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ரூலிங் இருக்கிறது. பாராளு மன்றத்திலே படிக்கிறார்கள் என்று முந்தைய சபாநாயகரே சொல்லியிருக்கிறார். படிக்கலாம் என்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறார்.



1986 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே இருக்கிற நடைமுறையே பார்த்து படிக்கக் கூடாது என்பதுதான். கன்னிப்பேச்சிலே மட்டும்தான் அதை அனுமதிக்கலாம் என்பது இதுவரை கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிற முறை. அதனால் பார்க்காமல் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பிலே எனக்கு ஒன்றும் முரண்பாடு இல்லை. ஆனால் ஒரு குற்றச்சாட்டை சொல்கிறபோது அதற்கான குறிப்புகளை, ஆதாரங்கள் இவைகளை தவறாகச் சொல்லக் கூடாது என்பதற்காகவும், அவைகளை நினைவுபடுத்திக்கொள் வதற்காகவும் அவர் சொல்கிறார். இரண்டாவது, நேற்றுகூட, இங்கே ஒரு நாமினேட்டட் மெம்பர் பேசினார். அதைப்போல. .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்போது நீங்கள் சேரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படி கொண்டுவந்திருந்தால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும். விதிகளை மீறுகிறபோது நீங்கள் சேரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்போது கொண்டு வராமல் விட்டு விட்டீர்கள். குறிப்பு வைத்துக்கொள்ளலாம். ஆனால் முழுமையாக பார்த்து படிப்பது சரியல்ல. அது இந்த அவையிலே கன்னிப் பேச்சு பேசுகிறவர்களுக்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. குறிப்பு வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால் பார்த்து படிக்காதீர்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பார்த்து படிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஒரு கட்டுப்பாட்டின் வளையத்திற்குள் நின்று பேசவேண்டும் என்கிற காரணத்திற்காக வார்த்தைகள் தப்பித்தவறி வந்துவிடக்கூடாது என்ற அடக்க உணர்வுக்காகத் தான் நான் பார்த்து படிக்கிறேனே தவிர அப்படி பார்க்காமல் பேசவேண்டுமென்றால் வெளியிலே பட்டிமன்றம் வைத்தால் அதிலே நான் கலந்துகொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று கூறி என் உரையைத் தொடருகிறேன்.

தீயணைப்பு வண்டிகளாக உபயோகிப்பதற்கும், மேலும் பழுதுபட்டு உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள 34 தீயணைப்பு வண்டிகளுக்கு பதிலாக மாற்றம் செய்யவும், 37 புதிய தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தவும் திட்டமிட்டு இவைகள் வாங்கப்பட்டன. 1980 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அந்த

[திரு. பரிதி இளம்வழுதி] [1986 மார்ச் 26

மோட்டார் சேஸிஸ்கள், தீயணைப்பு வண்டிகளாக வடிவமைக்க கொட்டேஷன் போட்டு அதில் பல குழப்படிகள் நடந்து கொட்டேஷன் குறைவாக உள்ளவர்களுக்குத் தராமல் புதிய ஒருவருக்கு அதிகமான கொட்டேஷனுக்கு தந்து அவரும் முழுமையாக வேலைபார்க்காமல் இப்போது 51 சேஸிஸ்களும் இன்னும் பாடி கட்டாமல் அப்படியே கிடக்கின்றன. 34 பழுது பட்ட வண்டிகளும் மாற்றப்படவில்லை. 26 புதிய தீ அணைப்பு நிலையங்கள் மட்டும்தான் துவங்கப்பட்டுள்ளன. இதிலே எவ்வளவு வீண் காலதாமதம். எத்தனை லட்சரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை எண்ணிப்பாருங்கள்.

அடுத்து, இன்னொரு விஷயத்தை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்று போற்றப்படுகின்ற தஞ்சை மாவட்டத்தில் இன்றைய நிலை என்ன? 10 டி.எம்.சி. அல்லது 5 டி.எம்.சி. தண்ணீரையாவது தாருங்கள் என்று கர்நாடக மாநிலத்திடம் வேண்டுகோள் விடுகின்ற நிலையில்தான் இருக்கிறது. ஆனால் காவிரி நீர் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு கண்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஆளுநர்-உரையில் 'இரண்டு மாநில அரசு களும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு நிலையான தீர்வு ஏற்பட வேண்டியது இன்றிமையாததாகும். தமிழ்நாட்டுக்கும் கர்நாடக மாநிலத்துக்கும் மனநிறைவு ஏற்படுகின்ற வகையிலே இந்தப் பிரச்சினைக்கு முதல்வர் அவர்கள் ஏற்கனவே பேச்சுவார்த் தைகளை தொடங்கியுள்ளார். இப்பேச்சுவார்த்தையை மாநில அரசு தொடர்ந்து மும்முரமாக நடத்தி வருகிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதையே சொல்லி வருகிறீர்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 'தமிழக முதல்வரும், கர்நாடக மாநில முதல்வரும் 1984 ஜனவரி திங்களிலும், 1985 நவம்பர்த் திங்களிலும் இப்பிரச்சினைபற்றி கலந்து உரையாடினர். விரைவிலேயே இருதரப்பு பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். இப்பிரச் சினையில் இருதரப்பாரும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு நிலையான தீர்வை விரைவிலே காணவேண்டுமென்ற முறையில்தான் தமிழக அரசு முயன்று வருகிறது' என்று சொல்லியிருக்கிறீர்கள். விரைவில் தீர்வு காண வேண்டுமென்று நீங்கள் ஆண்டுக்காண்டு கூறுவது ஏதோ மார்கழி மாதத்தில் கோயில்களில் பஜனை பாடுவதுபோல இருக்கிறது. 1984 ஜனவரியிலும் 1985. . . .



1986 மார்ச் 26]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விளக்கத்தை பயிற்சி பெற்று வருகிற தம்பி இளம்வழுதி இடத்திலே கேட்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின், நண்பர் ரகுமான்கான் போன்றவர்கள் பதில் சொன்னால் கூட பரவாயில்லை. காவிரிப் பிரச்சினைக்கு உரிய காலத்தில் தீர்வு கண்டிருந்தால், இவ்வளவு சிக்கல் வந்திருக்காது என்று தம்பி தெரிவித்தார்கள். அந்த உரிய நேரம் எந்த நேரம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டு அது அமல்நடத்தப்படுவதில் எந்த மாற்றமும் இல்லை என்பது தான் எங்களுடைய கொள்கை. ஆனால் அது சம்பந்தமாக கர்நாடக அரசு எதிர்ப்பு தெரிவித்த காலங்களில், நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி நம்முடைய முதலமைச்சரும், அவரும் சந்தித்து, மத்திய அரசாங்கத்தின் துணையோடு இந்தப் பிரச்சினை குறித்து மேலும் மேலும் தீர்வு காணும் முயற்சிகள், இந்த அரசு வந்ததற்குப் பிறகும், 8 ஆண்டுகாலமாக அந்த முயற்சிகள் வெற்றி பெறாமல் இருக்கின்றன என்கிற குற்றச் சாட்டைச் சொல்லுகின்ற நேரத்தில், 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் சம்பந்தமாக பிரச்சினை வந்த காரணத்தினால், அது காலதாமத மானது என்ற குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு, அதைச் சரியாக தீர்க்கவில்லை என்றும் நீண்டகாலமாக 8 ஆண்டுக் காலமாக நீங்கள் சரியான முயற்சிகள் எடுக்கவில்லை, உரிய முயற்சிகள் எடுக்கவில்லை, இன்னும் சொல்லப் போனால், தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பயிர்கள் எல்லாம் வாடுகின்ற காலத்தில் கூட, நம்முடைய முதலமைச்சரும் பொதுப்பணித் துறை அமைச்சரும் சரியான ஒரு முடிவை எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காது. கோட்டை விட்டு விட்டதால் அக்கறை வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் மாண்புமிகு உறுப்பினர் இளம்வழுதி அவர்கள் இந்தக் கருத்தை வலியுறுத்தி யிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, கோட்டை விட்டோமா, இல்லையா என்பது அல்ல.

கோட்டையில் அப்போது இருந்தவர்கள், உரிய முயற்சிகளை எடுக்க வேண்டிய நேரத்தில் எடுக்கவில்லை என்பதைத் தான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் விவாதத்தைத் துவக்கி வைத்த காரணத்தினால் தெரிவிக்க விரும்புகிறேன். தயவு செய்து நீங்கள் கவனிக்க வேண்டும். கோட்டையை விடப் போவது யார், கோட்டையை விட்டவர்கள் யார் என்பது வேறு. அதற்குள்ளே நான் போகவிரும்பவில்லை. அன்றைய அரசாங்கத்தின் மீது நீங்கள் குற்றச்சாட்டுகளை சுமத்தினீர்கள். நான் சொல்வது எல்லாம் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் எந்த நிலையில் இருந்ததோ, எந்த முடிவை எடுத்ததோ அந்த நிலையிலிருந்து இஞ்ச் அளவும் மாறவில்லை. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு அமல்படுத்த வேண்டுமென்ற கருத்தில் இந்த அரசாங்கத்திற்கு மாற்றம் இல்லை என்பது தான் எங்களுடைய கருத்து. நடைமுறையைப் பொறுத்தவரையில், கர்நாடக அரசு, மத்திய அரசாங்கத்தினுடைய அணுகு முறையானது, இந்த அரசியல் நிலவரங்களுக்குத் தகுந்தபடி இருக்கிற காரணத்தால், கிருஷ்ணா நதி நீர் திட்டத்தில் அக்கறை காட்டவில்லை. காவிரி நீர் பிரச்சினையில் அக்கறை காட்டவில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் மீது ஒரு குற்றச் சாட்டைச் சொல்வதால் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் உயிரோடு இருக்கிறது என்பதில் இந்த அரசிற்கு எள் அளவும், எள் முனை அளவும் மாறுபட்ட கருத்து இல்லை. அவர்கள் பேச்சு வாக்கிலே இன்னொன்றைச் சொன்னார்கள். கோட்டையை யார் விடப்போகிறார்கள் என்று. கோட்டையை விடப் போகிறோமா; இல்லையா என்பது அல்ல. நீங்கள் மனக் கோட்டையைக் கட்டாதீர்கள். அது நடக்காது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்கப் போவது இல்லை. இவ்வாறு மாறி மாறிப் பேசினால் நான் அனுமதிக்க இயலாது. இன்னும் 15 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது.



**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மேல் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மனக் கோட்டை கட்டுவதாகச் சொன்னதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? அவர் மட்டும் சொல்லலாமா ? (குறுக்கீடுகள்).

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள், பதில்கள் எதிர் சவால்கள் எல்லாம் கடந்த 3, 4 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நான் நேற்றையதினம் உங்களிடம் சொல்லியதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். வாதம் என்று வந்துவிட்டால் திரும்ப பதில் சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். நான் எந்தக் கட்சிக்காகவும் தலையிட்டு சொல்லவில்லை. அமைச்சர் பெருமான் அவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தீர்களேயானால், பதில் சொல்வதற்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அப்படி அனுமதிக்கவில்லையென்றால், அமைச்சருக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருக்க வேண்டும். அவருக்கு அனுமதி கொடுத்துவிட்டு. . . (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் மனக் கோட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அவருக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவருடைய கருத்தைச் சொல்வதற்கு அவருக்கு தாராளமாக உரிமையுண்டு. அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் கோட்டை விட்டவர்கள் என்று சொன்னதற்கு அமைச்சர் அவர்கள் மனக் கோட்டை கட்ட வேண்டாம் என்று சொன்னார்கள். உறுப்பினர் பேசியதற்கு அமைச்சர் பதில் சொன்னார். அதோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. திரும்பப் பேசினால் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

(முற்பகல் 11-30)

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே நேற்று நடைபெற்ற ஆசிரியர் தொகுதி முடிவாக இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் தேர்தல் முடிவாக இருந்தாலும்

கமண்டலத்தோடு பிறந்தவர் எங்களுடைய புரட்சித் தலைவர் என்று சொல்லிய உங்களுக்குக் கிடைத்திருக்கிற தீர்ப்புக்குப் பிறகுமா நீங்கள் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல், மேல்சபைத் தேர்தல் இவைகளோடு தேர்தல்களே வையகத்திலே முடிந்துவிடுவதில்லை.. அடுத்தும் தேர்தல் வரும். அந்தக் களத்திலே உங்களை முறியடித்துக் காட்டுகிறோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, களத்திலே சந்திப்போம், மாநகராட்சித் தேர்தலை நடத்தினால் உடனே சந்திப்போம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலையான தீர்வு காணுவதற்கு அரசு மும்முரமாக முயன்று வருகிறது என்று உரையில் சொல்லப்பட்டிருந்த காரணத்தினால் நான் அதை விளக்குவதற்குள் அமைச்சர் குறுக்கிட்டு விட்டார். மேலும் நான் சொல்ல வந்தது என்னவென்றால் 1984 ஆம் ஆண்டு ஜனவரியிலும் 1985 ஆம் ஆண்டு நவம்பரிலும் இரண்டு முறைதான் அதாவது 23 மாதங்களிலே காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி இரண்டே இரண்டு முறைதான் பேசியிருக்கிறார்கள். இதுதான் நீங்கள் நடத்துகிற மும்முரமான பேச்சுவார்த்தையா என்றுதான் நான் கேட்க வந்தேன். உங்களுடைய செயலாற்றுகின்ற தன்மை இந்த மிக முக்கியமான பிரச்சினையில் நீங்கள் கையாளக் கூடிய மெத்தனப் போக்கிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது. முதலமைச்சருக்கு உடல்நலம் இல்லாத காரணத்தினால் சென்று பேச இயலவில்லை என்று நீங்கள் கூறலாம். அப்படியே இருந்தாலும் மற்ற அமைச்சர்களாவது பேசி இவ்வளவு நாட்களில் முடிவுக்கு வந்திருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து 31-வது பக்கத்திலே 'உள்ளாட்சி மன்றங்கள் செம்மையாக நடைபெற அவர்களுடைய நிதி சுயசார்பு நிலைமையை மேம்படுத்த வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. என்று கூறி கேளிக்கை வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். வரி உயர்வுக்கு சுயசார்புத் தன்மையை நீங்கள் காரணமாகக் கூறிவிட்டு அதே



நேரத்திலே பழைய கணக்கை எப்படிக் கொடுப்பது, புதிய கணக்கையே தரமாட்டோம் சாவி எங்கள் கையில் இருக்கிறது நிதி ஒதுக்கும் அதிகாரமும் எங்கள் கையில்தான் இருக்கிறது என்று நாவலர் கூறியதாக ஏடுகளிலே செய்தி வந்தபோது தந்தை பெரியார் அவர்களிடமும் அறிஞர் அண்ணா அவர்களிடமும் நெருங்கிப் பழகிய நாவலர் அவர்களா இப்படிப்பட்ட கருத்தைக் கூறினார்கள் ? ஒரு முதிர்ந்த அரசியல்வாதி என்று நாம் கருதிக் கொண்டிருக்கிற. . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பேச்சுக்களையெல்லாம் பத்திரிகைகளிலே நான் பேசியவாறு வெளியிடுவது என்பதில்லை. கண்டபடி வெளியிடுகிறார்கள், வேண்டுமென்றே வெளியிடுகிறார்கள். அந்த வகையிலே பழைய கணக்காகட்டும், புதிய கணக்காகட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் கேட்டாலோ, தலைவர்கள் கேட்டாலோ கணக்குகளை எடுத்து வைப்பார்கள். பழைய கணக்கு என்றல்ல. புதிய கணக்கு என்றல்ல. அரசைப் பொறுத்தவரையிலே ஆண்டுக்காண்டு கணக்குகள் உண்டு. மாண்புமிகு உறுப்பினராகிய நீங்களே 1973-74 ஆம் ஆண்டு என்ன நடைபெற்றது என்று கேட்டால் அந்தக் கணக்கைச் சொல்ல வேண்டும், எல்லா கணக்குகளும் இருக்கும். கணக்குகளிலே ஐயப்பாடு ஏற்பட்டால் அதைக் கேட்க தலைவர்களுக்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. ஆடிட் செய்வதற்கு ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்ன அந்தக் குறைபாடுகள் காம்ப்ட்ரோலர் எடுத்துச் சொன்னவைதான். எல்லா அரசுகளிலேயும் இருக்கின்ற ஒன்றுதான். அதற்குப் பிறகு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே ஏ.ஜி. வந்து உட்கார்ந்து அந்தந்தத் துறை அதிகாரிகளைக் கேட்பார்கள். அவர்கள் சமாதானம் சொல்ல வேண்டும். அதற்குப் பின்னாலே உறுப்பினர்கள் முடிவு கட்டுவார்கள். அதற்குப் பிறகு அந்தந்தத் துறைகளைச் சார்ந்தவர்கள் விளக்கங்கள் தரவேண்டும். அப்படி அந்த விளக்கங்கள் திருப்தியளிக்காவிட்டால் பொதுக் கணக்குக் குழு அதற்கான தீர்ப்பை அளிக்கிறது. இத்தகைய வழிவகைகள் எல்லாம் இருக்கிற காரணத்தினால் கணக்கைப் பொறுத்த வரையிலும் ஒரு தகராறும் ஏற்படுவதற்கில்லையென்று நான்

குறிப்பிட்டேனே தவிர பழைய கணக்கு காட்ட மாட்டோம், புதிய கணக்கு காட்ட மாட்டோம் என்று சொல்லவில்லை. எந்தக் கணக்கும் என்னிடத்தில் இல்லை, இவ்வளவு கணக்குகளையும் நான் இங்கே வைக்கிறேன தவிர அந்தக் கணக்குப் புத்தகங்கள் எல்லாம் என் அறையிலே வைக்கப்பட்டிருக்கின்றன என்று பொருள் இல்லை. அதற்கென்று துறைகள் இருக்கின்றன. கேட்கிறபோது கணக்குகளைத் தெரிவிப்பார்கள். அதுபற்றித் தவறான செய்தி பத்திரிகையிலே வந்ததுதான் காரணம் என்று கருதுகிறேன். ஆகவே கணக்குகள் அங்கே ஒழுங்காக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் பேசும்போது எனது பேச்சுக்களை கண்டபடி கண்ட பத்திரிகைகள் எழுதுகின்றன என்று ஒட்டுமொத்தமாகப் பத்திரிகைகளை சாடுவது பத்திரிகைகளின் தரத்தை இறக்குவது பத்திரிகைகளின் உயர்வைத் தாழ்த்துவது உங்களது தரத்திற்கு ஒத்ததல்ல என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில பத்திரிகைகள் என்ற தன்மையிலேதான் சொன்னேன்.

> "காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
> கண்டானம் தான்கண்ட வாறு"

என்பது குறள். ஆகவே, சில பத்திரிகைகள் என்று நான் சொன்னேனே தவிர எல்லாப் பத்திரிகைகளும் அப்படி நடக்கின்றன என்று சொல்லவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் சொல்வதைப் போன்று, எல்லாப் பத்திரிகைகளுமே ஒழுங்காகவோ, நிறைமையாகவோ, முறைப்படி நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கோ நடக்கின்றன என்று எடுத்துக்கொள்ள முடியாது. எல்லாப் பத்திரிகைகளும் ஒழுங்காக நடக்கவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் ஒருசில பத்திரிகைகள் இப்படியும் இருக்கின்றன. இதுபற்றி உங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் சில பத்திரிகைகளைக் கோடிட்டுக் காட்ட முடியும்; என்னைப் பொறுத்தவரையில் நான் சில பத்திரிகைகளைக்





கோடிட்டுக் காட்ட முடியும். காழ்ப்புணர்ச்சியோடு இருக்கின்ற தன்மைகள் இருக்கின்றன. பல பத்திரிகைகள் நேர்மையாகவும், நியாயமாகவும் வெளியிட்டு வருகின்றன.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. வாய் தவறி உங்களிடம் அந்தப் பேச்சு வந்தது உண்மை. வேண்டுமானால் குறிப்பேட்டைப் பார்க்கலாம். கண்டபடி கண்ட பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றார்கள் என்று ஒட்டு மொத்தமாகப் பத்திரிகைகளைக் குறைசாட்டிப் பேசினீர்கள்; இப்பொழுது விளக்கம் தந்திருக்கிறீர்கள். அந்த விளக்கத்தை நான் விளங்கிக் கொண்டேன். அதற்குப் பிறகு உங்கள் பேச்சு தேவையில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கண்டபடி கண்ட பத்திரிகைகள் என்று சொல்வது எல்லோரையும், எல்லாப் பத்திரிகைகளையும் குறிப்பாகப் பொருள் படைத்ததாக ஆகாது. கண்டபடி கண்ட பத்திரிகைகள் என்றால் கண்ட பத்திரிகைகள், காணும் பத்திரிகைகள் என்ற வகையில்தான் வரும், ஒருசில பத்திரிகைகள் என்றுதான் பொருளாகும். எல்லாப் பத்திரிகைகளும் என்ற பொருள் ஆகாது. ஆகவே, அந்த நிலைமையில் வர முடியாது.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். மாண்புமிகு நாவலர் அவர்களா இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று அதிர்ச்சி அடைந்தேன். அவர்கள் மறுப்பு அறிக்கை விடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் அப்படி பேசவேயில்லை. பத்திரிகைகள்தான் தவறாக வெளியிட்டன என்று இப்பொழுதாவது விளக்கம் அளித்தார்களே. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றை அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்பார்கள். அதைப்போன்று அதிகார எல்லைகளை மீறுவீர்களேயானால், உள்ளாட்சி மன்றங்களினுடைய அதிகாரிகளைக் கைப்பாவையாகக் கொண்டு ஆக்கிரமித்து விடலாம் எனக்

கருதினால், தமிழகத்தின் வரலாற்று ஏடுகளில் ஒரு கறை படிந்த அத்தியாயத்திற்கு வந்திருக்கிறீர்கள் என்று பொருள். அது உங்களுக்கும் நல்லது அல்ல; இந்த நாட்டிற்கும் நல்லது அல்ல.

"அரசு இயல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற சிலம்பின் வைர வரிகளுக்கு இரண்டாவது எடுத்துக்காட்டாக நமது மாண்புமிகு நாவலர் அவர்கள் ஆகிவிடக்கூடாது என்ற ஆதங்கத்தின் காரணமாகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

எதிர்க்கட்சி என்பது ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான கூறு ஆகும். இந்த அரசாங்கம் என்பது, பெரும்பான்மை காரணமாக ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களிடத்திலே பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இருந்தாலும் எதிர்க்கட்சிகளுக்கும் அரசாங்கத்தினுடைய விவகாரங்களில் மிக முக்கியமான பங்கும், பொறுப்பும், கடமையும் உண்டு என்கின்ற வகையிலே இதைச் சுட்டிக்காட்டி, விரைவிலே சென்னை மாநகராட்சிக்கும், மதுரை, கோவை மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்தி, மக்களாட்சியில் நம்பிக்கை கொண்ட ஜனநாயகவாதிகள் என்பதை நிரூபிக்கத் தவறி விடாதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இலங்கைப்பிரச்சனை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசியவர்கள் கூட பலர் இதைப்பற்றிப் பேசினார்கள். நான் பேசிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அங்கே ஈழத்தில் எத்தனை தாய்மார்கள் விதவையாகி இருப்பார்களோ எனக்குத் தெரியாது. எத்தனை குழந்தைகள் தாய்தந்தையை இழந்து அனாதைகளாக ஆகியிருக்குமோ எனக்குத் தெரியாது; எத்தனை இளைஞர்கள் கை கால்களை இழந்து குற்றுயிரும், கொலையுயிருமாக இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்த அளவிற்குக் கொடிய வெறிபிடித்த ஜெயவர்தனேயின் கோர தாண்டவத்தால் தமிழினத்தின் ஜனத்தொகை குறைந்துகொண்டே இருக்கிறது. இப்படியே போனால் இந்தப் பிரச்னைக்கே அங்கே இடமில்லாமல் போய்விடும். காரணம், அங்கே தமிழர்களே இல்லாத நிலைமை ஏற்பட்டு விடும். இப்படி நாங்களெல்லாம் வெதும்பிக்கொண்டிருந்த நேரத்திலே, எதிர்வரிசையிலேயிருந்து ஒரு குரல் வந்தது. அந்தக் கோடியில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் சகோதரி வளர்மதி அவர்கள், பண்டாரியை அனுப்ப





வேண்டாம், படையை அனுப்புங்கள், தூதுக்குழுவை அனுப்பாதீர்கள், துப்பாக்கியை அனுப்புங்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன். நாங்கள் அன்று சொன்னதை காலம் தாழ்த்தி இப்பொழுதாவது ஏற்றுக்கொண்டு சொன்னார்களே அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தென்கோடியில் அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்தைக் காப்பாற்றுவதற்காக, சட்டமன்றத்தில் அந்தக் கோடியிலே அமர்ந்து இருக்கின்ற வளர்மதி அவர்கள் மூலமாக வந்த குரல் இந்தக் கோடியிலே அமர்ந்திருக்கின்ற நாவலர் அவர்கள் மூலமாக அரசின் தீர்மானமாக வந்து, வடகோடியிலிருக்கிற டெல்லி பட்டணத்திற்கு அனுப்புவார்களேயானால் அதை வரவேற்கின்ற முதல் இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம்—அதனுடைய தலைவர் கலைஞர் அவர்கள் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றே ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

(முற்பகல் 11-40)

* **திரு. எஸ். பி. மணவாளன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற 1986—87-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை வரவு செலவு திட்டத்தில், சில உணவு பொருள்களுக்கும், குழந்தைகளின் பால் உணவுப் பொருள்களுக்கும், உயிர்காக்கும் மருந்துப் பொருள்களுக்கும் வரி விலக்கு செய்யப்பட்டுள்ளது. சில உணவுப் பொருள்களுக்கு வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளது. பலமுனை வரி ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் தொழில் செய்பவர்களுக்கும் நுகர்வோருக்கும் பயன் அளிக்கக்கூடியதாக உள்ளது.

அதே போல், மது விலக்கை மீண்டும் கொண்டு வருவது என்ற அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியது, பாராட்டப்பட வேண்டியது. ஆனால் அதை முழுமையாக அமுல்படுத்திட வேண்டுகிறேன். வருகிற அக்டோபர் 2, காந்தி ஜெயந்தி நாள் முதற்கொண்டு அமுல்படுத்தினால் மிக மகிழ்ச்சி உடையவனாக இருப்பேன்.

அதே போல், 1986-87 வரவு செலவுத் திட்டத்திலே, தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் எதுவுமே இல்லை. சாலை வசதிகளை மேம்பாடு செய்வதற்காக சுமார் ரூ. 33 கோடி ஒதுக்கி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில், இன்னும் பேருந்து செல்லும் சாலைகள், கிராமப்புற சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் உள்ளனவா அல்லது யூனியன் நிர்வாகத்திலே உள்ளனவா என்று தெரியாமல், அநாதைச் சாலைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த அளவிலே, வகுப்பறைகளிலே மாணவர்கள் சேர்க்கை என்பது, அகில இந்திய நிலையை விட கூடுதலான விழுக்காடாக, தமிழ்நாட்டில் இருப்பது என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆனால், மாணவர்களை அதிகமாக வகுப்பறைகளில் சேர்த்துவிட்டால் மட்டும் போதுமா? அவர்கள் நல்ல சூழ்நிலையிலே, பாதுகாப்பான கட்டடங்களிலே இருந்து கல்வி பயில வேண்டாமா? ஆனால், பெரும்பாலான பள்ளிகளில் போதிய வகுப்பறைகள் இல்லாமல், பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கிற திருப்பத்தூர் நகரத்தில், அரசு மீனாட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியிலே 21 வகுப்பறைகள் இல்லாமல், அங்கு மாணவிகள் தாழ்வாரத்திலும் வெயிலிலும், மழையிலும் கல்வி பயில்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையிலே கல்விக்காக, ரூ. 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் வகுப்பறைகளுக்காக ரூ. 1 கோடி மட்டுமே ஒதுக்கி இருக்கிறார்கள். கல்விக்கூடங்களிலே, இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்குத் திட்ட மதிப்பீடு ரூ. 1.16 இலட்சம். அப்படி என்றால், 90 பள்ளிகளுக்குத்தான் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கக்கூடிய நிலையிருக்கிறது. அந்த நிலையை நீங்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கட்டடங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, இந்தக் கட்டடங்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் மட்டும்தான் என்று கூறி இருக்கிறார்கள். அப்படியானால், துவக்கப் பள்ளிகளுக்குக் கட்டடம் இல்லையா? அதே போல், துவக்கக் கல்வித் துறையிலே தமிழக அரசு வெற்றி வாகை சூடி வருவது சத்துணவுத்





திட்டத்தால் என்று பெருமையோடு கூறி உள்ளார்கள். ஆனால் கிராமப்பகுதியிலே சிறுவர்கள், மாணவர்கள் கல்விக்காக வருவதில்லை. பெரும்பாலும் சத்துணவு சாப்பிடத்தான் அவர்கள் வருகின்றார்கள். சில பல பள்ளிகளிலே காலையிலே வகுப்புக்கு வந்து, பிற்பகலிலே உணவு பெற்றுக் கொண்டு, வீட்டுக்குச் சென்றுவிடுகிறார்கள். இன்னும் சில இடங்களிலே, சத்துணவு சாப்பிடுவதற்காக மட்டும்தான் பிள்ளைகள் வருகிறார்கள். சத்துணவைப் பெற்றுக் கொண்டு வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். சத்துணவுத் திட்டத்திலே வழங்கப்படுகிற காய்கறிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. காய்கறி சொசைட்டி என்று ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு யூனியனுக்கு இரண்டு சொசைட்டிகள் அமைத்துக் கொண்டு, அவர்கள் சரியான முறையிலே சப்ளை செய்யாமல் சொந்த ஆதாயம் தேடுகிறார்கள். அதேபோல், பருப்பு, பாமாயில் போன்றவைகளையும் தவறான முறையிலே கையாள்கின்றனர். அது தவிர, சத்துணவு சாப்பிடும் அனைத்துப் பள்ளிகளிலும் சத்துணவு சாப்பிட்ட பின் மாணவர்களுக்குக் குடிக்க தண்ணீர் வசதி இல்லை. இது பெரும்பாலான பள்ளிகளிலும் இருக்கின்ற நிலை. ஆகவே, நான் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம் அனைத்துப் பள்ளிகளிலும் கை பம்புகள் அமைக்க இதில் வழிவகை செய்ய வேண்டும் என்பது தான்.

அதே போல், சத்துணவு சமையல் செய்யக்கூடிய கூடங்கள், பெரும்பாலான பள்ளிகளில் இல்லை. பெரும்பாலான பள்ளிகளிலே ஓப்பன் ஏரியாவிலே சமையல் செய்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டிலே நீங்கள் பெரியதொரு திட்டமாக அறிமுகப்படுத்தியிருப்பது, 3 ஆண்டுகளிலே 30 இலட்சம் வீடுகள் கட்டித் தருவோம், என்பது. அப்படி 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்போம் என்ற உணர்வைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால், அதற்கு இந்த நிதியாண்டில் ஒதுக்கி இருக்கிற தொகை ரூ 26 கோடி மட்டுமே.

சாதாரணமாக ஒரு வீடு கட்ட 10,000 ரூபாய் ஆகும் என்றால் ஏறத்தாழ 26,000 வீடுகள் மட்டுமே இந்த 26 கோடி ரூபாயில் கட்ட முடியும். இப்படி ஒரு வருடத்தில் 26,000 வீடுகள் கட்டுவது

என்றால் 30 இலட்சம் வீடுகள் கட்ட 120 ஆண்டுகள் ஆகும். இதைப் பார்க்கும்போது உங்களுடைய திட்டங்கள் எப்படி இருக்கின்றன என்றால் ஒன்று 120 நிமிடங்களில் ஜீரணிக்கக் கூடிய திட்டமாக இருக்கிறது அல்லது 120 வருஷங்களில் முடிகிற திட்டமாக இருக்கிறது.

அதைப்போன்று எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு என்று சுமார் 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். வேர்க்கடலையைப் பொறுத்தமட்டில் 11,990 மெட்ரிக் டன் விதை உற்பத்தி செய்து விநியோகிக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். வேர்க்கடலை இலவசமாகக் கொடுக்கப்படுவதில்லை. மொத்த வியாபாரிகள் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து, வேர்க்கடலையை வாங்கி, அதை வியாபாரத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து வாகனப் போக்குவரத்து வரி பற்றி என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். கால் ஆண்டு, அரை ஆண்டு, முழு ஆண்டு என்ற முறையிலே இந்த வரி வசூலிக்கப்படுகிறது. இந்த வரி விதிப்பு கர்நாடக மாநிலத்தில் இருப்பதைப்போல இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். புதிய வாகனங்களைப் பதிவு செய்யும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை மொத்தமாக வசூலித்துவிட்டு, அதன் பின்னால் அந்த வாகனத்திற்கு வரியே வசூலிக்க வேண்டியதில்லை என்ற நிலைமை கர்நாடகத்தில் இருக்கிறது. தமிழக அரசும் அதை பரிசீலனை செய்து, அந்த மாதிரி ஒரு புதிய திட்டத்தை அமுல்படுத்த முன்வருமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று கியர் சிஸ்டம் இல்லாத மொப்பட் போன்ற இரண்டு சக்கர வண்டி. சைக்கிள் அமைப்புடைய இந்த இரண்டு சக்கர மொப்பட் வண்டிகளை ஓட்டுகிறவர்களும் ஹெல்மெட் அணிந்து கொள்ள வேண்டுமென்று விதி இருக்கிறது. மொப்பட் வண்டிகளை மக்கள் நிறைய பயன்படுத்துகிறார்கள். கிட்டத்தட்ட சைக்கிள் அமைப்புடையதாக அது இருப்பதால். மொப்பட் வண்டிகளை ஓட்டுகிறவர்கள் ஹெல்மெட் அணிய வேண்டிய தேவையில்லை என்று விதியிலே திருத்தம் செய்தால் சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, என்னுடைய தொகுதியிலே நடைபெற வேண்டிய சில வேலைகளைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நாட்டிலே இன்றைக்கு முக்கிய பங்கு வகிப்பது தொலைக்காட்சி. இந்த தொலைக்காட்சி வசதி திருப்பத்தூர் பகுதி மக்களுக்கு இல்லை. அவர்களுக்கு தொலைக்காட்சி வசதி செய்து கொடுக்க ஏலகிரி மலையில் ஒரு தொலைக்காட்சி நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். அங்கே தொலைக்காட்சி நிலையம் அமைத்தால் வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியும், தர்மபுரி மாவட்டத்தில் ஒரு பகுதியும், ஏலகிரி மலை, ஜவ்வாது மலைகளில் வசிக்கின்ற பழங்குடி மக்களும் பயனடையக் கூடிய வகையில் இருக்கும். சுமார் 50 மைல் சுற்றளவில் ஏறத்தாழ 15 இலட்சம் மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள். ஆகவே ஏலகிரி மலையில் ஒரு தொலைக்காட்சி நிலையத்தை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, திருப்பத்தூர் தொகுதியில் ஆண்டியப்பனூர் ஓடையில் ஒரு நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் இருக்கிறது. பொதுப் பணித் துறையிலிருந்து ஆய்வு செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 5,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். பொருளாதார ரீதியில் அந்தத் திட்டம் பயனுடைய திட்டம் என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்து, அதை இந்த நிதி ஆண்டிலேயே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று வாணியம்பாடி தாலுக்காவில் பாலாற்றின் குறுக்கே புல்லூர் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது இந்த திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான ஆய்வுப் பணி அப்போதே தொடங்கப்பட்டு, இன்று வரையில் ஆய்வு நிலையிலேயே உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் திருப்பத்தூர், வாணியம்பாடி தாலுக்காக்களில் பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அதே நேரத்தில் நிலத்தடி நீரும் பெருகும் என்ற நிலை உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது

[திரு. எஸ். பி. மணவாளன்] [1986 மார்ச் 26

25 வருடங்களாக அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாக, இருக்கிறது. அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று, பாலாற்றின் குறுக்கே புல்லூர் நீர்த் தேக்கம் அமைக்கும் பணியை கொள்கை அளவில் ஏற்று, விரைவிலே அந்தப் பணியை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

ஜோலார்பேட்டை திருப்பத்தூர் தொகுதியில் இருக்கிறது. அது தனி ஒன்றியமாக ஆக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அது தென்னக இரயில்வேயினுடைய மிக முக்கியமான சந்திப்பாக இருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு மருத்துவ வசதி சரியாக இல்லை. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நான் சார்ந்துள்ள தொகுதியிலே ஜவ்வாது மலையின் ஒரு பகுதி வருகிறது. அங்கே பெரும்பள்ளி மற்றும் அதைச் சேர்ந்த 10 கிராமங்களுக்கும் சாலை வசதியை ஏற்படுத்துகிற வகையில் இராசபாளையத்தில் இருந்து பெரும்பள்ளி கிராமத்திற்கு ஒருங்கிணைந்த மலைவாழ் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு புதிய சாலையை அமைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூர் தொகுதி பின்தங்கிய தொகுதி. அங்கே ஏற்கெனவே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற நிலைமையில் பல அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் பல ஆண்டுகளாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஏலகிரி மலையிலே மின்னணு தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு ஏலகிரி மலையில் ஒரு மின்னணு தொழிற்சாலையையும் திருப்பத்தூர் பகுதியில் சிப்காட்டின் மூலமாக ஒரு தொழில் பகுதியையும் அமைத்துத் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.



1986 மார்ச் 26]

*திரு. எம். மணி-இராசரத்தினம்: மாண்புமிகு மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, எங்களை உருவாக்கி சட்ட மன்றத்தில் பேச வாய்ப்பு நல்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவரின் பாதத்தை வணங்கி இந்த ஆண்டு பட்ஜெட் மீதான விவாதத்தில் கலந்து எனது வேண்டுகோளை சமர்ப்பிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இவ்வளவு சிறப்பான, ஏழைகள், தாழ்த்தப்பட்ட மக்கள் பயன் அடையக் கூடிய பட்ஜெட் உண்மையிலேயே எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய ஒன்று என்று நான் கூற விரும்புகிறேன். அதற்கான சான்றுகள் நிரம்ப இருக்கின்றன.

முதற்கண்ணாக வீடு கட்டும் திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் அனைத்து இந்திய ரீதியிலும் தமிழகம் முன்னோடியாக இருந்து இந்தத் திட்டத்தை அமல்படுத்தி இருப்பது நிச்சயமாக அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் சந்தேகங்கள் வந்ததுபோல் கூறினார்கள். ஆனால் ஊக்கம் ஆக்கத்திற்குப் பயன் தரும் என்ற கருத்துக்கேற்ப சந்தேகத்தை விட்டுவிட்டு ஆக்கபூர்வமான நல்ல திட்டங்களை வகுத்துத் தரவேண்டும். அரசினுடைய குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்குரிய கடமை உங்களுக்கு இருந்தாலும் கூட நாங்கள் போட்ட நல்ல திட்டங்களைப் பாராட்டுவதோடு அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழைகள் மீது உண்மையான பரிவும், தொண்டுள்ளமும் கொண்டிருந்தால் நிச்சயம் நம்முடைய பெரிய திட்டங்களை எல்லாம் அவர்கள் பாராட்டுவார்கள். நல்ல ஆலோசனைகளைக் கூறுவார்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும் சில திட்டங்களில் உள்ள இடர்ப்பாடுகளைப் பற்றி நேற்று பேசிய மாண்புமிகு குடியரசுக் கட்சி உறுப்பினர் அருமைச் சகோதரர் கூறினார்கள். அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அரிசன மக்கள்

இருக்கக் கூடிய இடங்களில் மயானப் பாதை வசதி இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அரிசன மக்கள் இருக்கக்கூடிய இடங்களில் மயானப் பாதை வசதி மற்றும் அவர்களுடைய காலனிகளுக்குச் செல்வதற்குரிய வசதி போன்றவற்றை நல்ல முறையில் அமைக்க வேண்டும். கிராமப்புறங்களில் உரிய பாதைகளைப் போடும் நல்ல திட்டங்களை அரசு மேலும் அதிகமாக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசரம், அவசியமாகக் கருத வேண்டும். ஏனென்றால் கிராமங்களில் ஜாதிக் கலவரம் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

நான் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன் என்றாலும் அரிசன மக்களோடு நெருங்கிப் பழகியவன் என்ற காரணத்தால் இதைக் கூறுகிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் 18 சதவீதம் அரிசன மக்களுக்கு ஆட்டோ பெர்மிட் கொடுப்பது நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒன்று. அதேபோன்று நகராட்சிகளில் அரிசன காலனிகளில் இருக்கக் கூடிய குப்பைகளை அகற்ற சிறிய டில்லர் கொடுத்தால் தான் அங்கே இருக்கக்கூடிய குறுகலான இடங்களுக்குச் சென்று அந்தக் குப்பைகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்க முடியும். அதிலும் குறிப்பாக விழுப்புரம் நகராட்சியில் அப்படி இருக்கக் கூடிய இடங்களுக்கு இந்தக் காரியத்தைச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் அங்கே இருக்கக் கூடிய மக்கள் மிகப் பின்தங்கிய மக்களாக இருப்பது மட்டுமல்ல; ஒரு பேரூராட்சியே அவ்வாறு விழுப்புரம் காலனியில் இருப்பது போன்ற உணர்வு இருக்கிறது. எனவே அந்த மக்கள் அதிகமாக வாழக்கூடிய அந்தப் பகுதிகளை சிறிய டில்லர்கள் போன்றவற்றை வைத்துச் சுத்தப்படுத்தக்கூடிய வகையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே டில்லர் சாங்ஷன் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல என்னுடைய பகுதியிலே விழுப்புரம் நகரத்திலே சித்தேரி என்ற பகுதி இருக்கிறது. அது விழுப்புரம் நகருக்கு உட்படுத்தப்பட்ட பகுதி. அது ஒரு தீவு போல் இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த சித்தேரி பகுதிகளிலே பாதைகள் போட்டு தந்து அதைச் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல கோலியனூர் ஒன்றியத்தைச்





சார்ந்த சாவாமேடு கிராமத்தில் டயர் வண்டிகள் கூட போக முடியாத நிலைமை இருக்கிறது. அதேபோல், காணை ஒன்றியம், ஒட்டங்காடு வெட்டி சாலை போன்றவைகளும் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை செப்பனிட்டு சீர்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவைகளைப் பற்றி மாண்புமிகு போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடமும் பணிவோடு கேட்டுக் கொண்டு, அங்கே இருக்கிற வேளாண் பெருங்குடி மக்கள் அவர்கள் மார்க்கெட் கமிட்டிக்கு செல்வதற்கும், அங்கே இருக்கக்கூடிய விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் பொருள்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கும் மிகவும் சிரமமாக இருக்கக்கூடிய ஒரு கருத்தை நான் தெரிவித்துக் கொண்டு, அதற்கான ஆக்கபூர்வ பணிகளை அரசு செய்ய வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விழுப்புரம் நகராட்சிக்கு பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் இதுவரை அதற்கான முயற்சிகளை செய்யாதது வேதனைக்குரியது என்று நான் கூற விரும்புகிறேன். இதற்கான பணிகளை அரசு நிச்சயமாக விரைவாகச் செய்ய வேண்டும். ஏனென்றால் அங்கே ஜாதிக் கலவரங்களினால் அப்பாவி மக்கள் 12 பேர்கள் உயிர் இழந்த இடமாக இருக்கக்கூடிய அந்த விழுப்புரம் நகரத்தில் நிச்சயமாக அந்தத் திட்டத்தை அமல் செய்து, விரைவாக பேருந்து நிலையத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும். காரணம் சமூக விரோதிகளாக இருக்கக்கூடிய சிலர் இந்த பேருந்துகள் நிற்கும் இடத்திற்குச் சென்றுதான் குழப்பம் விளைவிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் யோசித்து அதிலும் குறிப்பாக ஜாதிக் கலவரம் ஏற்பட்டு, பல பேர் உயிர் இழந்ததன் விளைவாக அந்த இடங்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த இடங்களையெல்லாம் சீராக செப்பனிட்டு, பேருந்து நிலையத்தை அங்கே கட்டினால் தான் நிச்சயமாக அங்கே நடைபெற்ற பல தவிர்க்க முடியாத சம்பவங்களும் விரும்பத்தகாத சம்பவங்களும் நடக்காது என்பதை அரசின் கவனத்திற்கு இந்த நேரத்திலே கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போன்று அரிசன நல மக்களுக்கு பால்வள சொசைட்டிக்காக பதிவு செய்வது காலதாமதம் ஆகிறது. அதுமட்டும் அல்லாமல் அவர்களுக்கான மானியத் தொகை, சப்சிடி கேட்டால், அதற்குண்டான இடர்ப்பாடுகள் பற்றியும், சில சிக்கல்களைப் பற்றியும் அங்கே இருக்கிற அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆகவே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அந்த மக்கள் மற்றும் அரிசன மக்களுக்காக அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும், இதுபோன்று அவர்களுக்குச் சேர வேண்டிய தொகை ஏன் அவர்களுக்குப் போய் சேருவதில் சிரமம் ஏற்படுகிறது என்பதை அரசு அதிகாரிகளும், அரசும் கவனிக்க வேண்டும் என்று கேட்டு, இடர்ப்பாடுகளை தவிர்த்து அதனை அவர்களுக்கு அளிக்கவும் பால் வழங்கு சொசைட்டியை ஏற்பாடு செய்து கொடுத்து அவர்களை வாழ வைக்க வேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரசு ஊழியர்கள் இயற்கை எய்தினால், அவர்கள் வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனை வட்டியுடன் தள்ளுபடி செய்திருப்பது பாராட்டத்தக்கது. அதேபோல மருந்துப் பொருட்கள், பால் பொருள்கள் போன்றவை எல்லாம் ஏழைகள் உபயோகிக்கும் பொருட்கள். அவை மீது வரிச் சலுகையை அளித்திருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்தது. இந்த தருணத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் மக்களுக்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் மார்க்சிய தத்துவத்தின்படி, ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனக்கு வேதனை அளிப்பது என்னவென்றால், மதிப்பிற்குரிய இ. கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் போன்றவர்கள் எல்லாம் கூட அவைகளைப் பாராட்டவில்லையே என்பதுதான். ஆகவே அவர்களைப் போன்றவர்கள் எல்லாம், இந்த அரசினுடைய நல்ல திட்டங்களைப் பாராட்ட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தனியார் தெருக்களுக்கு செய்ய வேண்டிய வசதிகளைப் பற்றியெல்லாம் கூட குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தனியார் தெருக்களில் வசிக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் மேற்குடி மக்களாகத்தான் இருப்பார்கள். ஏழை எளிய தாழ்த்தப்பட்ட



மக்களாக, பின்தங்கிய மக்களாக இருக்க மாட்டார்கள். அப்படி இருந்தாலும் அவர்கள் நன்மை பெற வேண்டும் என்பதற்காகவாவது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு அதற்கும் உடனடியான நடவடிக்கையை எடுத்து தேவையான வசதிகளைச் செய்திருப்பார்கள். ஆகவே இந்த நேரத்தில் நான் அமைச்சர் பெருமக்களை கேட்டுக் கொள்வதெல்லாம் ஏழைகள் அதிகமாக வசிக்கின்ற சாலைகளிலே அதிக கவனம் செலுத்தி, தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டுகிறேன்.

அடுத்து நமது மாநிலத்தைப் போன்று இருக்கிற அண்டை மாநிலமான புதுவையில் தொழிற்சாலைகள் துவங்க நிறைய வசதிகளைச் செய்து தருகிறார்கள். ஏறக்குறைய 25 சதவீதம் சப்சிடி கொடுக்கப்படுகிறது. அதுமட்டும் அல்லாமல் 24 மணி நேரமும் பவர் சப்ளை கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக புதுவை மாநிலத்திலே 4, 5 இடங்களிலே தொழிற்சாலைகளை நிறுவி, இன்டஸ்ட்ரியல் சென்டர்ஸ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் என்னுடைய பகுதியான தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் புதுவை மாவட்டத்திற்குச் சென்று தொழில் துவங்கியுள்ளார்கள். ஆகவே இப்படி தமிழகத்திற்கு வரவேண்டிய பெரும் தொழில்கள் எல்லாம் அங்கே போவதை தடுக்க வேண்டுமென்றால், வானம் பார்த்த பூமியாக இருக்கும் என்னுடைய மாவட்டத்தில், அதுவும் விழுப்புரம் மாவட்டத் தலைநகரமாக இருப்பதால், அங்கே ஒரு இன்டஸ்ட்ரியல் சென்டரை கண்டிப்பாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு இன்டஸ்ட்ரியல் சென்டரை ஆரம்பித்தால்தான், அங்கே தொழிற்சாலைகளை ஏற்படுத்த இருக்கிற அனைத்து தொழில் முனைவர்களுக்கும், தொழிலிலே ஆர்வம் உள்ளவர்களுக்கும் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

அடுத்து ராஃபில் டிக்கட், ஜெனரேட்டர், பருத்தி நூல்கள் போன்ற பலவற்றிற்கு வரி விலக்கு அளித்து வரியை குறைத்திருக்கிறார்கள். ஆனால் ஏழை மக்களின் பொழுதுபோக்காக இருக்கக்கூடிய சினிமாத் துறைக்கு என்டர்டெயின்மென்ட் டாக்சை 10 சதவீதமாக உயர்வு ஆக்கியிருப்பது மிகவும் கவலைக்கு உரியது. கிராமப் பகுதிகளிலே

[திரு. எம். மணி-இராசரத்தினம்] [1986 மார்ச் 26

(நண்பகல் 12-00)

உள்ள ஏழை எளிய மக்கள் பொழுது போக்கச் செல்லக் கூடிய ஒரே ஒரு இடம் சினிமா என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே அதை மறுபடியும் மறுபரிசீலனை செய்யுமாறு கோருகிறேன். நம்முடைய அரசு காம்ப்பவுண்டிங் டாக்ஸ் மூலமே நிறைய வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் காம்ப்பவுண்டிங் முறையினால் 2½ கோடி ரூபாய்க்கு மேல் இதில் வருமானம் வந்திருக்கிறது. அது அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான வரி வளர்ச்சி. ஆகவே இதை கருத்தில் கொண்டு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கள்ளச் சாராயத்தை நாட்டிலே ஒழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று இப்போது வீடியோ பெருகி வருகிறது. சில கிராமங்களில் பணம் வசூல் செய்து வீடியோ காட்டப்படுகிறது.

ஆகவே அரசிற்கு வரி இழப்பை ஏற்படுத்தும் வீடியோ போன்றவற்றை ஊக்கப்படுத்துவதைப் போல காம்பவுண்டிங் வரி உயர்வு இருக்கிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தத்துவப் பாடல்கள் கொண்ட படங்களை கிராமத்து மக்கள் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆகவே குறிப்பாக இந்த வரி உயர்வு கிராமத்து மக்களை மிகவும் பாதிக்கும். வீடியோக்கள் போடப்படுவதைக் குறித்து நான் சட்ட மன்றத்தில் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வீடியோவில் 25 பைசாவிற்கு சினிமா என்றால் மக்கள் பக்கத்து ஊர்களுக்கு தியேட்டர்களுக்குப் படம் பார்க்க செல்லவே மாட்டார்கள். அதனால் அரசிற்கு வரி இழப்பு ஏற்படும். திரையரங்குகளை மூடிவிடக் கூடிய அபாயமும் ஏற்படும். வீடியோவை கிராமங்களில் காட்டாமல் தடுத்து விடலாம் என்று சிலர் குறிப்பிடலாம். ஆனால் நாம் சென்று புகார் செய்து காவல் துறையின் பெரிய அதிகாரிகள் இரவு நேரத்தில் அங்கிருந்து, பிறகு அழைத்து வருவதற்குள் சினிமாப் படம் முடிந்து வீடியோ காண்பிப்பவர்கள் காரில் வேறு ஊர்களுக்குச் சென்று விடுவார்கள். ஆகவே அவசர அவசியமாக ஒரு பெரிய துறையாக இருக்கிற சினிமாத் துறை, பிலிம் இன்டஸ்ட்ரி வளர்வதற்கு நாம் வழிவகை காண வேண்டும்.



1986 மார்ச் 26] [திரு. எம். மணி-இராசரத்தினம்]

சினிமாக்காரர்கள் அரசு என்று குற்றம் சாட்டுபவர்களுக்காக நாம் இத்துறைக்கு அதிகமான வரியை விதித்தால் அது பொன் முட்டையிடும் வாத்தை அறுத்துப் பார்ப்பதைப் போல ஆகிவிடும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு சிலர் சி. டி. (காம்பவுன்ட் டாக்ஸ்) டாக்சை எதிர்த்து கோர்ட்டிற்குச் சென்று இருக்கிறார்கள். மேலும் இப்படிப்பட்ட நிலை நீடித்தால் பெரும்பாலான திரையரங்குகளின் முதலாளிகள் கோர்ட்டுகளுக்குச் சென்றால் வரி ஏய்ப்பிற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே இந்த நிலையை அரசு ஆராய்ந்து பார்த்து, எண்டர்டெயின்மெண்ட் டாக்சை உயர்த்தி இருப்பதை மறுபரிசீலனை செய்து அதனைக் குறைக்கும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு சித்தன் போன்றவர்கள் பள்ளிக் கட்டிடங்களை பழுது பார்ப்பதற்கும் சாலைகளை பராமரிப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாய் என்பது யானைப் பசிக்கு சோளப்பொறி போடுவதைப் போன்றது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மையாக இருக்கலாம். ஆனால் மதுவிலக்கினால் ஏற்படுகிற 250 கோடி ரூபாய் வரி இழப்பை ஈடு செய்யத்தக்க ஆலோசனையையும், மத்திய அரசின் நிலையும் என்ன என்று தெரிவித்தால் அது வரவேற்கத் தக்கதாக இருக்குமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்து அதற்கு ஆக்க பூர்வமான பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இங்கே பேசியவர்கள் அன்று வந்ததும் இதே நிலா, இன்று வந்ததும் அதே நிலா என்று குறிப்பிட்டார்கள். நட்சத்திரங்கள் வேண்டுமானால் போய்விடும். ஆனால் என்றும் வரப்போவது அதே நிலா தான். அந்த நிலாவைப் பார்த்து கையிலே பிடித்தேன் என்று பாடினால் நல்லவர்களுக்கு இயலும். அது குறை பேசுபவர்களுக்கு இயலாத ஒன்றாகும். அந்த நிலா ஏழைகளுக்கு குளுமையான பட்டெட்டைக் கொடுத்த நிலா, நல்ல நிலா, சந்திர நிலா, இராமச்சந்திர நிலா, பொன்மேனி கொண்ட நிலா, நல்லாட்சி மக்களுக்கு வழங்கும் பொன் நிலா என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். நான் 1962 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்தேன். அன்று நாவலர் அவர்களும், கலைஞர் அவர்களும், மதியழகன் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்தவர். அப்போது ஆளும்கட்சி மீது குறைகளைச் சொல்லும்போது, குற்றம் சாட்டுகிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தான் பதில் கூறுவார்கள். அங்கத்தினர்கள் அதற்கு எதிர் வரிசையிலிருந்து எழுந்து ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக்கொள்ள மாட்டார்கள். அதைப்போல எதிர் வரிசையிலிருந்து ஏதாவது குற்றம் குறைகளைச் சொன்னாலும் அமைச்சர்கள் தான் பதில் சொல்வார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் அதற்கு மறுப்பு தெரிவிப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இந்த மன்றத்தில் மாறியிருப்பதை பார்க்கிறேன். 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை இந்த மன்றத்தில் இருந்த நான் மீண்டும் 1985 ஆம் ஆண்டு தான் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறேன். இந்த மன்றத்தின் நேரம் இப்போது வீணாக்கப்படுவதை நான் பார்க்கிறேன். இதை நான் சொன்னால் வயதானவன் உளறுகிறான் என்று கூட சிலர் சொல்லக் கூடும். மக்கள் நமக்கு வாக்களித்து இந்த மன்றத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள். இதனை சிந்தனை செய்து பார்க்க வேண்டும். தீர்க்க வேண்டிய மக்கள் பிரச்சனைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை நாம் தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு நாளும் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம், ஒரு மணி நேரம் அவையின் நேரம் அநாவசியமான வாக்குவாதங்களினால் வீணாக்கப்படுவதை பார்க்கிறேன். இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் பொறுமையோடு தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லி அதற்கு பதில் பெற்று நல்ல முறையில் மன்ற நடவடிக்கைகளை கொண்டு செல்ல வேண்டும். அதுதான் நமக்கெல்லாம் பெருமை அளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்து நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.





இரண்டு ஆண்டுக் காலமாக தமிழகத்தின் ஒரு பகுதியில் மழை அதிகமாக பெய்து அதன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு பெருமளவிற்கு நஷ்டம் ஏற்பட்ட நிலைமைகளை நாம் பார்க்கிறோம். அதனால் மக்கள் அவதிப்படுகிற நிலைமையைப் பார்க்கிறோம்.

அதேபோல் கோவை மாவட்டத்தில் உள்ள அவிநாசி, பல்லடம் மேட்டுப்பாளையம் போன்ற பல பகுதிகளில் இரண்டாண்டுக் காலமாக மழை இல்லாமல் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் பெரும் அவதிக்கு உட்பட்டு இருக்கிறார்கள். அங்கே மாடுகளுக்குக் கூட குடிப்பதற்கு தண்ணீர் இல்லாத நிலைமையை நாம் பார்க்கிறோம். அங்கே உள்ள விவசாயிகள் பம்ப் செட்டுகளை ஓட்டுவதே இல்லை. விவசாயம் இல்லாமல் பயிர்களும், நிலங்களும் காய்ந்துவிட்டன. மேலும் மாடுகளுக்குப் போதிய தீவனம் இல்லாத நிலைமையும் ஏற்பட்டு இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பகுதிகளை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, அந்த மாடுகளுக்கு எல்லாம் தீவனம் அளிப்பதற்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது நிவாரணம் அளித்தால் நலமாக இருக்கும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று மின்சாரக் கட்டணம். ஒரு பம்ப்செட்டுக்கு ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் கட்ட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. கடந்த ஓர் ஆண்டுக் காலமாக பம்ப் செட்டுக்கள் ஓடவில்லை. எல்லா பம்ப்செட்டுகளையும் எடுத்து மேலே வைத்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் 450 ரூபாய் கட்ட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே அரசாங்கம் இதை பரிசீலனை செய்து, அவர்களுக்கு எல்லாம் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் கிராமங்களில் எல்லாம் இப்போது குடிநீர்ப் பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது. மக்கள் எல்லாம் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். மாவட்ட கலெக்டர் தலைமையிலே நடக்கிற டி.டி.சி. மீட்டிங்கிலே இதைப் பற்றிச் சொல்கிறபோது,

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1986 மார்ச் 26

பஞ்சாயத்துக்கள், குடிநீர்ப் பிரச்சனையை தீர்த்து வைப்பதற்கான பண வசதி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஆழ்குழாய்க் கிணறு போட்டு, அவர்களுக்கு எல்லாம் குடிநீர் வசதியை இன்றியமையாத இந்த வசதியை உடனடியாகச் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று கோயம்புத்தூர் ஜில்லா முழுவதும் நீண்ட காலமாக சொல்லப்பட்டு வந்த ஒரு கோரிக்கை, கேரள எல்லையோரத்தில் அமைந்துள்ள பாண்டியாறு, புன்னம்புழா திட்டம். இது வெகுகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. பல ஆண்டுக் காலமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டம் அரசாங்கத்தின் மூலமாக நிறைவேற்றப் படுமானால் அவிநாசி, பல்லடம் மற்றும் கோயம்புத்தூர் தாலுக்காக்களுக்கு பாசன வசதியைக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே இதையும் மனதிலே வைத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்திலே சின்னவேடாம்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இதிலே 120 ஏக்கர் பரப்புள்ள ஒரு குளம் கட்டப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக நம்முடைய அரசாங்கத்திற்கு கலெக்டர், மற்றும் பி.டபிள்யூ.டி.-யிலிருந்து ரெக்கமன்ட் பண்ணி வந்திருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, உடனடியாக இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தார்களானால் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் வரையிலும் உள்ள நிலங்களுக்கு தண்ணீர், பாய்ச்சுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதோடு, அங்கேயுள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வசதியை நாம் செய்து கொடுக்க முடியும், என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று என்னுடைய கோவை ஜில்லாவிலே சிறிய பவுண்டரிகள் நிறைய, அதாவது 200-க்கும் மேற்பட்ட பவுண்டரிகள் உள்ளன. அவைகளுக்கு செயில் நிறுவனத்திலே யிருந்து மூலப் பொருள்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன.



1986 மார்ச் 26] [திரு. ஆர். செங்காளியப்பன்]

கோக் போன்ற மற்ற மூலப் பொருள்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் அது அவர்களுக்கு சரியான முறையிலே கிடைப்பது இல்லை. காரணம் அவர்கள் சிறிய சிறிய பவுண்டரிகளாக வைத்திருப்பதாலே, மூலப் பொருள்களை ஒரு வாரத்திற்குள்ளே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது, அந்த வாரத்திலே புதன்கிழமையோ, அல்லது வியாழக்கிழமையோ சொல்கிறார்கள். மேலும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாட்களாகி இருக்கின்றன. அவர்கள் பேங்கிலே போய் பணத்தை எடுத்து அதைப் பெறுவதற்கு வசதி இல்லாமல் போய்விடுகிறது. ஆகையினாலே அங்கே உள்ள 200-க்கும் மேற்பட்ட பவுண்டரிகள் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளன. அதிலே கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இன்று அவைகள் எல்லாம் மூடி வைக்கப்பட்டு உள்ளன. எனவே நம்முடைய அரசாங்கம் ஒரு வாரம் என்று இருப்பதை மாற்றி, 2 வாரம் அல்லது 3 வாரம் என்று அவர்களுக்கு காலத்தை நீட்டிக் கொடுப்பதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோன்று உங்கள் அனைவருக்கும் தெரியும், நான் நீண்ட காலமாக இந்த மன்றத்திலே பேசிக் கொண்டு இருக்கிறேன்—கோவையில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 2 ஆண்டுக் காலமாக பட்டினியோடு வாடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த 2 ஆண்டுக் காலமாக அமைச்சரைச் சந்தித்து இருக்கிறோம், அதிகாரிகளைச் சந்தித்து இருக்கிறோம், என்று அவர்களுக்கு சமாதானம் சொல்லிக் கொண்டு இருந்தோம். ஆனால் அவர்கள் பட்டினியாக இருந்து கஷ்டப்படுகிற காரணத்தால் அவர்கள் இந்த மாதம் 5 ஆம் தேதியிலிருந்து கால்நடையாக இங்கே அமைச்சர்களை நேரடியாக பார்ப்பது என்று முடிவு எடுத்து அவர்கள் கால்நடையாக வந்து கொண்டு இருக்கிறார்கள். 31 ஆம் தேதி அன்று கோட்டையில் வந்து அமைச்சர்களைப் பார்க்க வேண்டும் என்று முடிவு எடுத்து அவர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். அவ்வளவு தூரம் அவர்கள் கஷ்டமும், சிரமமும் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பிரச்சனையை நாம் எடுத்துக் கொள்வதில் சிரமம் இருக்காது. இதற்கு

முன்னால் 2 ஆலைகளை நாம் எடுத்து இருக்கிறோம். ஆனாலும் டிபார்ட்மெண்டிலிருந்தோ, அரசாங்கத்தில் இருந்தோ பெரிய மூலதனம் போட வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு பாங்குக்கு காரண்டி கொடுக்க வேண்டும். இங்கு இருக்கிற ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிஸர் ஒருவரை அங்கே அப்பாயின்ட் செய்ய வேண்டும். அந்த முதலாளிக்கு அதிகாரம் இல்லாமல் செக் பவரிலிருந்து, நூல் விற்பதிலிருந்து, பஞ்சு வாங்குவதிலிருந்து அனைத்தையும் அரசு அதிகாரிகளே பார்த்தால் அதில் நல்ல முறையில் லாபம் இருக்கும். இன்றைக்கும் 2 ஆலைகள் அதிகாரிகளால் பார்க்கப்பட்டு லாபகரமாக நடந்து கொண்டு இருக்கின்றன.

2 ஆண்டுகளுக்கு முன்னால் ஜெயலட்சுமி மில்லையும், ஜோதி மில்லையும் எடுத்தோம். அதை அதிகாரிகள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அங்கு முன்னால் அதிகாரிகள் ஆரம்பிக்கும் போதே நாங்கள் 25 சதவீத சம்பளத்தைக் குறைத்துக் கொண்டோம். அந்த சம்பளத்தை லாபம் வரும்போது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பெயரில் நாங்கள் ஒப்புக் கொண்டோம். அப்படி ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்குள்ளாகவே அந்த சம்பளப் பணம் அதிகாரிகள் நடத்துகின்ற காரணத்தாலே, நேர்மையாக, ஒழுக்கமாக அந்த ஆலை நடைபெறுவதாலே லாபம் வர வர தொழிலாளர் களுக்கு சம்பளத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். பி. எப். பாக்கியையும் அரசுக்கு கட்டிவிட்டார்கள். அரசுக்கு கட்ட வேண்டிய லோன் பாக்கியையும், வங்கிக்கு கட்ட வேண்டிய லோன் மற்றவைகளையும் இப்போது கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் அந்த ஆலைகள் நல்ல முறையில் ஓடிக் கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இதையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அதை தயவுசெய்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு இதை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி எடுக்காமல் இருப்பதால் அரசுக்கு வர வேண்டிய வருவாய் வராமல் இருக்கிறது. சென்டிரல் எக்சைஸ் டூட்டி, வராமல் இருக்கிறது. நம் அரசுக்கு வரவேண்டிய சேல்ஸ் டாக்ஸ் வராமல் நஷ்டம் ஏற்படுகிறது, மற்றும் தொழிலாளர்களும்





கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் உடனடியாக இதில் கண்காணித்து அதை அரசு ஏற்று நடத்துவதற்கு உண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே பொதுவாக எல்லா இடங்களிலேயும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. படித்துப் பட்டம் பெற்று வெளியே வந்தவர்கள் நிறையப் பேருக்கு வேலை வாய்ப்பை நம்மால் அளிக்க முடியவில்லை. அதற்கு நிறைய முதலீடு செய்து நாம் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பித்து அவர்களுக்கு எல்லாம் வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் நாம் அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறோம். நிறைய வீடுகள் கட்ட வேண்டும் என்ற முடிவை அரசு எடுத்து இருந்தாலும் இப்போது கொடுக்கக் கூடிய தொகை இன்றைக்கு உள்ள விலைவாசியில் அது போதாது. இன்று 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக எல்லாம் உயர்த்துகிறோம். இருந்தாலும் அது போதாது. 15 ஆயிரம் ரூபாய் அளவில் அரிசனங்களுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் நீங்கள் ஒதுக்கினால் அதை நல்ல முறையில் கட்ட முடியும். அப்போது தான் அந்த வீடுகள் இடியாதபடி நல்ல முறையில் இருக்கும். நாம் குறைந்தப் பணத்தை ஒதுக்கினால் சரியானபடி சிமென்ட் போட முடியாது; சரியானபடி மணலை கலக்க மாட்டார்கள். ஆகவே அந்த வீடுகள் இடிந்து விழக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆகவே அதை நல்ல முறையில் கட்ட நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். நாம் இப்போது பஞ்சாயத்துகளில், ஒன்றியங்களில், நகராட்சி களில் தேர்தல் நடத்தியதால் என் போன்ற எம்.எல்.ஏ. க்களுக்கு வேலை குறைந்து இருக்கிறது. முன்பு எல்லாம் எனக்கு முன்னால் ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும், ஒன்றியத்தில் இருந்தும், நகராட்சிகளில் இருந்தும் என் வீட்டில் வந்து நிறைய ஆட்கள் உட்கார்ந்து இருப்பார்கள். குடி நீர் கிடைக்கவில்லை, ரோடு வசதி வேண்டும், லைட் எரியவில்லை,

டிட்ச் சரியில்லை என்று கூறிக்கொண்டு இருப்பார்கள். இப்போது அந்த குறை நீங்கி இருக்கிறது. அதேபோல் மாநகராட்சிகளிலும் இந்தத் தேர்தலை உடனடியாக நடத்தி விட்டால் மக்கள் மன்றம் வந்து மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய குறைகளை போக்கிக் கொள்வார்கள் என்பதால் மாநகராட்சிகளுக்கு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கு. வடிவேல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இங்கே தாக்கல் செய்து அதன் மீது இந்த மன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த என்னுடைய இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியை காணிக்கையாக்கி இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்தினுடைய கிராமங்களில், பட்டித்தொட்டிகள் எல்லாம் சாலை வசதி பெற வேண்டும் என்றும், குடிநீர், வசதி பெற வேண்டும் என்பதற்காகத் தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஊரக தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு மாபெரும் திட்டத்தை கொண்டு வந்து மற்ற மாநிலங்களில் எல்லாம் இல்லாத அளவுக்கு நல்ல முறையில் அனைத்து பட்டித் தொட்டிகளுக்கும் போக்குவரத்திற்கு உதவிகரமாக இருக்கும் அளவுக்கு சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்து கொடுத்தார்கள் என்பதை இந்த மாமன்றம் மட்டும் அல்ல தமிழக மக்கள் நன்கு அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் நம்முடைய இந்திய துணைக் கண்டத்திலேயே பாரத பிரதமர் அவர்களுடைய 20 அம்சத் திட்டத்தை நம்முடைய தமிழக அரசு தான் தீவிரமாக செயல்படுத்தி முதல் மாநிலமாக முன்னணியில் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழகத்தில் உள்ள மக்களும் நன்கு அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 80 லட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 1982 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் சீராக நல்ல முறையில் சுகாதாரத்தோடு பாதுகாக்கப்பட்ட சத்துணவு வழங்கப்பட்டு அந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு எல்லாம் சீருடை வழங்கப்பட்டு வருவது நம்முடைய தமிழக மக்கள் அதிகமாக பாராட்டி வருகிறார்கள். அப்படி பாராட்டுவது மட்டும் அல்ல, இந்த தமிழகத்து மக்களுக்காக இந்த அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பல பொருட்களுக்கு வரியை குறைத்து இருக்கிறார்கள். இந்த வரியை குறைத்து இருக்கின்ற காரணத்தை நான் இங்கே எடுத்துச் சொல்லுகிற அதேநேரத்தில் நம்முடைய மாற்றுக் கட்சி நண்பர்கள் பேசும் போது இதிலே வளர்ச்சி ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுவது இந்த அறிக்கையானது ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் திருப்பதி லட்டு போன்று ஒரு இனிப்பான சுவை பெற்றுள்ள அறிக்கை என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் சிறிய வணிகர்கள் முதல் பெரிய வ்ணிகர்கள் அத்தனை பேருக்கும் இது சாதாரண அறிக்கை இல்லை பழனி பஞ்சாமிர்தம் என்று சொல்லிக்கொள்ள நான் பெருமைப் படுகிறேன். அந்த அளவுக்கு இந்த அறிக்கையில் வரியைக் குறைத்தும், வரியை நீக்கியும், வரி இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த அறிக்கையில் ஒன்றுமே இல்லை. என்று சொல்லக்கூடிய நண்பர்களுக்கு நான் இதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையிலே நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், 1977 ஆம் ஆண்டு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு மதுவிலக்கை தீவிரமாக அமல் செய்ய வேண்டும் என்பதற்காக கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் எல்லாம் கள்ளச் சாராயத்தையும், வார்னிஷ்ஷையும் குடித்து பல பேர் இறந்து இருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான வழக்குகள் இந்த

[திரு. கு. வடிவேல்] [1986 மார்ச் 26

மதுவிலக்கு அமல் ஆவதால் போட்டு இருந்தார்கள், அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும் என்றும், கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்றும் இந்த மாமன்றத்தில் 1977 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் வாதாடி கேட்டுக் கொண்டார்கள். அந்த மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கை தளர்த்தினார்களே தவிர அறவே ரத்து செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் மீண்டும் மது விலக்கை அமல் செய்ய வேண்டும் என்று தமிழக மக்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீது விலக்கை தீவிரமாக அமல் செய்வதற்கு அறிவித்து இருப்பதை உண்மையிலே அனைவராலும் வரவேற்கக் கூடிய பாராட்டக்கூடிய ஒரு அம்சம் ஆகும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காவல்துறையைப் பொறுத்தவரையில் காவலளர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டுவதற்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு நாவலர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், வீடுகள் கட்டுவது மட்டும் அல்லாமல் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பணியாற்றக்கூடிய காவலாளர்கள் தேவையான அளவில் இல்லை. அந்த காவலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நமது அரசு கூடிய வரையில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்தவரையில் காவலாளர் என்ற பகுதியில் அடிக்கடி கலவரம் ஏற்பட்டு வருகிறது. ஆகவே அந்தப் பகுதியில் ஒரு புதிய காவல் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியில் நொய்யல் என்ற இடத்தில் ஒரு புதிய காவல் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. கு. வடிவேல்]

அது மட்டும் அல்லாமல் கரூர் நகரமானது சேர மன்னர்கள் கொங்கு நாட்டை ஆண்டபோது கரூரை தலைநகரமாக அறிவித்து ஆட்சி செய்து வந்தார்கள். திருச்சி மாவட்டத்தை இரண்டாக பிரிக்கப் போவதாக கேள்விப்பட்டேன். அப்படி இரண்டாக் பிரிப்பதற்குப் பதிலாக அந்த மாவட்டத்தை 3 ஆக பிரித்து கரூர் நகரத்தை தலைமை இடமாக வைத்து ஒரு மாவட்டத்தை உருவாக்கித் தர வேண்டும் என்று மாமன்றத்தின் மூலம் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாற்றுக் கட்சி நண்பர்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலும், அன்று வந்ததும் அதே நிலா, இன்று வந்ததும் அதே நிலா என்று சொன்னார்கள். இந்த மாமன்றத்தின் மூலம் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புவது, வானத்துச் சந்திரனுக்கும் தேய்பிறை உண்டு, ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் என்னும் நிலாவிற்கு என்றும் தேய்பிறை என்பது கிடையாது.

(பிற்பகல் 12-20)

அதுமட்டுமல்ல, நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், வளர்ச்சித் திட்டமே இல்லை என்று சொன்னார்கள். அதற்கு முன்பாக நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் மத்திய அரசு இன்னமும் மெத்தனமாகத்தான் இருக்கிறது. நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நமீபியா நாட்டினுடைய விடுதலைக்காக ஆதரவை திரட்டுவதற்காக வருகிற மே மாதத்தில் நமீபியா, டான்சேனியா, ஜாம்பியா, மொசாம்பிக் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் போகின்றார்கள். அதற்காக நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இலங்கைப் பிரச்சினையை முடித்து விட்டு அங்கே செல்வார்களேயானால், நிச்சயமாக நாம் அவர்களைப் பாராட்டுவதற்கும், வாழ்த்துவதற்கும் கடமைப் பட்டிருக்கிறோம்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): எந்தக் கருத்தைச் சொல்லும்போதும் உறுப்பினர்கள் உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது. உறுப்பினர் பேசும் கடைசிப் பகுதி உள்நோக்கம் கற்பிப்பதாக இருப்பதால், மேற்கூறப்பட்ட பகுதியை நீக்கிவிடுகிறேன்.

திரு. கு. வடிவேல்: * *

அதுமட்டுமல்ல, தொழில் வளர்ச்சி இல்லை என்று சொன்னார்கள். ஒரு மாநிலத்திற்கு தொழில் வளர்ச்சி வேண்டுமென்று சொன்னால், மின் உற்பத்தியில் தன்னிறைவு வேண்டும். நெய்வேலியில் இருக்கிற நிலையத்தில் உற்பத்தியாகிற மின்சாரத்தைப் பொறுத்தவரை, இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு திட்டம் தீட்டி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு உடனடியாக அனுமதி அளித்து நிறைவேற்றச் செய்வார்களேயானால், நிச்சயமான தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் நிற்கும் என்பதை மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சையிலே, டெல்டாப் பகுதியில் நல்ல இயற்கை வாயுக்களும், நல்ல எண்ணெய்களும் கிடைப்பதாகக் கேள்விப்படுகிறோம். அந்த உற்பத்தியைப் பெருக்கி நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு திட்டங்களைக் கொண்டுவர முன்வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். நாங்கள் தட்டிக் கொண்டுதான் இருக்கிறோம். கேட்டுக்கொண்டுதான் வருகிறோம். அங்கு கொடுக்கக் கூடியவைகள் தேவையான அளவில் வரவில்லை. தேவையான அளவிற்குக் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முதலாவதாக நிற்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும், இந்தியத் துணைக் கண்டத்திலே இதுவரை இல்லாத அளவிற்கு கரும்புச் சக்கையைக் கச்சாப் பொருளாகக் கொண்டு, ஒரு பெரிய காகித ஆலை என்னுடைய

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தொகுதியில் புகளூரில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் துவக்கப்பட்ட போது கூட, கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் வருமா, வராதா என்றெல்லாம் கேலியும் கிண்டலும் பேசினார்கள். நாம் அன்றாடம் படிக்கின்ற செய்தித் தாள்களுக்கான காகிதம் புகளூரிலிருந்துதான் கிடைக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் நான் காங்கிரஸ் நண்பர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்வதெல்லாம், கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதை திட்டத்தைப் பொறுத்தவரை இன்னும் வேலைகள் சரியாக நடைபெறவில்லை. கரூர்—திண்டுக்கல், திண்டுக்கல்—தூத்துக்குடி, கரூர்—சேலம் ரயில் பாதை போடுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதற்கு சரியான அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதையெல்லாம் நீங்கள் மத்திய அரசாங்கத்திடம் கேட்டு, அந்தத் திட்டங்களை செயல்படுத்துவீர்களேயானால், நிச்சயமாக நாங்கள் ஒரு பெரிய பாராட்டு விழா நடத்தயிருக்கிறோம்.

என்னுடைய தொகுதியான கரூர் கைத்தறித் துறையில் நீண்ட காலமாக சிறந்து விளங்குகிறது. அங்கு சரியான ரயில் போக்குவரத்து வசதி இல்லை. மத்திய அரசாங்கத்திடம் நீண்ட காலமாக வற்புறுத்தி கேட்டுக்கொண்டிருக்கிறோம். கரூரிலிருந்து சென்னை வரையிலும் ஒரு துரித ரயில் வண்டி விட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய கரூர் தொகுதியானது கரும்பு விவசாயிகள் அதிகமாக உள்ள பகுதியாகும். கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு அதிகமாக விலை கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டால் கொடுப்பதே இல்லை. மரியாதைக்குரிய முன்னாள் பாரதப் பிரதமராக இருந்த திரு. சரண்சிங் அவர்கள் காலத்திலேதான் கரும்பு விவசாயிகளுக்கு வாரி வழங்கப்பட்டது, அவர்களுடைய காலம்தான் கரும்பு விவசாயிகளின் பொற்காலமாகும். மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் திரு. சரண்சிங் அவர்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 50 ரூபாய் உயர்த்திக் கொடுத்தார்கள்.

அதேபோன்று உரத்தின் விலையையும் குறைத்தார்கள். இதை யெல்லாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் டெல்லிக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் நெல் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் அங்கே தட்டிச் சொல்ல வேண்டும். அங்கே கோதுமைக்குக் கொடுக்கிற விலையிலே பாதிகூட இங்கே கொடுப்பது இல்லை. இப்படி இருந்தால் விவசாயப் பெருமக்கள் எப்படி நம்பி வாழ்க்கையை நடத்துவார்கள் என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியானது ஒரு தீவு போன்ற தொகுதியாகும். வட கோடியிலே காவிரி நதியும் தென்கோடியிலே அமராவதி நதியும் மேற்குக் கோடியிலே நொய்யல் ஆறும் ஓடுகின்றன. இப்படி 3 ஆறுகள் ஓடியும் என்னுடைய தொகுதிக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. அமராவதியிலிருந்து தண்ணீர் வருமோ வராதோ என்ற நிலை இருக்கிறது.

அமராவதி ஆற்றின் கடைக்கோடி ஆயக்கட்டு என்று சொல்லக் கூடிய பகுதி என்னுடைய கரூர் தொகுதிதான். அங்கே முறைப்படி சட்டப்படி வரவேண்டிய தண்ணீர் வருவதில்லை. விவசாயத்திற்குத் தண்ணீர் வராவிட்டாலும் கூட குடிநீருக்காவது வருகிறதா என்றால் இல்லை. குடிநீருக்காக அமராவதி ஆற்றைத்தான் என்னுடைய தொகுதி நம்பிக் கொண்டிருக்கிறது. ஆகவே அரசு அந்தத் தொகுதிக்கு அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நொய்யல் ஆற்றுத் திட்டமானது ஒரு சாதாரணத் திட்டமல்ல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்து நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப்பற்றிப் பேசி வந்தார்கள். ஆனால் உண்மையிலேயே அதற்கு செயல்வடிவம் கொடுத்து அந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அதற்காக நான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மனப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரியிலிருந்து



பிரிந்து வருகிற புகளூர் ராஜ வாய்க்கால், வாங்கல் வாய்க்கால், நெரூர் வாய்க்கால் அமராவதியிலிருந்து பிரிந்து வரும் கோயம் பள்ளி வாய்க்கால புலியூர் வாய்க்கால், சணப்பரட்டி வாய்க்கால் ஆகியவற்றின் கரைகள் உடைப்பெடுத்து அரித்துச் செல்லப் படுகின்றன. அந்த வாய்க்கால்களை முறைப்படி ரீமாடலிங் செய்ய வேண்டும்.

அடுத்து தமிழகத்து வாக்காளப் பெருமக்கள் சாதாரண பெருமக்கள் அல்ல. உண்மையிலே அரசியல் ஞானமும் அரசியல் விழிப்புணர்ச்சியும் உள்ளவர்கள். நான் மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டு நடைபெற்றது நாடாளுமன்றத் தேர்தல். அதில் டெல்லிக்கு அன்னை இந்திரா தேவை என்று தமிழக மக்கள் வாக்களித்தார்கள். அதற்குப் பிறகு புரட்சி தலைவர் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக பிப்ரவரி மாதம் மரியாதைக்குரிய தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் தூண்டுதல் காரணமாக ஆட்சியைக் கலைத்தார்கள். அதற்குப்பிறகு இருவரும் சேர்ந்து கோட்டையைப் பிடித்து விடலாம் என்று மனக்கோட்டை கட்டினார்கள். அதற்குப் பிறகு மே மாதம் நடைபெற்ற தமிழகத்து சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தின் கோட்டைக்குத் தகுதியுள்ள ஒரே ஒருவர் தமிழகத்தினுடைய நாலரைக் கோடி மக்களுடைய தள நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தான் என்று முடிவுசெய்து தமிழக மக்கள் வாக்களித்தார்கள். ஆகவே, உள்ளாட்சித் தேர்தலிலே ஒரு சில இடங்கள் அதிகமாக வந்துவிட்டதால் அதை வைத்து கோட்டையைப் பிடித்துவிடலாம் என்று மனக்கோட்டை கட்டும் நண்பர்களுக்குச் சொல்கிறேன். தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள். அவர்களை ஏமாற்றவும் முடியாது. அடுத்த தேர்தலில் புரட்சித் தலைவரின் அணி வெல்லும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்

**டாக்டர் க. நல்லமுத்து:** மாற்றவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை தலைவராகக் கொண்ட இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடக்கின்ற பொது விவாதத்தின்மீது நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது வரி விலக்கு, வரிக் குறைப்பு, ஒரு முனை வரி மாற்றம் போன்ற அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் பொருளாதார வளர்ச்சிக்கு உரிய திட்டங்கள் எதுவும் காணப்படாத நிலையைக் காண்கிறேன். ஒரே ஒரு சிறு அம்சம் மட்டும் காணப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

உயிர் காக்கும் 49 வகையான மருந்துகளுக்கு எட்டு விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக வரியைக் குறைந்திருக்கிறார்கள். நான் அதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இந்த வரிக் குறைப்பிற்குப் பதிலாக வரியே இல்லாமல் செய்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, குழந்தைகளுக்கான பால் உணவுப் பொருட்களின் மீது வரி குறைப்பு செய்திருப்பதை நான் பாராட்டு முகத்தான் அவைகளுக்கு வரி விலக்கு கொடுத்திருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். துத்தநாகம் பூசிய இரும்புவாளிகள், கரி, நிலக்கரி, உமி, தவிடு போன்றவற்றிற்கெல்லாம் வரிவிலக்கு கொடுத்திருப்பதைப் பார்க்கின்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எல்லோர் வீட்டிலும் அடுப்பு மட்டும் புகைந்தால் போதும் என்பதைக் கருத்திற்கொண்டு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அத்துடன் அந்தப் புகைகின்ற அடுப்பில் வைக்கப்படுகின்ற பாத்திரங்களுக்கும் வரி விலக்கு கொடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அந்தப் பாத்திரத்தில் வைக்கக்கூடிய அரிசிக்கு வழிவகை தேடுவதற்குரிய பொருளாதாரத் திட்டங்களை வகுத்திருந்தால் நான் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப் பட்டிருப்பேன். ஆனால் இங்கே அதுபோன்ற சிறப்பு அம்சங்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு வெல்லத்திற்கு ஒருமுனைவரி வேண்டுமென்று கோரிய கருத்தின் அடிப்படையில் இங்கே வெல்லத்திற்கு ஒருமுனை வரியை விதித்திருப்பதை உளமாரப் பாராட்டுகிறேன்.

இங்கே தொழில் வளர்ச்சி இல்லை என்ற கருத்தை அமைச்சர்களும், ஆளுங்கட்சி நண்பர்களும் மறுத்திருக்கிறார்கள். மறுப்பதும், ஏற்பதும், புகழ்வதும் என்பதற்கு இங்கே பட்டிமன்றம் நடக்கவில்லை. இங்கே இருக்கின்ற கருத்தைப் பார்க்கின்றபொழுது, அறிக்கையைப் பார்க்கின்றபொழுது தொழில்





வளர்ச்சிக்கு என்ன என்ன திட்டங்களை வகுத்திருக்கிறோம், அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கி இருக்கிறோம் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இங்கே பார்த்தால், திருச்சியிலுள்ள பாய்லர் தொழிற்சாலையைப் போன்ற ஆலை கட்டும் திட்டம் இல்லை; துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற திட்டங்கள் இல்லை; நெய்வேலி பழுப்பு நிலக்கரியைப் போன்று உருவாக்குகின்ற திட்டம் இல்லை; அனல் மின்நிலையங்களை உருவாக்குகின்ற திட்டம் இங்கே காணப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், சிறுதொழில்களை உருவாக்குகின்ற திட்டங்கள்கூட இங்கே இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரிய தொழில்களுக்கான திட்டங்களுக்கான அனுமதியைக் கொடுக்க வேண்டியது மைய அரசு. அப்படி அனுமதி கிடைக்கவில்லை என்பதைத்தான் ஏற்கனவே இங்கே நேற்றே நாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே, மாநில அரசிலிருந்து மைய அரசினிடத்தில் கேட்கப்பட்டிருக்கின்ற பல தொழில்களைத் துவங்குவதற்கான உரிமம் கிடைக்கவில்லை என்பதை மட்டும் நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க மாற்றுத் தலைவரவர்களே, இதைப்போன்ற ஒரு குற்றச்சாட்டினைக் கடந்த சில நாட்களாக ஆளுங்கட்சியிலிருந்து எழுப்பிக்கொண்டேயிருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் இப்பொழுது அதிகாரத்திலே இருப்பதாலே, எங்களிடத்தில் இல்லாத சில புள்ளி விவரங்கள் அவர்களிடத்தில் இருக்கும். நாங்கள் இந்த இந்த ஆண்டில் இன்னின்ன தொழில்களைத் தொடங்குவதற்கு விண்ணப்பித்தோம்; இந்த இந்தத் தேதிகளில் நினைவுபடுத்தியிருக்கிறோம்; ஆனால் அவைகள் கொடுக்கப்படவில்லை; அண்டை மாநிலங்களில் இந்த இந்த மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைக் கொடுப்பார்களேயானால் அது பொருத்தமாக இருக்கும். அப்படி இல்லாமல் பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டைச் சொன்னால் அதை ஸ்வீப்பிங் ரிமார்க்காகத்தான் நான் நினைக்கிறேன். எனவே, ஆதாரத்தோடு சொல்லட்டும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு ஆதாரத்தைக் கையிலே வைத்துக் கொண்டே நான் சொல்லுகிறேன். மாநிலங்களவை உறுப்பினர் திரு. மோகனரங்கம் அவர்கள் மைய அரசினுடைய தொழில் அமைச்சருக்குக் கேட்டிருக்கின்ற வினாவிற்குத் தொழில் அமைச்சர் விடை அளித்திருக்கிறார்கள். 1983-லேயிருந்து 1986 வரைக்கும் இந்த மாநில அரசு மைய அரசினிடத்திலே கேட்ட தொழில்கள் — 84 தொழில்களுக்கு உரிமங்கள் அங்கேயே தேக்கத்தில் இருக்கின்றன என்று அவர்கள் விடையளித்திருக்கிறார்கள். இந்த ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒன்றே போதும், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி வளராமல் இருப்பதற்கு மைய அரசுதான் முதல் காரணம் என்பதற்கு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க மாற்றுத் தலைவரவர்களே, நானும் ஆதாரத்தோடுதான் வந்திருக்கிறேன். உங்கள் மூலமாக வேளாண்மைத் துறை அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல தொழில்களைத் துவங்குவதற்கு மத்திய அரசால் லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன; லெட்டர் ஆஃப் இன்டென்ட்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்டஸ்ட்ரியல் லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 1980 ஆம் ஆண்டிலே 50 லெட்டர்ஸும், 1981-ஆம் ஆண்டிலே 69-ம், 1982 ஆம் ஆண்டிலே 66-ம், 1983 ஆம் ஆண்டிலே 68-ம், 1984 ஆம் ஆண்டிலே 89-ம் 1985 ஆம் ஆண்டுக்கு 109 லெட்டர்ஸும், கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, இன்டஸ்ட்ரியல் லைசன்ஸ், 1980 ஆம் ஆண்டில் 37; 1981 ஆம் ஆண்டில் 30; 1982 ஆம் ஆண்டில் 41; 1983 ஆம் ஆண்டில் 76; 1984 ஆம் ஆண்டில் 85; 1985 ஆம் ஆண்டில் 177. இந்திய முழுவதும் எடுத்துக்கொண்டால் 18½ சத வீதம். ஆகவே இந்தத் தொழில்களிலே எந்தத் தொழில் துவங்கப்படவில்லை;

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

எவை எவை நிலுவையாக இருக்கின்றன; குற்றுயிராகக் கிடக்கின்றன; எவை எவை ஆரோக்கியத்தோடு இருக்கின்றன எனக் கூற வேண்டும். இதற்கான காரணத்தோடு விவரங்களைக் கொடுத்தால் அது விவாதத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதில் எந்தப் புள்ளி விவரம் உண்மை என்பதைத் தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். நான் இந்தப் புள்ளி விவரத்தை, அவர்கள் அனுப்பியிருக்கின்ற கடிதத்தையே கையில் வைத்திருக்கிறேன். திரு. மோகனரங்கம் அவர்களுக்கு மத்தியத் தொழில் அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்ற, எழுதி இருக்கின்ற அந்த பதிலுக்கான கடிதத்தை நான் கையிலே வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன்.

" From 1985-86 as on 4-3-1986, 84 application for the grant of etter of Intents were received under the provisions of Industries Act, 1951 for the location of industries in Tamil Nadu State. ".

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் ஆதாரத்தோடு தான் பேசுகிறேன். ராஜ்ய சபையிலே, மினிஸ்டர் ஆப் ஸ்டேட் ஃபார் பைனான்ஸாக இருக்கிற திரு. ஜனார்த்தன் பூஜாரி அவர்கள் கொடுத்த விவரத்தைப் படிப்பதற்கு அனுமதி வேண்டுகிறேன். 'மத்திய அரசாங்கம், தொழில் துறையிலே, தமிழகத்திற்கு ஒதுக்கிய முதலீடுகள், 1979-லே ரூ. 615 கோடி; 1980-லே ரூ. 847 கோடி; 1981-லே ரூ. 922 கோடி; 1982-லே ரூ. 1,028 கோடி; 1983-லே ரூ. 1,332 கோடி. ஆகவே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவிலே மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கவில்லை. அல்லது வீண் காலதாமதம் செய்ய வேண்டுமென்று நிச்சயமாகக் கருதாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சொல்வது தொகை; அமைச்சர் சொல்வது லெட்டர் ஆஃப் இன்டென்ட் இல்லை, என்பது. தொழில் துறை அமைச்சர் நேற்றே தெளிவாகச் சொல்லிவிட்டார், தொழில் மானியக் கோரிக்கை சமயத்திலே, இவை பற்றியெல்லாம், விளக்கிப் பேசலாம், என்று. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் தந்திருப்பது என்னுடைய சொந்தக் கருத்தல்ல. மைய அமைச்சர் வழங்கியிருக்கிற பதிலை நான் தந்திருக்கிறேன். மாநில அமைச்சரை நம்பாவிட்டாலும், மைய அமைச்சரை நம்பக் கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன புள்ளி விவரங்களுக்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். எந்த மைய அமைச்சரை உதவிக்காக நாடுகிறாரோ, அந்த மைய அமைச்சரிடம் இருந்து தான் நானும் பெற்றுக் கொண்டு வந்து சொல்கிறேன். இப்போதாவது நம்புவீர்கள் என்று நானும் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற புள்ளி விவரத்திற்கு அவரைவிட பதினாராயிரம் மடங்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இன்னும் மைய அரசு வழங்கியிருக்கிற பதில், நாம் தொழில் தொடங்குவதற்கு உரிமம் கேட்டு, அங்கே விண்ணப்பங்கள் தேக்கத்தில் இருக்கின்றன என்பது. இது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிந்திருக்கிறது, ஒப்புக்கொண்டிருக்கிற உண்மை. நாம் கேட்கின்ற பல தொழில்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஐ.சி.எப். இங்கே தொடங்கப்படுவதாக இருந்தது, பஞ்சாபுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படிப் பல தொழில்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. சேது சமுத்திரம் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கவேண்டுமென்று பரிந்துரை செய்தார்கள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இல்லையென்று மைய அரசு கையை விரித்திருக்கிறது. கரூர்-திண்டுக்கல் அகல ரெயில் பாதைக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை, அனைத்தும் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளக் குமுறல். ஆகவே, உரிய இடத்திலே இருக்கிறவர்கள் மதிக்கின்ற உணர்வைப் பெற்றால் தான் நல்லதே தவிர, அவற்றைப் புறக்கணித்து வேறுவிதமான புள்ளி விரங்களை நீங்கள் சொல்வது அவ்வளவு நல்லதல்ல. அது நாட்டினுடைய வளர்ச்சிக்கு உகந்ததும் அல்ல. (குறுக்கீடுகள்).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, நான் கொடுத்த புள்ளி விவரங்கள் அதிகாரபூர்வமான புள்ளி விவரங்கள். அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள், அதே போல், நானும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். தமிழகத்திற்குப் புதுத் திட்டங்கள் வரவேண்டுமென்பதிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அக்கறை இருப்பதைப் போல, அதை விட அதிகமாக காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. மத்திய அரசாங்கத்திடம் கேட்பதிலே



உங்களோடு நாங்களும் குரல் கொடுக்கிறோம். தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். ஆனால், அமைச்சர் தேங்கிக் கிடக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் அமைச்சர் தேங்கிக் கிடக்கிறது என்று சொல்கிறார். தேங்கிக் கிடப்பது மத்திய அரசாங்கத்தில் மட்டும்தானா ? மாநில அரசாங்கத்தில் தேங்கிக் கிடக்கவில்லையா ? நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள், தமிழகத்தில் தேங்கிக் கிடக்கவில்லையா ? அதற்குப் பதில் சொல்லுங்கள், புள்ளி விவரம் கொடுக்க முடியுமா ? பல காரணங்களாலே தேங்கிக் கிடக்கின்றன, மற்ற மாநில விண்ணப்பங்கள் கூடத் தேங்கிக் கிடக்கின்றன. தேங்கிக் கிடக்கத்தான் செய்யும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, மைய அரசின் மூலமாகத்தான் பெரிய தொழில்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பைப் பெறமுடியும். மாநில அரசு, கூடை முடைதல், பாய் பின்னுதல் போன்ற இந்தத் தொழில்களை வைத்துக் கொண்டு, நாம் மக்களுக்குப் பெரும் அளவிலே வேலை வாய்ப்புக் கொடுக்க முடியாது. ஆகவே, பெரிய தொழில் தொடங்கப்படுவதற்கான உரிமத்தை மைய அரசு கொடுக்க வேண்டும். அதைத்தான் இங்கே குற்றச்சாட்டாகக் குறிப்பிட்டேன். ஐ.சி.எப். போன்ற தொழில்கள் தொடங்குவதற்கு வாய்ப்பு இருந்தால், அதிலே நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால், அமைச்சர் அவர்களே, அதற்குப் பதில் அளித்திருக்கிறார். திரு. மோகனரங்கம், எம்.பி. அவர்களுக்கு, பஞ்சாபுக்கு மாற்றப்பட்டிருக்கிறது, என்று. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பது தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு எப்படி சரியாக வரும்; தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு மைய அரசு உதவுகிறது என்று சொல்வதற்கு இது எப்படி வாய்ப்பாக இருக்கும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

(பிற்பகல் 12.40)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கொடுத்துள்ள புள்ளி விரங்கள் மூலமாக ஆண்டுக்காண்டு மத்திய அரசின் முதலீடு அதிகமாகிறது என்பதைச் சுட்டிக்காட்டினேன். (குறுக்கீடு). மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் உதவியோடு

கூடிய தொழில்கள் ஒன்றும் தொடங்கப்படவில்லை என்று சொன்னார்கள்; பெரும் தொழில்கள் இல்லை, மத்திய அரசின் முதலீடு அதிகமாக இல்லை என்று சொன்னார்கள். அதற்காகத் தான் ஒரு நீண்ட பட்டியலை நான் வாசித்தேன். அதற்கு ஆதாரம் இல்லை என்று சொல்வார்களானால் நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நல்ல செய்தியாக ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன் வெகு விரைவிலே தமிழ்நாட்டிலே ஊட்டியில் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலை 176 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கப்படும் திட்டம் வரும். மத்திய அரசிடமிருந்து இந்த அறிவிப்பு வரவிருக்கிறது. அப்போது மனநிறைவு அடைவார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்ட புள்ளிவிவரங்களுக்கு பொறுப் பேற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். அதிலே மாறுபாடு இல்லை. ஆனால் இந்த மாநிலத்தில் எந்தத் தொழிலைத் தொடங்கினால் வேலைவாய்ப்பு அதிகமாகக் கிடைக்கும், எந்தத் தொழிலைத் தொடங்கினால் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த தாக இருக்கும் என்பதை மாநில அரசு முடிவு செய்து, பரிந்துரை செய்து அனுப்புகிறபோது அதற்கு அனுமதி அளிப்பதுதான் சரியாக இருக்கும். அதை விட்டுவிட்டு, அவர்களாக ஏதாவது சொல்லி, அது தொடங்கப்படவில்லை என்றால், அனுமதி அளித்தும் தொழில் தொடங்கவில்லை என்று குற்றஞ்சாட்டுவது எப்படி சரியாக இருக்கும்? இந்த மாநிலத்திற்கு எது ஒத்து வரும், உகந்ததாக இருக்கும் என்று கருதுகிறோமோ அதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கிறோம். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் என்ன குற்றச்சாட்டு இருக்கிறது? இதில் ஒன்றும் பிரச்சனை இல்லை. மாநில அரசு கேட்கிற தொழிலை மத்திய அரசு கொடுக்கவில்லை: அவர்களாக சில தொழில்களைக் கொடுக்கி றார்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். இதிலே குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி அடிக்கடி குறுக்கிடக் கூடாது. அமைச்சரின் பதிலுக்கு ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் நீங்கள் பேசும்போது விளக்கம் கொடுக்கலாம். அவ்வப்போது உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது.





**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னது அவைக் குறிப்பில் இருக்கிறது. அதற்கு நான் பதில் சொன்னால்தான் பொருத்தமாக இருக்கும். இல்லை என்றால் அவர் குறிப்பிட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுங்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஊட்டியில் இருக்கிற போட்டோ ஃபிலிம் தொழிற்சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று நாம் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக் கிறோம். நம்முடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்று, அனுமதி அளிக்கின்ற வகையிலே பரிசீலனை செய்து வருகிறது. விரைவிலே அறிவிப்பு வரும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலை வாய்ப்பு இல்லாத தொழில்கள் தான் வருகின்றன என்று சொன்னார்கள். 176 கோடி ரூபாய் திட்டத்தில் விரிவாக்கப் படும் இந்த ஊட்டி போட்டோ ஃபிலிம் தொழிற்சாலையில் 1,500 பேர்களுக்கு நேரடியாகவும், ஏறத்தாழ 15,000 பேர்களுக்கு மறைமுகமாகவும் (இன்டைரக்ட்) வேலை வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை இதிலே இருக்கிறது. அந்த நல்ல அறிவிப்பு விரை விலே வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதற்கு பொறுப்பேற்றுக் கொள்வதாகச் சொன் னார்கள். ஆனால் இந்த விவாதம் எங்கோ போய்க்கொண் டிருக்கிறது; யார் யாரிடமோ போய் நின்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்காளியப்பன் அவர்கள் எடுத்துச் சொன்னதுதான் நடைமுறைக்கு உகந்ததாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகின்ற ஐயப்பாடுகள் அல்லது உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்று இருந்தால் பெரும் பாலும் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்; அல்லது அதற்குப் பொறுப்பான அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அமைச்சருடைய பதிலிலே ஏதாவது ஐயம் இருந்தால், அல்லது விளக்கம் சொல்ல வேண்டுமென்று நினைத்தால் முன்வரிசையில் இருக்கிற அந்தந்தக் கட்சித் தலைவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு பதில் சொல்வதுதான் முறையாக இருக்கிறது. இப்போது அந்த முறை இல்லை. அவையில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து பதில் சொல்வது என்ற நிலை வந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1986 மார்ச் 26

பிறகுதான் எல்லாப் பிரச்சனைகளும் வரத்தொடங்கி விட்டன. இதிலே வீண் விவகாரங்கள் தேவையில்லை. ஆண்டுக்காண்டு நாம் அனுமதி கேட்கிறோம், தொழில் தொடங்க வேண்டும் என்று கேட்கிறோம். அவர்கள் சிலவற்றுக்கு லைசென்ஸ் கொடுக்கிறார்கள் அல்லது அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் நாம் கேட்கும் அளவுக்கு கிடைப்பதில்லை. கேட்பது எல்லாமே எல்லா மாநிலங்களுக்கும் கிடைத்துவிடுவதில்லை. நாம் கேட்கின்ற அளவும் இருக்கிறது; அவர்கள் கொடுக்கின்ற அளவும் இருக்கிறது. ஆனால் கேட்கின்ற அளவுக்குக் கிடைக்காத நிலை எல்லா மாநிலங்களுக்கும் இருக்கிறது. பல தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று எடுத்துச் சொல்கிறோம். அதற்கான காரண காரியத்தோடு எடுத்துச்சொல்கிறோம். இருந்தாலும் எல்லாவற்றுக்கும் அனுமதி வந்துவிடுவதில்லை. அதனால் இந்த மன்றத்திலே தொழில் வளர்ச்சி அறவே இல்லை என்று சொல்வதும் தவறு, மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதும் தவறு. ஒரு கருத்தைக் குறிப்பிடும்போது அதற்கான புள்ளி விவரங்கள் அடிப்படையிலே சொல்லலாம். நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசின் ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சென்ற தடவை நாம் சுட்டிக்காட்டினோம். அப்படிச் சொல்கிறபோது, பீகார் மாநிலம் இருக்கிறது; இராஜஸ்தான் மாநிலம் இருக்கிறது; உத்தரப்பிரதேசம் மாநிலம் இருக்கிறது; நான்காயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திற்கு ஆயிரத்துச் சில்லரை கோடிதான் தந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இப்படி இருக்கிற சூழ்நிலைகளை நாம் எடுத்துச் சொல்லுகிறோம். இன்னும் எலக்ட்ரானிக்ஸ் போன்ற அறிவியல் திறனைக் கொண்ட, தொழில் நுட்ப திறனைக் கொண்ட, தொழில் நுட்ப வல்லுனர்கள் நமது மாநிலத்தில் அதிகம் இருப்பதன் காரணமாக அந்த தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் அதிகம் துவக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று கேட்டுக்கொள்வதற்கும் நமக்கு உரிமை இருக்கிறது; அதற்கு ஊக்கம் தருகிற தன்மையும் இருக்கிறது. அந்த வகையில் மத்திய ஆளும் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து இந்த மாநிலத்திற்காகக் கேட்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். என்வே இதிலே பிரச்சினை



1986 மார்ச் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒன்றும் இல்லை. இரண்டுபேரும் விரும்புவது இந்தத் தமிழகம் நன்றாக வரவேண்டும் என்பதுதான். மத்திய அரசின் உதவி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகக் கிடைக்கிறதோ, அப்படி அதிகம் கிடைப்பதற்கு நாம் எவ்வளவு முயற்சி செய்கிறோமோ, அதற்கு எல்லோரும் ஒருமித்து எவ்வளவு குரல் எழுப்புகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. எனவே வீண் விவகாரம் இதில் தேவையில்லை.

இருக்கிற நிலைமைகளைப் பற்றி கூடுமான வரையில் நிதி நிலை அறிக்கையின் இறுதி உரையில் கூற முடியுமேயானால் நான் கூறுவேன். அதற்குப் பிறகும் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டால் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது மாதிரி தொழில் துறையினுடைய மானியக் கோரிக்கை வருகிறபோது அதற்கான முழு விளக்கத்தையும் தருவார்கள். எனவே இந்த இரண்டு பிரச்சினைகளையும் எங்களிடத்தில் விட்டு விட்டு இருக்கிற நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வது மிக மிக நல்லது. அப்படி எடுத்துச் சொல்கிறபோது அரசாங்கத்திற்கு பயன்படுகிற அளவுக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உதவி செய்கிற வகையில் இருந்தால் மிக, மிக நல்லது. குற்றம் சாட்டுகிற நோக்கத்தின் அடிப்படையிலும், வேறு பல வகைகளிலும் வருகிறபோது தான் பிரச்சினை திசை மாறிப் போய்விடுகிறது. அதற்கு இடம் கொடுக்காத அளவுக்கு வாதத்தைத் தொடங்கலாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஐயப்பாட்டை நிவர்த்தி செய்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில் கேட்காமலே கொடுக்கப்பட வேண்டும் என்றும், தட்டாமலேயே திறக்கப்பட வேண்டும் என்றும் நிலைமை இருப்பதை நான் உணர்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது இங்கே மத்திய அரசு தொழில்களைத் தொடங்கவில்லை என்று கூறினார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால் தமிழ கத்தில் தொழில்களைத் தொடங்குவதற்கு இங்கேயிருந்து பரிந்துரைகளை அனுப்புவதில்லை; சரியான முறையில் அணுகுவ தில்லை என்ற அந்த உண்மையை ஒத்துக்கொண்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மீண்டும் அதையே பேசுகிறீர்கள். அவ்வாறு பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு வேண்டாம் என்று தான் நான் சொல்கிறேன். அப்படி குற்றச்சாட்டு கூறினால் பிறகு அதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் வந்துவிடும். எனவே பரிந்துரை எதையும் அனுப்பவில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள் சொல்கிறீர்கள் அனுப்பவில்லை என்று. ஆனால் அனுப்பப்பட்டவை பல. மாநில அரசு 300 லைசன்ஸ் கேட்கிறது என்றால் அவர்கள் அவ்வளவையும் கொடுத்துவிடுவதில்லை. குஜராத் மாநிலம் 400 லைசன்ஸ் கேட்கிறது என்றால் அவ்வளவையும் கொடுத்து விடுவது இல்லை. 400 கேட்டாலும் 150 அல்லது 160 தான் வருகிறது. அவ்வாறு கொடுப்பதற்கும் காரணம் சொல்கிறார்கள். கொடுக்காததற்கும் காரணம் சொல்கிறார்கள். வாதாட நமக்கு உரிமை இருக்கிறது. அதிகம் கேட்க உரிமை இருக்கிறது. எனவே அந்த அடிப்படையில் நாம் பேசுவது நல்லது.

**டாக்டர் க. நல்லமுத்து** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நாம் தொழில் வளர்ச்சி பெற வேண்டும் என்பது பற்றிப் பேசுவது எல்லாம் தமிழகம் தொழில் வளர்ச்சியில் தலைசிறந்து விளங்கி பொருளாதார வசதியைப் பெற்று அதன்மூலம் மக்களின் வாழ்வு நலம் பெறவேண்டும் என்ற நல்ல கருத்தில்தான் சொல்கிறோம்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் 30 சர்க்கரை ஆலைகளுக்குப் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டு இருப்பதாக தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறி



இருக்கிறார்கள். அந்த 30 சர்க்கரை ஆலைகளும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளா அல்லது தனியாருடைய சர்க்கரை ஆலை களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இங்கே சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக என்னுடைய பெரம்ப லூர் தொகுதியில் பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை என்று ஒன்று இருக்கிறது. அந்த சர்க்கரை ஆலை இந்தியாவிலேயே தலை சிறந்த சர்க்கரை ஆலையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் இலாபம் ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது அது. அதற்கு இணை ஆலையாக ஒரு எரி சாராய ஆலையினைத் தொடங்க வேண்டும் என்று நமது அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு அது இடையிலே நிறுத்தப் பட்டிருக்கின்ற காரணத்தை நான் அறிய விரும்புகிறேன். எனவே தொழில் வளர்ச்சி குன்றிக் கொண்டிருக்கிறதோ என்ற ஒரு ஐயப்பாட்டை இது ஏற்படுத்துகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

பெரம்பலூர் தொகுதியினைப் பொறுத்தவரையில் நான்கு சர்க்கரை ஆலைகளுக்குரிய அளவுக்கு கரும்பு உற்பத்தி செய்யப் படுகிறது. பெரம்பலுரைச் சுற்றி இருக்கின்ற சுமார் 10,000 ஏக்கர் நிலங்களில் 4 சர்க்கரை ஆலைக்குரிய கரும்பு உற்பத்தி செய்யப் படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அங்கே அதிக அளவில் கரும்பு உற்பத்தி செய்யப்படுவதன் காரணத்தால், இறையூர் சர்க்கரை ஆலையின் அறவை சக்தி 2 இலட்சம் டன் என்ற அளவுக்கு இருப்பதன் காரணத்தால் மீதியுள்ள கரும்பை எல்லாம் அங்கேயிருந்து மதுரைக்கும், சேலத்திற்கும், தஞ்சைக்கும் எடுத்துச் சென்று அரைக்க வேண்டிய நிலைமை இருப்பதன் காரணத்தால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை அடைந்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருப்பதை நாம் எல்லாம் அறிகிறோம். ஆகவே இங்கே இருக்கிற சர்க்கரை ஆலை நிபுணர்கள் எல்லாம், அங்கே ஒரு பி-யூனிட் ஆரம்பித்தால் உற்பத்தியாகிற கரும்பையெல்லாம் அந்த பி-யூனிட்டிலேயே அரைக்க உபயோகப்படுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கும், விவசாயிகள் அதிகமாக லாபம் ஈட்டவும் வாய்ப் பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். அதை அரசு ஆராய

வேண்டும். அதில் பொருளாதார வளத்தைப் பெருக்கவும், விவசாயிகள் நல்ல லாபம் ஈட்டவும் சாத்தியக் கூறு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நமது தொழில் வளர்ச்சியைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. ஆனால் என்னுடைய தொகுதியான பெரம்பலூரிலே குடிதண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்ற சட்டசபை தொடரிலே கூட, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, பெரம்பலூரர் நகரத்திற்கு இருக்கும் நிரந்தரமான குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறேன். இங்கே சட்டமன்றத்தில் வைக்கப்படும் கோரிக்கைகளும், குறைபாடுகளும் அவைகள் முறையாக நிவர்த்தி செய்யப்படும், நீக்கப்படும் என்ற நம்பிக்கையினால் தான் வைக்கிறோம். ஆனால் ஓராண்டுக் காலமாகக் கேட்டும். இரண்டாம் ஆண்டு இங்கே வந்து நின்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இன்னும் அங்கே அந்தக் குடிதண்ணீர் பிரச்னை தீர்ந்தபாடில்லை, தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு இருக்கிறது. அதனுடைய அமைப்புக் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே எதுவும் காணப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

. அடுத்து இங்கே ஆதி திராவிட நலத் துறையைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஆதி திராவிடர் நலன்கள் குறித்து ஆய்வு செய்து பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருந்தாலும், அதிலுள்ள சில குறைபாடுகளை வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஆதி திராவிடர் நலப் பள்ளியோடு இணைந்த விடுதிகளிலே உள்ள மாணவர்களுக்கு, மூன்று வேளை உணவிற்கு 2 ரூபாய் அளிக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுக் காலமாக அந்த 2 ரூபாய் தான் அளிக்கிறார்கள். இந்த 2 ரூபாயை வைத்துக் கொண்டு எப்படி அவர்களுக்கு 3 வேளையும் சத்துணவு அளிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் உள்ள பள்ளிகளும் சரி, ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளானாலும் சரி, மிகவும் தாம் தாழ்ந்து எந்தவித ஆதார வசதியும் இல்லாத அளவுக்கு இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். எனது தொகுதியில் ஆலம்பாடி என்ற கிராமத்தில் ஒரு ஆதி திராவிடர் நலப் பள்ளி ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. அந்தக் கட்டிடச் சொந்தக்காரருக்கு அந்தக் கட்டிடத்திற்கான வாடகையை கொடுக்காததால், அந்தப் பள்ளிக்கூடத்தை அந்தக் கட்டிடத்திலேயிருந்து வெளியேற்றி விட்டார்கள். இப்போது அந்தப் பள்ளி மரத்தடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இங்கே தெரிவித்ததை எல்லாம் குற்றச்சாட்டாக மட்டுமல்லாமல் இந்தக் குறைகள் எல்லாம் போக்கப்படும் என்ற நல்ல எண்ணத்தில்தான் கூறுகிறேன் என்று எடுத்துக் கொள்ளலாமே தவிர. . . . (மணியடிக்கப் பெற்றது)

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வெகு நேரமாக பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ** *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் தகவலைச் சொல்லுகிறீர்கள். தகவல் கூறுவது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இதை நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அளித்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்த இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதலிலே நன்றிக் கூறிக் கொண்டு, நாவலர் என்றாலே நல்ல தமிழ் காவலர் என்று பொருள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நல்ல தமிழ் காவலர், நடமாடும் பல்கலைக் கழகம், டாக்டர் நாவலர் அவர்கள் எல்லா ஏழை எளிய மக்களும் நல்ல பலன் பெற வேண்டும் என்ற நல்ல நோக்கோடு, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் புகழோடு புகழ் சேர்க்க வேண்டும் என்ற நல்ல கருத்தின் அடிப்படையில்

** மாண்புமிகு துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இந்த நிதிநிலை அறிக்கையை தந்துள்ளார்கள், என்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, அதேபோல ஒரு குழந்தை பிறந்து அது வளரும் வரையில் அதற்கு என்னென்ன தேவைகள் வேண்டுமோ அந்தத் தேவைகளையெல்லாம் நிறைவு செய்வதற்கு, சலுகைகள் தரக்கூடிய அளவிலே ஒரு சிஸ்டமாடிக் பட்ஜெட்டாகத் தான் இந்த பட்ஜெட் உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். ஒரு குழந்தை பிறந்த உடனேயே அதற்குத் தேவைப்படுவது பால். அந்தப் பால் உணவுக்கு வரியை 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தை வளர்ந்தவுடனே அதற்கு தேவைப்படுவது உணவு. அந்த உணவிற்கு என்று சத்துணவிற்கு அதிக நிதியை தந்திருக்கிறார்கள். அடுத்தபடியாக குழந்தைகளுக்கு இலவச சீருடை, நூல் என்று அதற்காக 27 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். குழந்தைகள் என்று சொன்னாலே நோய் நொடிகள் வரும். ஆகவே 41 அத்யாவசியமான மருந்து வகைகளுக்கு வரிச் சலுகை தந்து, 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைத்திருக்கிறார்கள்.

அடுத்து குழந்தைகளுக்கு வேண்டிய கல்விக்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நாவலர் அவர்கள் பாணியிலே சொல்வது என்றால் தாராளமாக, மிகத் தாராளமாகவே அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். படித்து வளர்ந்தால் மட்டும் போதாது, விளையாடவும் வேண்டும் என்பதற்காக விளையாட்டுப் பொருள்களுக்கு வரிச் சலுகை தந்திருக்கிறார்கள். அதேபோல அவர்கள் **விளையாடினால் மட்டும்** போதாது, அவர்கள் செவிக்கு உணவு வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இசைக் கருவிகளுக்கு வரிச் சலுகைகளை தந்திருக்கிறார்கள்.

அதற்கு பிறகு தொழிலிலே ஈடுபட வேண்டுமென்ற எண்ணத்திலே தொழிலிலே ஈடுபடுபவர்களுக்கு 2 லட்சம் டர்ன் ஓவர் உள்ளவர்களுக்கு வரிச் சலுகை தந்திருக்கிறார்கள். அது ஒரு நல்ல ஏற்பாடு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அந்தக் குழந்தை வளர்ந்து திருமணமென்று வந்தால் திருமணத்திற்கு தேவையான மெட்டி முதல், மெத்தை, தலையணை வரையில் அதற்கெல்லாம் வரிச் சலுகை





கொடுத்திருக்கிறார்கள். பிறகு குடும்பத்திற்கு அத்தியாவசிய தேவையான கடுகு முதல் வெல்லம் வரையில், சீரகம் முதல் சீயக்காய் வரையில் அனைத்திற்கும் வரிச் சலுகை தந்திருக்கிறார்கள்.

இது ஒரு நவீன யுகம். இந்த யுகத்தில் தொழில் துவங்க வேண்டுமானால் எலக்ட்ரானிக்ஸ் தொழிலை துவங்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுகிற வகையில் அந்தத் தொழிலுக்கு 10 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக வரியைக் குறைத்திருக்கிறார்கள். அடுத்து மின்சாரமானது அது தேவையென்று உணர்ந்து அதன் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குரிய செய்தியை இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஆகவே தான் இதனை ஒரு சிஸ்டமாடிக் பட்ஜெட் என்று சொன்னேன்.

ஒரு குடும்பம் வளர்ந்தால் நாடு வளர்ந்து விடுமென்று நாவலர் அவர்கள் இந்த அறிக்கையை அந்த வகையில் தந்திருக்கிறார்கள். இது பாலைவனத்தில் நடமாடுகிற கிழட்டு ஒட்டகம் என்று சொன்னவர்களுக்கு சொல்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை இருண்ட வீட்டில் ஒளியேற்றும் தீபம் என்று சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏழைகளின் அரசு என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் அரிசி விநியோகிப்பதில் 100 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டாலும் அதை நாங்கள் தாங்கிக் கொள்கிறோம் என்று சொல்லி 100 கோடி ரூபாய் இழப்பை ஏற்று அரிசி விநியோகிப்பதை இந்த அறிக்கையில் கூறியிருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல பண்பைக் காட்டுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல இது செயல்படாத அரசு என்று சொல்லியவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இது செயல்படும் அரசு மட்டுமல்ல இது ஒரு சிறப்பான அரசு என்பதை தெரிவிக்கும் வகையில் 20 அம்சத் திட்டத்தில் தமிழகமானது இந்தியாவிலேயே முதன்மையானதாக ஓராண்டல்ல, இரண்டாண்டல்ல 1983, 1984 மற்றும் 1985 என்று எல்லா ஆண்டுகளிலும் சிறப்பான முறையில் செயல்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டாகத்தான் வேண்டும்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1986 மார்ச் 26

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 116.28 விழுக்காடாக கூடியிருப்பது மகிழ்ச்சித் தரக் கூடிய ஒரு செய்தி தான். அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் சர்ச்சை எழுப்பக் கூடிய அளவிற்கு கிருஷ்ணா நதித் திட்டத்திற்கு மத்திய அரசு இசைவு தராமல் இருப்பதும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மூலமாக மின்சக்தி பெறுவதற்கு இந்திய அரசின் ஒப்புதல் கிடைக்காமல் இருப்பதும், தஞ்சைப் பகுதியில் இருக்கக்கூடிய எண்ணெய் வளத்தை வைத்து மத்திய அரசு அந்தப் பகுதியில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்புதல் தராமல் இருப்பதும், சேலம் இரும்பாலைத் திட்டம் இன்னும் முற்றுப் பெறாமல் இருப்பதும், கரூர்—திண்டுக்கல்—தூத்துக்குடி அகல ரெயில் பாதைத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்படாமல் இருப்பதும் உள்ளபடியே மத்திய அரசு தன்னுடைய கவனத்தை அவற்றில் காட்டவில்லை என்று தான் தெரிகிறது. இந்த நிலையில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் இங்கே எங்களை குறை கூறுவதிலேயே இருக்கிறார்களே தவிர வேறல்ல. பல்லக்கை நீங்களும் நாங்களும் சேர்த்து தான் தூக்க வேண்டும். நீங்கள் பல்லக்கில் ஏறிக் கொண்டு எங்களைக் குறை சொல்வதாக இருப்பது என்பதை மறந்துவிட்டு எங்களோடு தோள் கொடுத்து அந்த அத்தியாவசியமான திட்டங்கள் தமிழகத்திற்கு நல்ல முறையில் பயன்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

*            *

*            *

(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தப் பகுதிகள் எல்லாம் நீக்கப்படுகின்றன.

**திரு. ஆ. பிரேம்குமார் :**            *            *

*            *

(குறுக்கீடு).

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மார்ச் 26]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதைப் பற்றி எல்லாம் வெளியே பேச வேண்டும். இங்கே பேசினால் எப்படி? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**    *    * பற்றியும் பேசப்பட்டது நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு). நீக்கியாகிவிட்டதாலே நீங்கள் மறுத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஆ. பிரேம்குமார் :** துணைத் தலைவர் அவர்களே, அடுத்து உள்ளாட்சித் தேர்தல்களிலே இருந்த வாக்காளர் பட்டியல்களைப் பற்றிப் பேசும்போது, சற்று வருத்தமாகத் தான் இருக்கிறது. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் கடந்த பொதுத் தேர்தலிலே வாக்களித்தவர்கள் எல்லாம், நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலே வாக்களித்திருக்கிறார்களா, என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு அவர்களுடைய பெயர்கள் எல்லாம் அடிக்கப்பட்டு இருக்கின்றன. அவர்கள் எல்லாம் வாக்களிக்க முடியாத அளவிற்கு அவைகள் திருத்தப்பட்டு இருக்கின்றன. இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதை நேரடியாக அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1984 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின்போது இருந்த வாக்காளர்கள், 3 கோடியே 9 லட்சம் பேர்கள். ஆனால் 1986-ல் உள்ளாட்சித் தேர்தல் நடந்தபோது இருந்த வாக்காளர்கள் 2 கோடியே 13 லட்சம் பேர்கள், ஆக ஆகியிருக்கிறது. ஏறக்குறைய 1 கோடி வாக்காளர்களுக்கு மேல் அந்தத் தகுதியை இன்றைக்கு இழந்திருக்கிறார்கள். இந்தக் குற்றத்திற்கும், குறைகளுக்கும் யார் காரணம் என்பதை கண்டுபிடிப்பதற்காக அரசு ஒரு விசாரணைக் கமிஷனை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த விசாரணைக் குழுவின் மூலமாக நாம் தகுந்த காரணத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

அதேபோல் நடந்து முடிந்த பட்டதாரி தேர்தலிலே கூட ஆயிரக்கணக்கான வாக்காளர்கள், பட்டதாரிகளாக இல்லாதவர்கள் எல்லாம் வாக்களித்ததாக எங்களுக்கு செய்திகள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு ஆ. பிரேம்குமார்] [1986 மார்ச் 26

சொல்லப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த வாக்காளர்களாக சேர்க்கக் கூடிய தகுதியானது இங்கேயிருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுடைய, அங்கேயிருக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே இதற்கும் ஒரு விசாரணைக் குழுவை வைத்து, தப்பு செய்தவர்கள் யார், தவறு செய்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் விபத்துக்களின் காரணமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சில இடங்களை நகராட்சிகளிலே பிடித்து இருக்கிறது. ஆனால் அவர்கள் ஏதோ கோட்டையைப் பிடித்து விட்டது போன்ற நிலையில் இருந்து கொண்டு, இன்று எந்தந்த ஆணவத்தில் இருக்க முடியுமோ, அந்த அளவிற்கு அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், திண்டுக்கல் நகரத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்த போது, அவர்களுக்கு தங்கும் விடுதியிலே இடம் ஒதுக்கிடு தர முடியாத அளவிற்கு மறுக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் என் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் திண்டுக்கல்லுக்கு வந்த சமயத்திலே இட வசதி தராமல் போனதால், அவர்கள் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தொகுதியாகிய வேடசந்தூர் சென்று அங்குள்ள டி. பி. யிலே தங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஒரு ஆணவமான சர்வாதிகாரமான நிலைமையில் இருந்து கொண்டு, நம்மைப் பார்த்துச் சொல்கிற அவர்கள், இந்த செய்கைக்கு அவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட செய்திகள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காத வண்ணம் இந்த அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று சொன்னால், திண்டுக்கல்லிலே பேரணை திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. அதை எவ்வளவு விரைவிலே முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவிலே முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு ஆ. பிரேம்குமார்]

அடுத்து, நான் இந்த சட்டமன்றத்திலே ஏற்கனவே எடுத்து வைத்திருக்கிற பிரச்சனையானது, திண்டுக்கல் பகுதியிலே பாதாள சாக்கடை திட்டத்தை அமைத்துத் தரவேண்டும் என்பது. இதை அரசானது அவசியமாக செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திண்டுக்கல் பகுதியிலே இருக்கக்கூடிய சிறுமலை பகுதியிலே உள்ள விவசாயப் பொருட்கள் எல்லாம் அழிந்து படக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே சிறுமலைப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு வரிச் சலுகைகளும் மற்ற சலுகைகளும் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறுமலைப் பகுதியிலே உள்ளவர்கள் நோய்வாய்ப் பட்டார்கள் என்று சொன்னால், அவர்கள் எல்லாம் திண்டுக்கல்லுக்குத் தான் வரவேண்டிய நிலைமையிருக்கிறது. ஆகவே சிறுமலைப் பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தோல் கழிவு நீரால் மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்ட இடங்களில் முக்கியமான பகுதியானது திண்டுக்கல் நகரம் ஆகும். திண்டுக்கல்லின் நாலாபுறங்களிலும், அதன் சுற்றுப் புறங்கள் முழுவதும் இந்த கழிவு நீரால் கடுமையான முறையில் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக, கொடுத்தம்பட்டி, நத்தவனம்பட்டி, கொட்டாம்பட்டி, அய்யம்பாளையம் மற்றும் பாளைப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டு, அங்கே உள்ள தண்ணீர் உவர் நீராக மாறியிருக்கிறது. ஆகவே அரசானது இவற்றுக்கெல்லாம் நல்ல திட்டம் ஒன்றை அமைத்து, இவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல் பகுதியிலே நல்ல நாய்க்கன் பட்டியிலே அரசு அறிஞர் அண்ணா உயர்நிலைப்பள்ளி கட்டிடம் ஒன்று கட்டப்படாமல் உள்ளது அதையும் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா மாவட்டமானது வளர்ந்திருக்கிறது. அதனால் அங்கிருக்கின்ற டவுன் பஸ்களையெல்லாம் இங்கே அமைத்துத் தரமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே அங்கே அதிகமான

பேருந்து வசதிகளை, அமைத்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல் பகுதியிலே நாடிக்கொம்புக் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலானது மிக அற்புதமான சிற்பங்கள் எல்லாம் இருக்கக் கூடிய மிகமிக அருமையான கோவில். அந்தக் கோயிலானது இப்போது பழுதுபட்டு இருக்கக்கூடிய நிலையிலே அதனுடைய பின் சுவர்களானது முழுவதும் கீழே விழுந்துவிடக்கூடிய நிலையிலே இருக்கின்றது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அடுத்து சொல்கின்றபோது, நாவலர் அவர்கள் அருமையான நிதி நிலை அறிக்கையை தந்து இருக்கிறார்கள். ஆனால் கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டில் கைத்தறிக்கு பயன்படக் கூடிய நூலுக்கு 2 பர்சென்ட் என்றும், பருத்தி நூலுக்கு 3 பர்சென்ட் என்றும் மற்ற நூல்களுக்கு 4 பர்சென்ட் என்றும் இருந்ததை சீர்படுத்தி முழுவதற்குமாக 3 பர்சென்ட் என்று மாற்றி வரி விதிப்பு செய்திருக்கிறார்கள். ஆந்திராவிலே கைத்தறித் துணி தயாரிப்பதற்கு, அந்த நூலுக்கு விற்பனை வரி கிடையாது. இங்கே இருக்கக் கூடியவர்களும், மற்ற மாநிலங்களிலே இருக்கக்கூடியவர்களும் ஆந்திராவிற்குச் சென்று நூலை வாங்கி அதை மற்ற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் பெறக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆனால் கைத்தறி நெசவாளர்கள் இன்றும் தமிழகத்திலே அல்லல் படக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டு அந்த 3 பர்சென்ட் என்கிற விற்பனை வரியை அறவே நீக்கிவிட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் மற்ற நூல்களுக்கு 4 பர்சென்ட் என்று இருப்பதால் இங்கே இருக்கக்கூடிய விசைத் தறி மூலமாக கொடுக்க கூடிய அந்த 4 பர்சென்ட் என்பது மாறி இன்று விசை தறிகளுக்கு கூட 3 பர்சென்ட் விற்பனை வரியானது விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த 4 பர்சென்ட் என்பதை 3 பர்சென்ட் ஆக விசைத்தறி மூலமாக கிடைக்கக்கூடியதற்குக் கிடைக்கிறது. விசைத்தறியை அங்கே அவர்கள் ஆதரிக்கின்றதைப்போன்ற ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவேதான், நான் இந்த



நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் தமிழக நெசவாளர்களுக்கு, அவர்களுக்கு, நூலுக்குக் கிடைக்கக்கூடிய வண்ணம் அந்த 3 பர்சென்ட் என்பதை அறவே நீக்கி அவர்களுக்கு சலுகை செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல மற்றொரு கருத்தையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய சிலருக்கு, தமிழகத்திலே இருக்கக்கூடிய சிலருக்கு, அதாவது லீஸ்கள் என்கிற, லாங் டெர்ம் என்று சொல்லக்கூடிய 99 வருடங்களுக்கு 100 ஏக்கர் நிலங்கள் அங்கிருக்கக்கூடிய ஒரு அதிக வரம்புள்ள அதிக நிலங்களானது லீஸாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே அரசுக்கு வரக்கூடிய அந்த வருமானமானது குறைக் கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட இந்த லீஸ்களை குறைத்து அதை அறவே அழித்து, எந்த அளவிலே செயல் படுத்த முடியுமோ அந்த அளவிலே நல்ல பலதிட்டங்களை செய்து வருமானத்தை பெருக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தமட்டிலே இங்கு மதுவிலக்கு அமல் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பாராட்டக்கூடிய திட்டம்தான். ஆனால் அதே நேரத்திலே இங்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே வழங்கப்பட் டிருக்கின்ற அந்த சாராயக் கடைகளுக்கு எல்லாம் ஒரு கோட்டா வைத்திருக்கிறார்கள். அந்த கோட்டாவானது எந்த முறையிலே நிறைவேற்றப்படுகிறது என்று தெரியவில்லை. அந்த சூழ்நிலை யிலே அவர்கள் எல்லாம் 3 ஆயிரம் லிட்டர் எடுக்க வேண்டும், 5 ஆயிரம் லிட்டர் எடுக்க வேண்டும் என்று சொன்னால் அந்தக் கடையிலே அந்த அளவுக்கு விற்பனை செய்யவில்லையென்றால், அதற்கென்று தொகை கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே லைசென்ஸ் எடுத்தவர்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய நிலையிலே, கஷ்டப்படக்கூடிய நிலையிலே தான் இன்றைய சூழ்நிலை இருக்கிறது. அவைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து மாவட்ட வாரியாக, தாலுக்கா வாரியாக அவற்றையெல்லாம் நல்லமுறையாக தெரிந்து அந்த அந்த கடைகளுக்கு எவ்வளவு தூரம் கோட்டாக்களை வினியோகிக்க முடியும் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

[திரு. ஆ. பிரேம்குமார்] [1986 மார்ச் 26

அதேபோல கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் இன்னும் பெருகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாண்புமிகு நாவலர் அவர்கள் காவலர்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்கு நல்லபல செய்தியைத் தந்திருக்கிறார்கள். இந்தக் காவலர்கள் எல்லாம், உடனடியாக இந்த வசதியைப் பெற ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல விளையாட்டுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கக் கூடிய அளவிலே இந்த நேரத்திலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கோவைக்குக்கூட சென்று பெண்கள் விளையாட்டுக்களையெல்லாம் அங்கே ஆரம்பித்து வைத்து தமிழகத்திலே ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே தமிழக அளவிலே புரட்சி தலைவருடைய அரசாங்கம் ஒரு தலைவரையும், உறுப்பினர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை ஒரு தனி வாரியமாக்கி விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எங்கள் கட்சித் தலைவருக்கு நன்றியைச் சொல்லி என்னுடைய உரையை துவக்குகிறேன்.

1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பது ஒரு மூடமான அறிக்கை என்று தெரிவித்துக்கொள்கிறேன். புதுவரி இல்லை என்பது பாராட்ட வேண்டிய ஒன்றுதான். ஆனால் மக்கள் நல திட்டங்களோ, நலவாழ்வுத் திட்டங்களோ இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மளிகைக் கடை முதலாளி எப்படி சட்டையைப் போடுவாரோ அதுபோல துத்தநாகம் பூசிய இரும்பு லாரிகளுக்கும், வெள்ளி மெட்டி போன்ற பொருட்களுக்கும் வரி விலக்கு தந்து இருக்கிறார்கள்.



1986 மார்ச் 26] [திரு. ஜே. முகம்மது கனி]

சத்துணவைத் தந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஏழை எளிய மக்களுக்கும் வெள்ளி மெட்டியை தரவேண்டும் என்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் வருகின்ற ஆண்டு 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மூடுவதாக சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆதி திராவிட மக்களுக்கு 30 லட்சம் வீடுகள் கட்டித் தரப்போவதாக இந்த அரசு சொல்லியிருக்கிறது. அதை பாராட்டுகிறேன். அதை 50 லட்சம் வீடுகளாக கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சினிமா டிக்கட் மீதான வரியை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்கு ஒதுக்கீடுத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும் உதாரணமாக அங்கு இருக்கக்கூடிய பள்ளிகளில் மாணவ மாணவியர்கள் தரையில் உட்கார்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதேபோல் மின்சாரத்திற்கு ஒதுக்கியத் தொகை போதாது. அனல் மின்சாரத் திட்டங்களைத் துவங்க வாய்ப்புகளை நம்முடைய தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுப் பொருட்களுக்கு உள்ள வரியை இங்கே ரத்து செய்து இருக்கிறார்கள். அதற்காக பாராட்டுகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விளையாட்டு அரங்கத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னால் நிதி ஒதுக்கியும் இன்று வரை அது கட்டப்படவில்லை. அதை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நகராட்சியில் பணிபுரிகின்ற அலுவலர்களில் பலரை இன்னும் அரசு ஊழியர்களாக மாற்றவில்லை. அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக புதுக்கோட்டை நகராட்சியில் பணிபுரிகின்ற அலுவலர்களில் புதுக்கோட்டை ஒன்றியத்தில் பணிபுரிகின்ற அலுவலர்களில் சிலர் அரசு ஊழியர்களாகவும் சிலர் அரசு ஊழியர்கள் அல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

[திரு. ஜே. முகம்மது கனி] [1986 மார்ச் 26

அவர்களை ஒட்டுமொத்தமாக அரசு ஊழியர்களாக ஆக்கி அவர்கள் எல்லோருக்கும் அரசு அறிவிக்கின்ற சலுகைகளை எல்லாம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காவேரி நூற்பாலையை நம்முடைய தமிழக அரசு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு அதை நம்முடைய தமிழக அரசு ஏற்று நடத்தும் என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரை அந்தத் திட்டத்தை நம்முடைய அரசு செயல் அளவில் கொண்டுவரவில்லை. நம்முடைய மத்திய அரசினுடைய தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் 18—3—1986 அன்று ஒரு கடிதத்தை நம்முடைய கைத்தறித் துறை அமைச்சருக்கு அனுப்பியிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அந்த ஐ.டி.ஆர். ஆக்ட்-ல் உள்ள காவேரி மில்லை உடனடியாக தமிழ்நாடு அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணி புரிகின்ற கிட்டத்தட்ட 1,000 தொழிலாளர்கள் அதைச் சேர்ந்த குடும்பங்களும் இந்த நூற்பாலையை மூடுகின்ற சூழ்நிலையின் காரணமாக அவர்கள் வேலையில்லாமல் தடுமாறுகின்ற காட்சியை பார்க்கிறோம். அதை உடனடியாக தமிழக டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அந்த பின்தங்கிய மாவட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. எங்களுக்கு அங்கே மழை பொழிந்தால் தான் குடிக்க நீர் கிட்டும் சூழ்நிலை இருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திற்கு உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவேரி நதியின் உபரி நீரை குடிப்பதற்கு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக கோப்புகள் இன்று நம்முடைய டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அவருடைய கிடப்பில் 6 ஆண்டு காலமாக பெண்டிங்கில் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புதுக்கோட்டை நகரத்தில் உள்ள ராஜகோபால புரத்தில் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடம் இன்றும் நகராட்சியிடம் ஒப்படைக்கப்படவில்லை. அதன் காரணமாக



1986 மார்ச் 26] [திரு. ஜே. முகம்மது கனி]

அங்கே இருக்கின்ற ரோடுகள் சரியில்லை, விளக்குகளும் எரியவில்லை, தண்ணீர் வசதியும் கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது சம்பந்தப்பட்ட ஒரு கோப்பு ஏற்கனவே நம்முடைய வீட்டு வசதி வாரியத்தினுடைய சேர்மேனிடம் கேட்டுக்கொண்டு அந்த ஆணையைக் கொண்டு போய் புதுக்கோட்டை நகராட்சியில் கொடுத்தும் இன்று வரைக்கும் அந்த புதுக்கோட்டை வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான அந்த இடம் இன்னும் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் உள்ள மாமன்னர் கல்லூரியில் எம். ஏ. பொருளாதார வகுப்பையும், அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் எம்.எஸ்.சி. விலங்கியல் பட்டப் படிப்பையும் வருகின்ற ஆண்டு முதல் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கல்விக்கு ஒதுக்கியிருக்கிற தொகை மிகவும் போதாத காரணத்தால், பின்தங்கி இருக்கிற எங்கள் மாவட்டம் இன்னும் முன்னேற வேண்டுமானால் பல பள்ளிகளுக்கும், பல கல்லூரிகளுக்கும் பல கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று ஹெல்மெட் அனுமதிபற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வேணுகோபால் போன்றவர்கள், ஸ்கூட்டரிலோ அல்லது மோட்டார் சைக்கிளிலோ வரக்கூடிய நிலைமைகள் ஏற்படுகிற காரணத்தால் சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பகுதிகளுக்கு மட்டும் ஹெல்மெட் அணிவதிலிருந்து—ஏழை எளிய மக்கள் உதாரணமாக புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிராமத்திலிருந்து வருகின்ற, இரண்டு சக்கர சைக்கிளில் வருகின்றவர்கள், ஹெல்மெட் அணிந்து வருகின்ற காரணத்தினால், பக்கத்தில் வருகின்ற வண்டிகளின் சத்தத்தைக் கேட்க முடியாததினால், பல ஆக்சிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே தமிழக அரசு உடனடியாக அதைப் போல் கிராமங்களிலும், நகரங்களிலும் ஹெல்மெட் அணிகின்ற திட்டத்தை கைவிட்டு, அதற்குப் பதிலாக ஹெல்மெட் அணிய வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. முகம்மது கனி] [1986 மார்ச் 26

இன்று இந்தியனை ஆட்டிப் படைக்கின்ற ஷாபானு என்ற முஸ்லீம் பெண்ணுடைய வழக்கை பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக நான் தெரிவிக்க விரும்புவது, முஸ்லீம் தேவி உரையான குர்ரான் கருத்திற்குள், எந்த அரசியல் கட்சிகளும் அல்லது உயர் நீதி மன்றம் அல்லது உச்சநீதிமன்றம் இந்தப் பிரச்சினைக்குள் புகுவது நல்லதல்ல. எங்களுடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் அணுகுமுறையை சிறுபான்மை முஸ்லீம் மக்கள் வரவேற்கிறார்கள். அதே நேரத்தில் உச்சநீதிமன்றம் அறிவித்த தீர்ப்பை * கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டிலிருந்து ஹஜ் புனித பயணத்திற்குச் செல்கின்றவர்கள் பம்பாய் சென்று அங்கிருந்து மெக்கா செல்ல வேண்டியிருக்கிறது. ஹஜ்ஜிற்கு செல்ல வேண்டியவர்களை வழியனுப்பியும், திருப்பி அழைத்து வருவதும் போன்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் ஒவ்வொருவரும். . . .

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை மாண்புமிகு உறுப்பினர் இங்கிருந்து * யில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * என்ற வார்த்தையை நீக்குகிறேன்.

திரு. ஜே. முகம்மது கனி: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலிருந்து ஹஜ்ஜிற்குச் செல்கிற நம்முடைய தமிழக முஸ்லீம் மக்கள் இங்கிருந்து பம்பாய் சென்று, அங்கிருந்து செல்லக் கூடிய நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக ஒருவர் செல்ல, அல்லது திரும்பி வருகிற நிலைமையில், கிட்டத்தட்ட 5, 6 பேர்கள் பம்பாய்க்குச் சென்று அங்கிருந்து அவர்களை அழைத்து வருகின்ற காட்சியினைக் காண்கிறோம். இந்த நிலைமையில் வருகின்ற ஆண்டிலிருந்து

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மார்ச் 26] [திரு. ஜே. முகம்மது கனி]

இம்மாதிரி இங்கிருந்து, தமிழ்நாட்டிலிருந்து மெக்காவிற்குச் செல்லக் கூடிய முஸ்லீம் பெருமக்களை நம் தமிழ் நாட்டிலிருந்து ஒரு விமானத்தின் மூலமாக அழைத்துச் செல்ல வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அமைச்சர் பெருமக்களையும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தாழ்மையோடு வேண்டுகிறேன். எந்த வீட்டில் திருமணம் நடந்தாலும், வரதட்சிணை வாங்காமல், நடக்கும் திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக வரதட்சிணை கொடுக்கின்ற, வாங்குகின்ற திருமணங்களுக்கு செல்வதில்லை என்ற ஒரு கொள்கையை கடைபிடித்தால் அது ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், புதுக் கோட்டை தஞ்சாவூர் சாலையை அகலப்படுத்தி, தார் போட வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அதிலே கிட்டதட்ட 8 கிலோ மீட்டர் தூரம் அகலப்படுத்தப்பட்டு, தார் போடப்பட்டிருக்கிறது அதற்கு நான் என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சாலையை புதுக்கோட்டை முதல் தஞ்சாவூர் வரை அகலப்படுத்தி, தார் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் நடுப்பட்டு, நாயக்கன்பட்டி வரை சாலையை அகலப்படுத்தி தார் போட வேண்டும்மென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

கந்தர்வகோட்டைப் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு மருத்துவமனையையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதுக்கோட்டையிலுள்ள மாவட்ட மருத்துவ மனைக்கு 100 பேர்கள் படுக்கக் கூடிய ஒரு அவசர கால சிகிச்சைப் பகுதி கட்ட வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் குண்ணாண்டார் கோயில் ஒன்றியத்தில் வைத்தூர், வைத்துக்கோயில், அண்டகுளம், தெம்மலையூர் போன்ற மிக பின்தங்கிய பகுதியிலும், ஆதன கோட்டை, கந்தர்வகோட்டை, வாப்பூர், சோத்துவாளை, வலம்பட்டி போன்ற பகுதியில் கரும்பு வளம் அதிகம் உள்ளதால் அங்கே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சிப்காட் காம்பளெக்சில் பல நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் இல்லாத காரணத்தினால் நடுத்தரத் தொழிற்சாலைகள் செயல்பட முடியவில்லை. உடனடியாக என்னுடைய மாவட்டத்தில் சிப்காட் காம்ப்ளக்சிற்கு மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலுள்ள காமராஜ் நகரிலுள்ளவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. ஆள் இன்னும் போடப் படவில்லை. ஆகையால் தேவையான ஆட்களைப் போட்டு, சர்வே செய்து பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

காமராஜர் புரம் பகுதி 20 ஆயிரம் பேர்கள் வசிக்கின்ற பகுதி. அந்தப் பகுதியானது இன்றுவரை நகராட்சியிடம் ஒப்படைக்கப் படவில்லை. அப்படி ஒப்படைக்கப்படாத் காரணத்தினால் அங்கே தண்ணீர் வசதி, ரோடு வசதி, விளக்கு வசதி செய்து தரப்படாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியை உடனடியாக நகராட்சியிடம் ஒப்படைத்து மக்களுக்கு அந்த வசதிகள் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அவர்களுக்கு உடனடியாக பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நிஜாம் காலனி, என்.ஜி.ஓ. காலனி ஆகிய பகுதிகளிலே தார்ச்சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகள் செய்கின்ற தவறுகளைக் கேட்பதற்கும் மக்களுடைய குறைகளைக் கேட்பதற்கும் எங்கள்





மவட்டத்திற்கு வரவேண்டும். 1982 ஆம் ஆண்டிற்குப் பின்னால் இன்றுவரை அவர் வரவில்லை. அவர்கள் வந்து மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன.

*திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டுக்குரிய தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கையை 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் அன்று தமிழகத்தின் நிதியமைச்சர் நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1986—87 இல் 60 கோடியும் 1987—88 இல் 250 கோடியும் அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் நல்ல நோக்கத்தோடு 1987 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் முதற்கொண்டு தமிழ்நாடு முழுவதும் மதுவிலக்குக் கொள்கையை அமல் நடத்தப்போகிறோம் என அறிவித்த தமிழக அரசையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மதுவிலக்குக் கொள்கையால் அரசுக்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட 1977—78 ஆம் ஆண்டிலே 50 விழுக்காடு மத்திய அரசு ஈடுசெய்யும் என்று அறிவிக்கப்பட்ட அத்திட்டத்தை 100 விழுக்காடாக ஈடுகட்டும் திட்டமாக மத்திய அரசு இப்போது அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையிலே துத்தநாகம் பூசிய இரும்பு வாளிக்கும் வீடுகளில் பயன்படுத்தும் நிலக்கரி, மரத்தூள், உமி போன்ற எரிபொருளுக்கும் நாட்டுச்சக்கரை மற்றும் கற்கண்டிற்கும் நுரை ரப்பரால் தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம்பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் போன்ற பொருட்களுக்கு அறவே வரி நீக்கப்பட்டிருப்பதாற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

மக்களின் உயிர்காக்கும் 41 வகையான மருந்துகள் மீதிருந்து வரும் 8 சதவிகித வரியை 4 சதவிகிதமாக குறைத்தும், குழந்தைகளுக்கு பயன்படும், குழந்தை உணவுகளுக்கும் வழங்கும் பால் உணவு பொருட்கள் உட்பட அனைத்து பால் உணவுப் பொருட்களின்மீதான வரியை 10 லிருந்து 4 சதவீதமாக குறைத்திருப்பதற்கும் அதேபோன்று வெல்லம், சீரகம் மற்றும் கடுக்காய், தாவர எண்ணெய் ஆகியவற்றிற்கு பலமுனைவரிகளை ஒருமுனை வரியாக மாற்றி இருப்பதற்காகவும் நான் அரசைப் பாராட்டுகிறேன். கால்நடைகளுக்கும விவசாயிகளுக்கும் பயன்படுகிற பின்னாக்குக்கும் பல முனைவரியிலிருந்து ஒரு முனைவரியாக விதிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தங்கள் மூலமாக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். விற்பனை வரி கட்டணத்திற்காக பதிவு செய்வதற்கான தொகையை 10 மடங்கு உயர்த்தியதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே தொடர்ந்து வெள்ளமும் வறட்சியும் ஏற்படுகிறது என்ற இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. வட மாவட்டங்களில் வெள்ளத்தாலும் தென் மாவட்டங்களிலே வறட்சியாலும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 66 கோடி ரூபாய் ஒதுக்கி நல்ல முறையிலே அந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தென் மாவட்டங்களிலே வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக முதுகளத்தூர், கமுதி தாலுகாக்களிலே கடுமையான வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாக தெரிய வருகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே அதுபற்றிக் குறிப்பிடவில்லை. நிதி ஒதுக்கீடு செய்வது பற்றியும் குறிப்பிடப்படவில்லை. எங்கள் பகுதிக்கு நிதி ஒதுக்கி அங்கே நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமாக அங்கேயுள்ள மக்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். அங்குள்ள மக்களுக்கு வரி வஜா அளிக்க வேண்டும். கூட்டுறவுக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும். 1986-87 ஆம் ஆண்டிற்காக 45 கோடி ரூபாய் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது, நான் அதற்காக இந்த அரசிற்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் கிராமப் பகுதிகளில் உள்ள





பழுதுபட்ட மேல்நிலைத் தொட்டிகளைப் பழுதுபார்க்க ஐந்து கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை போதுமானதாக இல்லை. காரணம், எனது தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியிலே 75 விழுக்காட்டுக்கு மேல் உள்ள மேல்நிலைத் தொட்டிகள் இயங்கவில்லை. அப்படியிருக்க, தமிழ் நாடு முழுவதும் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது போதுமானதாக இல்லாததால் கூடுதலான நிதி ஒதுக்கிடு செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தொடர்ந்து பல ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுர மாவட்டத்தில் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும் கடுமையாக உள்ளது. ஒரு குடம் தண்ணீருக்கு தாய்மார்கள் 2 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் சென்று தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும் அவல நிலை உள்ளது. அதிலும் குறிப்பாக, கமுதி, முதுகுளத்தூர் தாலுக்காவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் போதிய குடிதண்ணீர் கிடைக்கவில்லை. இந்தத் தாலுக்காக்களில் பெரும்பாலும் கிராமப் பகுதியாக இருப்பதாலும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்ற மக்கள் அடங்கிய பகுதியாக இருப்பதாலும் ஏழை எளிய கிராம மக்களின்பால் பாச உணர்வு கொண்டுள்ள தமிழக முதல்வர் அவர்கள் போர்க்கால நடவடிக்கை எடுத்து, எங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பிரச்சனையை நீக்கி குடிதண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

1982-83 ஆம் ஆண்டு முதல், முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் தற்சமயம் தேசியமுன்னுரிமைத் திட்டமாகவும், எல்லா மாநிலங்களும் பாராட்டக்கூடிய திட்டமாகவும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இருந்தாலும் அதில் ஒருசில முறைகேடுகள் உள்ளதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்திட்டத்தின்கீழ் பணிபுரியும் பாலசேவிகாக்களை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் பிடித்துவர வேண்டும் என்று அதிகாரிகள் ஆணையிடுவதாகவும், அவர்கள் அதிலேதான் கவனம் செலுத்துகிறார்கள் என்றும் தெரியவருகிறது. குடும்பக் கட்டுப் பாட்டிற்குச் செலவாகிறது என்று அங்கே பணிபுரிகிற பாலசேவிகாக்கள் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களை அதிக அளவில் விற்றுவிடுகிறார்கள் என்று தெரிய

[திரு. கே. முத்துவேல்] 1986 மார்ச் 26

வருகிறது. ஆகவே, சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு உணவு பாதி அளவுகூடக் கிடைப்பதில்லை. எனவே, ஒன்றிய அளவில் ஒரு குழு அமைத்து அவர்களைக் கண்காணிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தின்கீழ் வேலை செய்வோருக்குச் சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அரசு உயிர் நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இங்கே இருக்கிற பெரும்பாலான பள்ளிகளில் உள்ள கட்டிடங்கள் மிகவும் சேதம் அடைந்து இருப்பதாலும், போதிய இடவசதி இல்லாத காரணத்தாலும் மரத்தடியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே, பள்ளிக் கட்டிடங்களை மராமத்து செய்வதற்கும், புதிய கட்டிடம் கட்டுவதற்கும் இன்னும் கூடுதல் நிதி ஒதுக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் கீழத் தூவலில் ஒரு புதிய உயர் நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள பல சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப் படாமல் இருக்கின்றன. இப்போது சாலைகள் எல்லாம், போக்கு வரத்திற்கு லாயக்கற்ற முறையில் உள்ளன. குண்டும், குழியமாக உள்ளன. இப்போது ஒதுக்கி இருக்கின்ற பணம் 3.05 கோடி ரூபாய். இது சாலைகளில் உள்ள குண்டு குழிகளைத் தான் மூடுவதற்குப் போதுமானதே தவிர, சாலைகளை முழுவதுமாக மராமத்து செய்ய முடியாது. எனவே, சாலை பராமரிப்பிற்கு அதிகம் நிதி ஒதுக்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராமச்சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. நீண்ட காலமாக மராமத்தே செய்யாமல் இருக்கின்றன. கிராமச் சாலைகள் எல்லாம் நடைபாதையாக மாறும் சூழ்நிலையில் உள்ளன. எனவே, அதற்காக ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து கிராமச் சாலைகளை எல்லாம் மராமத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். சாலைகளே இல்லாத கிராமங்கள் கமுதி பகுதியில் உள்ளன. அவைகளுக்கெல்லாம் புதிய சாலைகள் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. கே. முத்து வேல்]

எனது தொகுதியில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை எடுக்காத காரணத்தால். . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிக் குற்றச் சாட்டாகச் சொல்லாமல் உறுப்பினர்கள் பேச வேண்டும்.

***திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் எனது தொகுதியாகிய முதுகுளத்தூர் தொகுதி கமுதி அருகே ஊசம்பொட்டல் கருசல்குளம் கிராமத்தில் கடந்த 18-ம் தேதி நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவமும் அதற்கு முந்திய தினங்களில் நடந்த கொலை மற்றும் மோதல்கள் பற்றிய ஒருசில தகவல்களையும் கூற விழைகிறேன்.

கடந்த 11 ஆம் தேதி காலையில் இந்த ஊரில் இரண்டு கோஷ்டிகளுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டு இருந்திருக்கிறது. அதில் இரு தரப்பிலும் சிலர் காயம் அடைந்து இருக்கிறார்கள். இந்த மோதலுக்கு அடுத்து நான் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் காவல் துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, துரித நடவடிக்கை எடுக்கும்படி கூறியும் பெயரளவில் போலீஸ் பாதுகாப்பும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தன.

இந்தத் சூழ்நிலையில்தான் அன்று 11-ந் தேதி இரவே கிடாத்திருக்கையைச் சேர்ந்த ராமசாமி என்பவர் கொலை செய்யப்பட்டு கரிசல்குளத்திற்குச் செல்லுகின்ற சாலையிலே அந்த பிணம் கேட்பாரற்றுக் கிடந்திருக்கிறது. காலை 9 மணிக்குத்தான் போலீஸாருக்கே தெரிய வந்திருக்கிறது.

இதை இங்கே நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், காலையிலே கலவரம்; அன்று இரவே கொலை. அதன்பிறகாவது சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து போலீஸ் தனது நடவடிக் கைகளைத் துரிதமாக முடுக்கி விட்டிருக்கலாம். பந்தோபஸ்தை அதிகரிக்கச் செய்திருக்கலாம். போடப்பட்டிருந்த பந்தோ பஸ்தும் ஏனோதானோவாகத்தான் இருந்திருக்கிறது.

போலீசாரின் மெத்தனப் போக்கினால்தான் 18 ஆம் தேதி காலையில் திடீரென்று ஒரு கோஷ்டியினர் கலவரத்தில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள்; வீடுகளை சேதப்படுத்தியிருக்கிறார்கள்;

வைக்கோல் போர்களுக்குத் தீ வைத்தும் இருக்கிறார்கள். ஆகவே தான், அப்போது இருந்த ஒருசில போலீசாரால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் துப்பாக்கி சூடு நடத்தியிருக்கிறார்கள். அதிகமான ஆயுத போலீசார் பாதுகாப்புக்குப் போட்டு இருந்தால் கலவரம் ஏற்பட்டிருக்காது. துப்பாக்கிச் சூடும் நடந்திருக்காது. துப்பாக்கிச் சூட்டில் கிடாத்திருக்கையைச் சேர்ந்த முனியசாமி இறந்தும், மேலும் சிலர் காயம் அடைந்தும் இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

**திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எனவே, துப்பாக்கிச் சூடு நடந்ததற்குக் காரணம் அந்தப் பகுதியில் உள்ள போலீஸ் அதிகாரிகளுடைய மெத்தனைப் போக்குதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் 22 ஆம் தேதி ஊசம்பொட்டல் கரிசல்குளம் கிராமத்திற்குச் சென்று உடைந்து கிடக்கும் வீடுகளையும், தீப்பற்றி எரிந்த வைக்கோல் போர்களையும், துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தையும் பார்வையிட்டேன். கலவரம் நடந்திருக்கும் விதத்தைப் பார்க்கும்போது நெஞ்சம் பதறத்தான் செய்கின்றது. ஊரில், 40, 50 பெண்களேதான் இருந்தனர். ஆனால் யாரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள பயந்து நடை பிணங்களைப் போல உள்ளனர். இன்னும் போலீஸ் பந்தோபஸ்து ஊசம் பொட்டல் ஓ. கரிசல் குளத்தில் அதிக அளவில் இல்லை. எனவே சில மாதங்களுக்கு அதிக அளவில் பந்தோஸ்து ஏற்படுத்தி ஓ. கரிசல் குளத்தை விட்டு பயந்து ஓடிப் போயிருக்கும் நபர்களுக்கு உயிர்மீதும் உடமைகள்மீதும் பாதுகப்பு உத்தரவாதம் இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படுத்தி, அவர்கள் திரும்பவும் தங்கள் கிராமத்திற்கு வந்து நிலையாக இருந்து மாமூல் வாழ்க்கையைத் தொடங்கிட ஆவன செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்த் தங்கள் மூலம் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).



மேலும், துப்பாக்கிச்சூடு குறித்து, மாவட்ட நீதிபதியை நியமித்து நீதி விசாரணை முறையாக நடத்தவும் கிடைக்கும் உண்மைகளை வெளியிடவும் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கவும் கலவரத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கும், அவர்களுடைய உடமைகளுக்கும் நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கொள்கிறேன். மேலும் இந்த மெத்தனப் போக்கிற்குக் காரணமாக இருந்த அந்தப் பகுதி உயர் போலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பூ. மு. நரசிம்மன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தாக்கல் செய்த 1986—87-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினை நல்கியதற்கு முதலில் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையின் வாயிலாக, கிராமப் புறத்தில் இருக்கிற ஏழை, எளிய நடுத்தர மக்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள்.

(சில உறுப்பினர்கள் வெளியே சென்று கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசும்பொழுது மட்டும் உறுப்பினர்கள் 1 நிமிடம், 2 நிமிடம் கூட வேண்டுமென்று கேட்கிறார்கள். தலைமை, கொஞ்ச நேரம் அவையின் நேரத்தை நீடித்தால், எழுந்து வெளியே செல்கிறார்கள், எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. பூ. மு. நரசிம்மன்:** நிதிநிலை அறிக்கையின் வாயிலாக, இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவர் அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களை எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

இன்றைக்குத் தமிழக மக்களும் தமிழக அரசும் எதிர் நோக்கி யிருக்கிற பிரச்னை, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுடைய பிரச்னையாக இருக்கிறது. இலங்கையிலே வாழ்கின்ற தமிழர் களுடைய உயிருக்கும் உடமைக்கும் இன்றைக்குப் பாதுகாப்பு

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1986 மார்ச் 26

இல்லாமல் **இருக்கிறது**. இந்தியப் [illegible] அவர்கள் அரசியல் முறையில் தீர்வு காண முயன்றாலும், இதற்கு ஒரு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தமட்டில், இலங்கையிலே வாழ்ந்து இங்கு வந்துள்ள தமிழர்களுக்காக, பல்வேறு துயர் துடைப்புப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ரூ. 45 கோடி அளவுக்கு, இலங்கைத் தமிழர்களுக்காக இந்த அரசு செலவிட்டிருக்கிறது என்றால், எந்த அளவிற்கு தமிழர்கள்மீது பற்றுதலை புரட்சித் தலைவர் அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகாலமாக தமிழகம் வறட்சியாலும் பெரு வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் ஒரு புறம் பெரு வெள்ளத்தாலே பொருளிழப்பும் உயிரிழப்பும் பெரும் அளவிலே ஏற்பட்டிருக்கிறது. மற்றொரு புறம் மழை இல்லாததாலும் நீர்வளம் குன்றிவிட்டதாலும் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தாலும் உணவு உற்பத்தியில் நாம் உரிய அளவுக்கு வெற்றியைக் கண்டிருக்கிறோம். இதற்குக் காரணம் தமிழக அரசும் வேளாண் பெருங்குடி மக்களும்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், பல இடங்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் இந்த அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டதன் காரணமாக பல்வேறு சாலைகள் செப்பனிடப்பட்டிருக்கின்றன. என்னுடைய பள்ளிப்பட்டுத் தொகுதி வெள்ளத்தால் பல இடங்களில் பாதிக்கப்பட்டிருந்தாலும் அந்தச் சாலைகள் எல்லாம் விரைவாக செப்பனிடப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதகமான பருவ நிலைகளின் காரணமாக இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், நியாயமான அளவுக்கு உற்பத்தி நிலை இருந்து வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 92 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயரும் என



1986 மார்ச் 26] [திரு. பூ. மு. நரசிம்மன்]

எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை, அரிசி போன்ற உணவுப் பொருள்களின் விலை சற்று கூடுதலாக ஆன நிலையிலும், அவற்றைப் பொது விநியோகத்தின் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில் இந்த அரசு அரிசி, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பண்டங்களின விலையைக் குறைத்திருக்கிறது. அதன் வாயிலாக இந்த அரசுக்கு ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு இருக்கிறது. இருந்தபோதிலும் அதை ஏற்றுக் கொண்டு பொது மக்கள் நன்மையைக் கருதி, இப்படிப்பட்ட சிறப்பான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்கள் எல்லாம் உணர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**சமுதாயத்**தில் நலிந்த பிரிவினருக்குப் பயன் விளைவிக்கின்ற இருபது அம்சத் திட்டத்தினை இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நல்லமுறையிலே, சிறப்பான முறையிலே நிறைவேற்றி வருகிறார்கள். பாசன வளத்தைப் பெருக்குதல், கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம், உபரி நிலங்களைக் கையகப்படுத்தி வழங்கல், ஏழையர்க்கு வீட்டுமனை வழங்குதல், சிற்றூர்ப் புறங்களில் மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், கரிம வாயு உற்பத்தி செய்தல், மரம் நடுதல், முதியோர் கல்வி வழங்குதல் போன்ற அம்சங்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளில் 75 விழுக்காட்டிற்குமேல் எய்தப்பட்டு விட்டன. 1986 மார்ச் திங்கள் இறுதிக்குள் எல்லா இலக்குகளையும் எதிர் பார்க்கும் அளவுக்கு முடித்திட முடியும் என்ற அளவுக்கு இந்த அரசு செயல்படுவதை நான் பாராட்டுகிறேன்.

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் சிறப்பான திட்டங்களாக இன்றைக்கு ஊரகத் தன்னிறைவுத் திட்டம், முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டம், எட்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ மாணவியர்க்கு சீருடைகளும் பாட நூல்களும் இலவசமாக வழங்கும் திட்டம் ஆகிய நல்ல திட்டங்கள் எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றிருக்கின்றன.

[திரு. பூ. மு. நரசிம்மன்] [1986 மார்ச் 26

ஆதி திராவிடர், பழங்குடியினர், நரிக் குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோர்க்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தை நான்கு, ஐந்து வகைகளில் செயல்படுத்த நமது அரசு திட்டமிட்டு வருவதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய பள்ளிப்பட்டுத் தொகுதியில் வி.பி.ஆர். புரம் ஆதிதிராவிடர் காலனி ஒன்று இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 500 குடும்பங்கள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக இந்தக் காலனியில் இருப்பவர்கள் வீட்டுமனைகள் வேண்டுமென்று கேட்டு அரசுக்கு மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலனிக்கு அருகில் நஞ்சை நிலம் இருக்கிறது. ஆனால் அந்த நஞ்சை நிலத்தில் பயிரிட செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த நஞ்சை நிலத்தை வீட்டுமனைக்குக் கொடுக்க, அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் தாங்களாகவே முன்வந்து வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இருந்தாலும் நஞ்சை நிலத்தை வீட்டுமனைக்கு ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்று அரசு ஆணை இருக்கின்ற காரணத்தால் ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. ஆகவே, இதற்கு விலக்கு அளித்து, அந்த நஞ்சை நிலத்தை ஆர்ஜிதம் செய்து, ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அளிக்க வேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வீரமங்கலம் காலனிக்கும் வீட்டுமனை வசதியை உருவாக்கி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போன்று எஸ்தர் கிராமத்தில் இருக்கிற ஆதி திராவிட காலனிக்கு பாதை வசதி இல்லை. அந்தக் கிராமத்திலிருந்து மற்றக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் பாதை வசதி இல்லை. எனவே, அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அந்தக் காலனிக்கு பாதை வசதியை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. பூ. மு. நரசிம்மன்]

(பிற்பகல் 1-40)

முதற்கட்டமாக இந்த வரவு—செலவுத் திட்டத்தில் ஆதி திராவிடர் நலனுக்கென்று 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக நமது அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோன்று ஊரக குடிநீர் வழங்கும் திட்டங் களுக்கான ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. 1986—87 ஆம் ஆண்டில் 45 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கின்றது. இதிலே கிராமப்புறங்களிலே நீர்த்தேக்கத் தொட்டிகளை உருவாக்குவதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. ஒருசில கிராமங்களைப் பொறுத்தவரையில் 6 ஆம் நிலையிலே ஒதுக்கி விட்டிருக்கிறார்கள். ஒரு கிராமத்திற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டவேண்டும் என்றால் அது மூன்றாம் நிலையிலே இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே அவ்வாறு மூன்றாம் நிலைக்குக் கொண்டுவருவதற்குரிய வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து எல்லா கிராமங்களுக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. எம். சண்முகையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை முதற்கண் வாழ்த்தி வரவேற்கிறேன். எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் நல்லாசியோடு இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து இந்த அவைக்கு கொண்டு வந்த மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

ஏழை எளியவர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிற மக்களுக்கும், குடிசையிலே வாழ்கிறவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் கிடைக்க இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப் பட்டுள்ளதைப் பாராட்டி நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

நம்முடைய அரசு 1987 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து மதுவிலக்கைக் கொண்டுவருவது தமிழகத்தில் வாழ்கிற அத்தனை தாய்க்குல மக்களுக்கும் இனிப்பான நல்ல செய்தியாகும். அதை நானும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கின்ற அனைத்து மக்களும் போற்றிப் புகழ்கிற வகையில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் இன்று சீரோடும், சிறப்போடும் நடக்க அதனைத் தனி வாரியமாக அமைத்து அதை முழுக்க, முழுக்க தாய்க்குலத்தைச் சேர்ந்த அலுவலர்களிடமே ஒப்படைத்து விட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பாதம் பணிந்து நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு 20 அம்சத் திட்டத்தை விரைந்து செயல் படுத்துவதன் மூலம் வீடு இல்லாவதர் என்று இங்கே இல்லை என்ற நிலைமையை உருவாக்கக்கூடிய முயற்சிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 20 அம்சத் திட்டத்தை முனைந்து செயல் படுத்துவதில் தமிழகம்தான் முன்னிலையில் இருக்கிறது என்பதை நினைக்கும்போது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது.

கிராமப்புறங்களில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய ஏழை எளிய மக்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் இந்த அரசு செய்த சேவைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அனைத்து குக்கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போடப்பட வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை அரிசன மக்கள் பயனடையும் வகையில் கறவை மாடுகள் முதலியவற்றை வாங்க பணம் கொடுத்து உதவுகிறோம். மேலும் ஏழை அரிசன மக்களுக்கு குடியிருப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



சுகாதார நிலையங்கள் அமைத்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் போன்ற வசதிகளைக் கருணை உள்ளத்தோடு இந்த அரசு செய்து கொடுக்கின்றது. அந்த வகையில் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளியவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். காவல் துறையினர் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதைப் பொறுத்த வரையில் அரசியல் வாதிகளின் குறுக்கீடு இன்றி தங்கள் கடமையில் செவ்வனே செயலாற்றுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இந்த ஆட்சியில்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க, மறைக்க முடியாது.

மின்சாரப் பற்றாக்குறையைப் பொறுத்த வரையில் இந்த அரசு மைய அரசோடு பேசி விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வானத்தைப் பார்த்து விவசாயம் செய்கிற வேளாண்மைப் பெருமக்களுக்கு நிலத்தடி நீர் பயன்படக்கூடிய வகையில் அரசு உதவி செய்ய வேண்டும் என்று மிக முக்கியமான கோரிக்கையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொய்த்துப் போன கிணறுகளை வைத்துக்கொண்டு இருக்கிற வேளாண் குடிமக்கள் கையிலே இருக்கிற பணத்தை எல்லாம் போட்டுவிட்டு வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் ஒளி காண வகை செய்ய வேண்டும். கிராமங்களில் வாழ்கின்ற வேளாண் குடிமக்கள் அனைவரும் பயன் பெறக்கூடிய வகையில் சமுதாயக் கிணறுகளை அமைத்து தண்ணீரைப் பங்கிட்டுக் கொடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டும் என்றும் இதைப் போர்க்கால நடவடிக்கையாக நினைத்துச் செயலாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மின்சார இணைப்பு கிடைக்காத நிலைமையில், இன்றைக்கு வேளாண் மக்கள் டீசல் விலையேற்றத்தாலும் மிகவும் பாதிப்பினை அடைந்திருக்கிறார்கள். நூற்றுக்கு 80 சதவீதம் விவசாயத்தையே நம்பி வாழ்கிற தமிழ் மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கருணை கூர்ந்து பாசன வசதிகளை தமிழக அரசின் மூலம் வாரியங்கள் அமைத்து தண்ணீர் கொடுத்து உதவும்படி பாதம் பணிந்துக் கேட்டுக் கொள்கிறேன். உரம், பூச்சி மருந்து போன்றவைகளின்

[திரு. எம். சண்முகையா பாண்டியன்] [1986 மார்ச் 26

விலை, ஏறிவிட்டதால், விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். மின்சார விளக்கு எரியாமல் டீசலை வைத்து என்ஜினை இயக்குகின்றவர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 4, 5 இடங்களில் விவசாய தேவை நிலையங்களை அமைத்து விவசாயிகளுக்கு அனைத்து உதவிகளையும் செய்தாக வேண்டும்.

ஆயில் என்ஜின், மற்றும் எலக்ட்ரிக் மோட்டார்கள் பழுது அடைந்து விட்டால், உடனடியாக அவைகளை பழுது பார்ப்பதற்கு சேவை மையங்கள் உதவிக்கு வர வேண்டும். அவர்களுக்கு அவர்களுடைய தலைமை அலுவலகங்களோடு தொடர்பு கொள்ள வொயர் லெஸ் வசதிகளோடு, வேகமாகச் செல்ல ஜீப் வசதிகளும் கொடுக்க வேண்டும். திறமை வாய்ந்த என்ஜின் பழுது பார்ப்பவர்கள் அந்த மையங்களில் தயார் நிலையில் இருக்க வேண்டும். இவைகள் எல்லாம் விவசாயத்திற்கு மிகவும் முக்கியமான தேவையாகும். தற்சமயம் ஒரு விவசாயி படும் சிரமத்தில் ஆயில் என்ஜின்களை பழுதுபார்க்க வேண்டும் என்றால் பல நாட்கள் ஆகின்றன. தண்ணீர் பாய்ச்சவில்லை என்றால் முழு விளைச்சலே பாழ்பட்டு விடும். பயிர் வகைகளும் மனிதர்களைப் போல உயிர் இனங்கள் தான் என்பதை இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன். எப்படி மனிதனின் உயிருக்கு அபாயமான காலத்தில் மனிதனுக்குத் தேவையான ரத்தம் செலுத்தத் தரப்படுகிறதோ அதுபோன்று பயிர்களுக்கு தேவையான காலத்தில், உரிய காலத்தில் தண்ணீர் பாய்ச்சியாக வேண்டும். முக்கியமான காலக் கட்டத்தில் எலக்ட்ரிக் மோட்டார் ரிப்பேர் ஆகிவிட்டாலோ அல்லது ஆயில் என்ஜின் பழுதுபட்டு விட்டாலோ, அந்த வேளாண் குடிமகன் என்ன செய்ய முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

இவைகளை நன்றாக சிந்தித்து செயல்படுத்தினால் உலகம் உள்ள அளவும் நம்மை, நம் அரசை பாராட்டுவார்கள் விவசாயிகள் என்று கூறிக்கொண்டு, இந்த நல்ல காரியத்தைச் செய்வதற்கு எவ்வளவு செலவு ஆனாலும் சரி என்று செலவழிக்க முன்வருவதோடு தமிழக விவசாயப் பெருமக்களுக்கு இந்த நல்ல செய்தியை அறிவிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் இதய



1986 மார்ச் 26] [திரு. எம். சண்முகையா பாண்டியன்]

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை பாதம் தொட்டு வேண்டி, மேல் கூறிய தேவைகளை அவசியம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**திரு. டி. எம். வெங்கடாசலம்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மூலம் கொண்டு வரப்பட்ட 1986-87 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கியதற்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு பட்ஜெட் என்று சொன்னால், அது மாநில அரசானாலும் சரி, மத்திய அரசானாலும் சரி, பட்ஜெட் வருவதற்கு முன்பாக மக்கள் எந்த வரியைப் போட்டு எப்படியெல்லாம் துன்புறுத்துவார்களோ என்ற ஐயப்பாட்டோடு, அச்சப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிற காலத்திலே தமிழக அரசு, புரட்சித் தலைவர் அவர்களின் நல் ஆட்சியில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கு எந்தவித வரியையும் கூடுதலாக போடாமல், தமிழக மக்களுக்கு எந்தவித பிரச்னையையும் உருவாக்காமல் நுகர்வோர்களுக்கெல்லாம் எந்த அளவுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து, தமிழக மக்கள் அனைவரும் வரவேற்கும் நிலையிலே இன்றைக்கு இந்த பட்ஜெட் வந்திருக்கிறது என்று சொன்னால் உண்மையிலேயே தமிழகத்திலே இருக்கிற லட்சோபலட்சம் ஏழை எளிய மக்கள் எல்லாம், இதைப் பாராட்டுகின்ற நிலைமையிலேயே இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக இயற்கைச் சீற்றத்தின் காரணமாக பல்வேறு கொடுமைகளுக்கு உட்பட்டிருக்கிற சூழ்நிலையில் கூட இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமையில் இந்த பட்ஜெட் வந்திருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே அதைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட இயற்கைச் சீற்றம்—ஒன்று அது வெள்ளத்தின் பாதிப்பாக இருக்கிறது இல்லை என்று சொன்னால் வறட்சியினுடைய கொடுமையாக இருக்கிறது என்பதை தமிழகத்திலே இருக்கிற அனைவரும் உணர்கிற நேரத்திலே,

[திரு. டி. எம். வெங்கடாசலம்] [1986 மார்ச் 26

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வறட்சி என்று சொன்னால் உண்மையிலேயே மிகவும் அதிகமாக இருக்கிற சூழ்நிலையை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

காரணம் வறட்சி ஆரம்பிக்கின்ற போதே குடிதண்ணீர் இல்லை என்கிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதேபோல இங்கே இருக்கிற கால்நடைகளுக்கெல்லாம் குடிதண்ணீர் இல்லாமல் பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாகியிருக்கின்றன என்பதை நான் சொல்லியாக வேண்டும். ஏனென்று சொன்னால் இப்போதே அதற்கு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால்தான், கடுமையான வறட்சி காலத்திலே அதற்கு ஒரு நியாயமான முடிவு கிடைத்து, அங்கே வாழ்கின்ற மக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிதண்ணீர் பிரச்னை ஏற்படாத சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்திற்காகத்தான் நான் இங்கே சொல்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் பல்வேறு மாவட்டங்களுக்கு தண்ணீர் பிரச்னையை போக்குகின்ற காவிரி ஆறு, தர்மபுரி மாவட்டத்திலே தான், இந்த மாநிலத்திலே முதலிலே நுழைந்தாலும் அந்த மாவட்டத்து மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாத சூழ்நிலையில் இருந்து வருகிறது. அங்கே வறட்சியின் காரணமாக குடிதண்ணீர் பிரச்னை அதிகமாக இருக்கிற சூழ்நிலையில் இதற்கு ஒகேனக்கல்லில் நல்ல ஒரு குடிதண்ணீர் திட்டத்தை உருவாக்கி அந்தத் திட்டம் மாவட்டம் பூராவும் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்கிற வகையில் ஒரு மாஸ்டர் ஸ்கீமை அமைத்து அந்தப் பெரிய திட்டத்தின் மூலமாக அந்த மாவட்டத்தில் வாழ்கிற மக்களின் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்த்து வைக்கிற ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

என்னுடைய தொகுதியில் புதியதாக துவக்கப்பட்டுள்ள மத்தூர் ஒன்றியத்திற்கு தேவையான அலுவலகக் கட்டடங்களையும், அங்கே வேலை செய்யக்கூடிய அலுவலர்களுக்கு தேவையான குடியிருப்புகளையும் கட்டித் தந்து அந்தப் பகுதியின் மேம்பாட்டிற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மார்ச் 26] [திரு. டி. எம். வெங்கடாசலம்]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பாதை வசதிகள் மோசமான நிலையில் இருந்து வருகின்றன. கிராம வளர்ச்சி தான் இந்த நாட்டினுடைய வளர்ச்சி என்ற அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை போட்டாலும் எங்களுடைய பகுதியில் இன்னும் சரியான முறையில் அவை செயல்படவில்லை. கல்லாவிலிருந்து-காரப்பட்டிக்குச் செல்லும் பாதையும், கிள்ளத்தூர் பாதையிலும் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல காக்கரையிலிருந்து-மாடஹள்ளி வழியாகச் செல்கிற பாதையில் நடுப்பட்டி என்ற கிராமத்தின் அருகிலும், மாடஹள்ளி என்ற கிராமத்தின் அருகிலும் பாலத்தைக் கட்டி அந்தப் பகுதியில் வாழ்கிற ஏழை எளிய விவசாய மக்களின் போக்குவரத்திற்கு வேண்டிய வசதிகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பர்கூர் அருகில் பர்கூரிலிருந்து-ஒப்பனஹாடிக்குச் செல்கிற பாதையில் ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்து மக்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைபோல காவேரிப்பட்டணத்திலிருந்து-காக்கன்கரை செல்கிற பாதை மிகவும் பழுதடைந்து இருக்கிறது. மீண்டும் தார் போட்டு அந்தப் பாதையிலே போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கவரப்பள்ளியிலிருந்து-கல்லாவிற்குச் செல்கிற பாதையையும், ஊத்தங்கரையிலிருந்து புலியூர் செல்கிற பாதையையும் பழுதுபார்த்து மீண்டும் தார் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போச்சம்பள்ளியிலிருந்து எந்தத் தாலுக்கா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றாலும் ஏறத்தாழ 15 மைல்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே அதிகாரிகளுடைய கவனம் குறைவாக இருப்பதால் தீவிரவாதிகள் அதிகமாக அந்தப் பகுதியில் உருவாகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் தாலுக்கா அலுவலகத்தை ஏற்படுத்தி, தாலுக்காவின் மையமாக அதனைச் செய்து அந்தப்

பகுதியில் இப்படி தீவிரவாதிகள் வளர்வதைத் தடுத்து அங்கே வாழ்கிற பலதரப்பட்ட மக்களும் நல்ல முறையில் அமைதியாக வாழ வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சாமல்பட்டில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்து அங்கே அந்தப் பகுதியில் வாழ்கிற பொதுமக்கள் மருத்துவ வசதிகளை பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்று இருக்கிற சூழ்நிலையில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற மத்தூர் ஒன்றியத்தில் ஒரே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் தான் இருக்கிறது. ஆகவே இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஆனங்கூர் பகுதியில் ஆரம்பித்து வைத்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அமுதம் கடைகள் என்று எடுத்துக் கொண்டால், 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை என்று இருக்கிற நிலைமையில் அங்கே மிகவும் தூரமான பகுதியாக இருக்கிற காரணத்தால், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கு ஒரு கடை என்று இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே அங்கே இருப்பவர்கள் எல்லாம் 2 மைல், 3 மைல் வந்து பொருட்களை வாங்க வேண்டியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாலை நேரங்களில் கூலி வேலை செய்கின்ற விவசாயிகள், ஏழை எளியவர்கள் எல்லாம் இதனால் மிகவும் அவதிக்கு உள்ளாகிற காரணத்தால், 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை இருக்க வேண்டும் என்று பார்க்கிற அதே நேரத்திலே, அங்கேயுள்ள தூரத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, குறைந்தபட்சம் 1 மைலுக்கு உள்ளாக ஒரு கடையை உண்டாக்குகிற ஒரு நிலைமையை ஏற்படுத்தி, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற கூலி வேலை செய்கின்ற ஏழை எளியவர்கள் மேம்பாடு அடைய உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (27—3—1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 10. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

46. மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

47. சோழன் பொறியியற் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்.)

48. சேரன் பொறியியற் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பனிரெண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ்.)

49. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (ஆங்கிலம்.)

50. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

51 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

44. தமிழ்நாடு அரசின் 1965-66, 1966-67, 1968-69, 1969-70 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது சமூக நலத் துறை சம்பந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத் தொன்றாவது அறிக்கை (தமிழ்).

45. தமிழ்நாடு அரசின் 1963-64, 1964-65, 1965-66, 1969-70 மற்றும் 1970-71 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு தனது முந்தைய நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது ஊர் வளர்ச்சித் துறை சம்மந்தமாக அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை. (தமிழ்).



## இணைப்பு

(221-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 2871(வினா என் 2788)க்கான விடையைக் காண்க.

### விவர அறிக்கை

சிறப்பு மத்திய உதவி திட்டத்தின் கீழ் (Special Central Assisstance) ஆதிதிராவிடர்கள் பொருளாதார வளர்ச்சி பெறும் பொருட்டு கூட்டு கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்ற கீழ்க்கண்ட ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

| மாவட்டம். | 1982-83ல் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒன்றியங்கள். | 1984-85ல் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒன்றியங்கள். | 1985-86க்கு தேர்ந்தெடுக்கப் பட்ட ஒன்றியங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 செங்கல்பட்டு | மீஞ்சூர் | அச்சிறுப்பாக்கம் | ஸ்ரீபெரும்புதூர் |
| 2 வடஆற்காடு | நெமிலி | செங்கம் | வந்தவாசி |
| 3 தர்மபுரி | அரூர் | பாப்பிரெட்டிபட்டி | மொராப்பூர் |
| 4 சேலம் | சேந்தமங்கலம் | தலைவாசல் | சங்கரி |
| 5 பெரியார் | வெள்ளக்கோயில் | அந்தியூர் | தாராபுரம் |
| 6 கோவை | பெரியநாயக்கன் பாளையம் | அன்னூர் | அவிநாசி |
| 7 நீலகிரி | குன்னூர் | உதகை | கோத்தகிரி |
| 8 திருச்சி | வேப்பூர் | ஜெயங்கொண்டம் | உப்பிலியாபுரம் |
| 9 தென்னார்காடு | மங்களூர் | உளுந்தூர்ப்பேட்டை | வானூர் |
| 10 தஞ்சாவூர் | கொள்ளிடம் | வலங்கைமான் | கோட்டூர் |
| 11 இராமநாதபுரம் | கமுதி | காளையார்கோவில் | இராமநாதபுரம் |
| 12 மதுரை | வேடசந்தூர் | நிலக்கோட்டை | ஆண்டிப்பட்டி |

இணைப்பு—தொடர்ச்சி.

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| 13 புதுக்கோட்டை | விராலிமலை | நரம்பக்குடி | கந்தர்வக்கோட்டை |
| 14 திருநெல்வேலி | ஒட்டப்பிடாரம் | நான்குநேரி | சங்கரன்கோவில் |
| 15 கன்னியா குமரி | அகஸ்தீஸ்வரம் | தோவாளா | கருந்தன்கோடு |

(1983-84ல் கூட்டு கிராமத் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை)

புதிதாக துவக்கப்பட்ட காமராசர், பசும்பொன் முத்துராலிங்கம் மற்றும் அண்ணா மாவட்டங்களில் தலா ஒரு ஒன்றியம் வீதம் தேர்ந்தெடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

2 இந்த சிறப்பு மத்திய உதவி தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு அறிவிக்கப்படுகிறது. அக்கழகம் சிறப்பு மத்திய உதவியின் கீழ் பெறும் தொகையை அரசு உத்தரவிற்கிணங்க மேற்படி திட்டங்களை செயல்படுத்தும் துறைக்கு மானியமாக அளிக்கிறது.

3. மேற்கண்ட ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் முக்கியமான திட்டங்களும் அவற்றை செயல்படுத்தும் துறைகளும் கீழே குறிக்கப்பட்டுள்ளன:

| துறைகள். (1) | செயல்படுத்தப்படும் திட்டங்கள். (2) | 1982–83ல் ஒப்பளிக்கப்பட்டது. (3) | 1984–85ல் ஒப்பளிக்கப்பட்டது. (4) |
|---|---|---|---|
| 1 கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம். | 1 கிராம நூற்பு நிலையம் | 70 | 80 |
| | 2 நேப்பாளித்தறி | 32 | 24 |
| | 3 காலணி மற்றும் தோல் பதனிடுதல் | 17 | .. |
| | 4 பாய் பின்னுதல் | 30 | 7 |
| | 5 பனைமரப் பொருட்கள் .. | 27 | 27 |
| | 6 கையினால் செய்த காகிதம் .. | 2 | .. |
| 2 தொழில்துறை. | 1 செங்கற் சூளை .. .. | 9 | .. |
| | 2 கயிறு பின்னுதல் .. .. | 6 | .. |
| 3 கூட்டுறவுத் துறை | 1 கல்லுடைத்தல் .. .. | 3 | 4 |
| 4 கைத்தறி மற்றும் நெசவுத்துறை. | 1 பட்டு வளர்த்தல் .. .. | 1 | 3 |
| | 2 கைத்தறி காம்ப்ளக்ஸ் .. .. | 5 | 6 |

இத்திட்டங்களின் மூலம் 1982–83ல் 97.9 நபரும் 1984–85ல் 7025 நபரும் பயன் பெற்றனர்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் 600 008 136457